59

# காவேரி

September 1944

தாரண-புரட்டாசி

559

30 SEP 1944



4-2

...idest Circulated Monthly

உயர்தரமான

# கோட்டிங்ஸ்
# ஷர்ட்டிங்ஸ்
# பனியன்கள்
# புடவைகள்
# வாயில்கள்
# பிரிண்டட் துணிகள்

★ மற்றும் சகலவிதமான துணிகள் ★
நவீன மோஸ்தரில் தேவைக்கு

## பன்ஸால் டிரேடிங் கம்பெனி

No. 2, சின்னகடைத்தெரு
தெப்பக்குளம் போஸ்ட்
திருச்சிறுப்பள்ளி.

30 SEP 1944

# இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்




குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

**ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.**

## தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

**கும்பகோணம்.**

## The Southern India Confectionery Factory

Proprietors:- V. S. & Sons,

**KUMBAKONAM.**

# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபிஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபிஸ்: மதராஸ்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 25,00,000 |
| வெளியிடப்பட்ட மூலதனம் | ரூ. | 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 18,75,000 |
| காப்பு (ரிசர்வ்) திரவியம் | ரூ. | 2,50000 |
| மொத்த வரவு சிலவுகள் | ரூ. | 2,25,00,000மேல் |

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | மாயவரம் | திருநெல்வேலி |
| அனகாபள்ளி | மதராஸ் | பாலக்காடு | திருச்சினுப்பள்ளி |
| சிதம்பரம் | மாம்பலம் | புதுக்கோட்டை | வேலூர் |
| காஞ்சீவரம் | மைலாப்பூர் | சீயாழி | விஜயபுரம் (திருவாரூர்) |
| ஈரோடு | திருவல்லிக்கேணி | தாட்பள்ளிக்கூடம் | விருதுநகர் |
| காரைக்குடி | மதுரை | தஞ்சாவூர் | விஜயநகரம் |
| | சாலூர் | பார்வதிபுரம் | |

நிர்வாக போர்டார்:

ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, C. I. E. (சேர்மென்)
,, வி. வெங்கட்ராம அய்யர், M.A.,B.L.,
,, ஆர். எஸ். எ. சங்கர அய்யர்
ஸ்ரீ ஆர். விஸ்வநாத அய்யர், B.A.,B.L.,
,, கே. சிவஸ்வாமி அய்யர்
,, எஸ். என். என். சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர்.



## ஜவுளி தினுசுகள்

:: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

# புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

# M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.
(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.



வருகிறது!
M.U.A.C's
மானசம்ரக்ஷணம்
டைரக்ஷன் :- K. சுப்ரமணியம், B.A., B.L., & C.S.V. அய்யர்
S.D. சுப்புலக்ஷ்மி
காளி N. ரத்னம்
T.R. ராமச்சந்திரன்
C.T. ராஜகாந்தம்
S.I.P
ரிலீஸ்
S.I.P
PUBLICITIES
G.H.RAO




# T.V.S. முன்னிற்கிறது!



T.V.S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷ காலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 6000 க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன. இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T. V. S. இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

**பிரதான அம்சங்கள்**

- **ஸ்டார்டிங் அதிசுலபம்:**—சிக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- **மும்முறை வடிகட்டும் வசதி:**—சுத்தமான கியாஸ். மேற்பார்வை செலவு குறைவு.
- **சமகனம்:**—டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.
- **மிகவும் நம்பிக்கையானது:**—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.
- **நேர்த்தியான தோற்றம்:**—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்ததோற்றம்.

வாங்குமுன் மாதிரிகளைப் T·V·S கியாஸ் பிளாண்ட் பாருங்கள்.

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)

**T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்**

மதுரை & சென்னை.

TVSK - 7 TM

# பொருளடக்கம்

தாரண
மலர் 4

புரட்டாசி
இதழ் 2

30 SEP 1944
MADRAS

| | | |
|---|---|---|
| யுத்தத்தின் பயனென்ன? | ... ... | 6 |
| அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் | ... ராமையா | 8 |
| பாரதி தமிழ் | ... வி. ஜி. ஸ்ரீனிவாஸன் | 12 |
| காவேரி நதியும் மின்சார உற்பத்தியும் | ... ஆர். கே விஸ்வநாதன் | 17 |
| தேமேன்னு பாவம் | ... கௌரி | 21 |
| இரு சகோதரர்கள் | ... ஹரிணி | 26 |
| தியாகியின் உள்ளம் | ... மானஸீகன் | 30 |
| இதென்ன பைத்தியக்காரத்தனம் | ... ரா. வீழிநாதன் | 36 |
| இதென்ன உலகம்! | ... கிருத்திவாஸ் | 42 |
| ஜீலிஸ் | ... ஏ. கே. பட்டுசாமி | 47 |

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப்பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.



2190 15

# காவேரி

தாரண மலர் 4 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | புரட்டாசி இதழ் 2

## யுத்தத்தின் பயனென்ன?

ஐரோப்பிய யுத்தம் எப்பொழுது முடியும்? இக் கேள்விதான் எல்லோர் வாயிலும் உள்ளது. அதற்குப் பலர் பலவிதமான விடை அளிக்கின்றனர். ஆனால் இந்த வருடத்திலேயே அது முடியக்கூடும் என்பதை யாரும் மறுதலிக்கவில்லை. ஜர்மானியர்களின் பராக்கிரம சக்தியில் மூட நம்பிக்கை வைத்திருந்தவர்கள்கூட ஜர்மன் பலம் சிதறி விட்டது, இனி நிலைமையைச் சமாளிக்க அதனால் இயலாது என்று ஏகோபித்த அபிப்பிராயம் கூறுகிறார்கள்.

யுத்தப் போக்கில் இப்புரட்சிகரமான மாறுதலை உண்டுபண்ணியது முஸலோனியின் வீழ்ச்சி, ருஷ்யாவின் எதிர்த் தாக்குதல். பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் பிரான்ஸில் இறங்க அடிகோலியது இச் சம்பவங்களே யாகும். இன்று நேசதேசப் படைகள் ஜர்மானியை அனேகமாக வளைத்துக்கொண்டுவிட்டன. எவ்வளவு மாதங்கள் ஜர்மனி இனி தலைதூக்கி நிற்க முடியும் என்பதுதான் தற்போதைய பிரச்னை. ஜர்மானியை ஆக்கிரமித்த பிறகு அதை எவ்வகையில் கூறுபோட்டுக்கொள்வது என்பதைப் பற்றியும் ருஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து இத்திரிமூர்த்திகளும் திட்டம் வகுத்து வருகிறார்களாம்.

இந்த ஐந்து வருட யுத்தத்தின் பயனாக ஏற்பட்ட பலன் என்ன? உலகத்தில் இனியாவது நிரந்தர சமாதானம் நிலவ ஹேது இருக்கிறதா?

இல்லை என்பதுதான் நமது அபிப்பிராயம். யுத்தத்தின் பயனாக உலகத்திலுள்ள தேசங்கள் அனைத்தும் அமெரிக்கா, ருஷ்யா, இங்கிலாந்து ஆகிய மூன்று வல்லரசுகளின் ஆதிக்கத்திற்குட்பட்டுத் தான் இனி வாழ முடியும் என்ற கதி ஏற்பட்டு விட்டது. ஆகாய விமான பலம் தான் பலம் என்பது இந்த யுத்தத்தில் தெளிவடைந்து விட்டது. இதன் காரணமாக இம் மூன்று தேசங்களும் உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் ஆகாய விமான தளங்களைத் தங்கள் ஆதிக்கியத்தின் கீழ் வைத்துக் கொள்ளத் திட்டம் வகுத்து வருகின்றனவாம். அதாவது, மூல தளங்களை மட்டும் அவர்கள் வைத்துக்கொள்வார்கள். உள்நாட்டு விமானப் போக்கு வரத்துக்கு மட்டும் அந்தந்த நாடுகளுக்கு வசதி இருக்கும். ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசம் போக அத்யாவசியமான மத்தியப் பிரதேசங்களிலுள்ள விமான தளங்களும் அதற்கு வேண்டிய வசதியும் இம் மூன்று நாடுகளின் கையில்தான் இருக்கும். இதன் காரணமாக எந்த நாடும் இத்திரிமூர்த்திகளுக்கு விரோதமாக எதையும் செய்ய முடியாது.

சுதந்திரத்தை உலகத்தில் நிலைநாட்டுவதற்காகத் தொடரப்பட்ட இந்த யுத்தத்தின் பயனாக என்ன ஏற்பட்டிருக்கிறது என்று பார்ப்போம்? சுதந்திரமிழந்து நெடுநாளாக அவதிப்படும் நாடுகளுக்கு ஏதேனும் விமோசன முண்டா? இந்தியாவை எடுத்துக் கொள்வோம். அதன் சுதந்திரத்தை மீட்டுக் கொடுக்க அமெரிக்காவுக்குப் பூரண ஆசையிருக்கிறதாம். ஆனால் பிரிட்டிஷாரை வற்புறுத்த அதிகார மில்லையாம். பிரிட்டன் சமாதானத்தின்மேல் சமாதானம் சொல்லி வருகிறது. இந்தியர்களுக்குள் ஒற்றுமையில்லை, ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லை, எனவே சுதந்திர மளித்தால் நாட்டில் குழப்பம் ஏற்படுவது திண்ணம், இது உலக சமாதானத்திற்கு விரோதம், எனவே சுதந்திரத்திற்கு இந்தியர்கள் பக்குவ மடையவில்லை என்று முடிவுகட்டி விட்டார்கள். இது வெறும் பிரசாரம் என்பதை அமெரிக்கர்கள் அறிந்தும் இப் பிரச்னையில் தலையிட அவர்களுக்கு மனமில்லை. இந்தியாவில் வியாபாரம் செய்ய வசதி அவர்களுக்குக் கிட்டுமானால் வேறு ஒன்றும் அவர்களுக்குக் கவலையில்லை. இதற்குவேண்டியவசதியைப் பிரிட்டிஷாருடன் சேர்ந்து தேடிக்கொள்ளுவார்கள் என்பது திண்ணம்.

பஸிபிக் சமுத்திரத்தை அடுத்துள்ள மற்றத் தேசங்களுக்கெல்லாம் சுதந்திரம் கொடுப்பது விஷமளிப்பதுபோல் என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள் போலும்! அவையெல்லாம் இவ் வல்லரசுகளுக்கு அடிமையாக உழைத்து வரவேண்டியது கடமை என முடிவு கட்டியாய்விட்டது. ஏன்? அங்குள்ள மக்கள் வாயில்லா ஜீவன்கள்.

சைனாவை முன்னுக்குக் கொண்டுவருவதில் அமெரிக்காவுக்கு நிரம்ப சிரத்தை. இந்தியாவைக் காட்டிலும் பெரிய தேசம் அது. ஜனத்தொகை கணக்கிலடங்காது. அவர்களை நாகரிகப் படுத்தி அவர்களுடன் உறவாடி அமெரிக்க சாமான்களை ஏராளமாக வாங்கச் செய்வதே அமெரிக்காவின் நோக்கம். அப்படிச் செய்து விட்டால் அமெரிக்க வியாபாரம் செழிப்பதற்குத் தடையென்ன? மேலும் பஸிபிக் சமுத்திரத்திலுள்ள அநேக தீவுகளில் அமெரிக்கத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் உற்பத்தியாகின்றன. ஆகையால் அவை அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழ்தான் வாழவேண்டுமென விதி.

வட ஆப்பிரிகா அமெரிக்கர்கள் புதிதாகப் புகுந்துள்ள பிரதேசம். பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் அதை 'நாகரிகப்'படுத்தப் போகிறார்களாம். ஆகையால் அம்மக்களின் சுதந்திரம் என்ற பிரச்னை எங்கு எழுவது?

பூரண சுதந்திரத்துடனிருந்த ஐரோப்பிய சிறிய நாடுகளனைத்தும் இனி ரஷ்யா, அமெரிக்கா இங்கிலாந்து இவைகளின் ஆதிக்கத்திற்குட்பட்டு நடிக்க வேண்டி வரும். பல நாடுகள் உருக்குலைந்து தவிக்க நேரிடும். ஜர்மனியைப் பற்றிக் கேட்க வேண்டுவதில்லை, அதன் மக்களுக்கு இனி என்றும் சுதந்திரதாகமெடுக்காமல் செய்துவிடப் போகிறார்களாம்.

ஆக, உலகத்தில் சுதந்திரத்தை நிலை நாட்ட என்று அதி தீவிரமாகச் செய்யப்பட்ட இந்த யுத்தத்தின் பலனாக மூன்று வல்லரசுகளின் ஆதிக்கத்தின்கீழ் உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் மக்களும் உயிர்வாழ வேண்டும் என்பது ஏற்பட்டுவிட்டது. சுதந்திரம் என்ற பதத்திற்கு வேறு அர்த்தம் கற்பிக்கப்படுமோ என ஐயமுறுகிறோம். அந்தோ பரிதாபம்!


## லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

[ஹெட் ஆபீஸ்: லாகூர்]

**நம்பிக்கையூட்டும் புள்ளி விவரங்கள்**

எங்கள் வியாபாரத்தை விரிவுபடுத்தும் திட்டசம்பந்தமான விசாரணைகள் வரவேற்கப்படும்.

★

விவரங்களுக்கு எழுதவும்:-

பிராஞ் மானேஜர்
4/105, அரமனைக்காரத்தெரு,
ஜி. டி. மதராஸ்.

**1943-ல புதிய பாலிஸிகள் 2 கோடி 20 லக்ஷத்திற்குமேல்**

**முன் வருஷத்தைவிட கிட்டத்தட்ட (1 கோடி ரூபாய் அதிகம்)**

அமுலிலுள்ள பாலிஸிகள் $10\frac{1}{4}$ கோடிக்குமேல்
மொத்த ஆஸ்தி $2\frac{1}{2}$ ,,
ஆயுள் நிதி $2\frac{1}{3}$ ,,

இந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்

சென்னைக் கிளை ஆபீஸின்
விலாஸ மாற்றத்தைக் கவனியுங்கள்

*C. R.* சேஷன், *M. A.*,
பிராஞ்ச் மானேஜர், மதராஸ்.

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

இந்த மலரில் 'தாசி அபரஞ்சி' என்னும் பேசும் படத்தைப்பற்றி எழுதத் துணிகிறேன். துணிச்சல் எதற்கு எனக் கேட்பீர்களோ? வேறொன்றுக்குமில்லை, அம்மாஞ்சியின் அபிப்பிராயங்களுடன் என் அபிப்பிராயங்களையும் சிறிது எழுத நேரிடும், அதற்காகத்தான். அம்மாஞ்சி துணிந்தவன், தைரியசாலி, சமர்த்தன், விஷயம்தெரிந்தவன், அனுபவமுள்ளவன். நான் வெறும் ஆள். நாடோடி. ஆனால் ஒரு சங்கதி சொல்லுவேன். சமர்த்தர்களும், விஷயம் தெரிந்த ஆட்களும் ஆராய்ச்சியில் இறங்கிவிடுவார்கள். நாடோடிகளோ அப்படி யல்ல. மனதிலுள்ள விஷயங்களைப் பட்டவர்த்தனமாகவும் கஞ்சி வழிந்த மாதிரியும்சொல்லிவிடுவார்கள். இந்த ரகத்தில் சேர்ந்தவன்நான்!

உதாரணமாக; "இந்தப் படத்தின் கதையைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன" என்று அம்மாஞ்சியைக் கேட்டதற்கு அவன் பதில் சொன்னான்: "கதையா? கதை வேடிக்கையாகத்தானிருக்கிறது! ஆனால் படத்தைப் பார்த்தபிறகு,கதையைச் சொல்லச்சொன்னால் எப்படி ஆரம்பிப்பேன் தெரியுமா? ஒரே ஒரு ஊரிலே, அபரஞ்சி என்று ஒரு தாசியிருந்தாளாம். அவள் இருந்த ஊரிலே விக்கிரமாதித்தியன் என்று ஒரு ராஜா இருந்தானாம். எப்படி?"

நான்: "அதென்ன, அப்படித் திருப்பிவிட்டாயே? சாதாரணமாகக் கதைகளில் ராஜாவை முன்னால் சொல்லி, அவன் நாட்டிலே இருந்த பிரஜையைப்பற்றிச் சொல்லுவது முறை. நீ சொல்லும் முறையிலே தாசியை முன்னாலே சொல்லிப் பிரபலமான சோழ வம்சத்து அரசனான விக்கிரமாதித்தியனைப் பின்னே சொல்லுகிறாயே"—

அம்மாஞ்சி: "நான் என்ன செய்வது? படத்தில் பார்த்த பிறகு பிரதானமான அந்தஸ்து தாசிக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. என்று என்தோற்றம். படத்தின் பெயர் தாசி அபரஞ்சி என்று வைத்திருப்பது சரிதான். அவளுடைய பிரதாபமே கதைக்கு முக்கிய சரடாகவும் இருக்கலாம். ஆனால் விக்கிரமாதித்தியனுடைய மேன்மையைக் குறித்து ஒரு ஆயிரம் அடி கூட்டியிருக்கலாம், அபரஞ்சியின் தாழ்மையையும் அவளுடைய சிப்பந்திகளின் தாழ்மையையும் குறித்து ஒரு ஆயிரம் அடி கழித்திருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது."

நான்: சரி, பிறகு சொல்வதைச் சொல், கேட்போம்.

அம்: மேலே சொல்லட்டுமா? கேள்! நான் மிகவும் அதிர்ஷ்டசாலி—நீ எனக்கு அத்தான் முறையிலிருந்து, அம்மாஞ்சி என்று வைத்த பேரினால், சகலரும் என்னை 'அம்மாஞ்சி' என்றே அழைக்கிறார்கள். என் தமக்கைகளின் குழந்தைகள்கூட என்னை "மாமா" என்றழைக்காமல், "அம்மாஞ்சி" என்றே கூப்பிடுகிறார்கள். இந்தப் பாக்கியம் எனக்குக் கிடைத்ததற்கு நீயே காரணபூதன். ஆதலால் உனக்கு நான் என்றும் நன்றி செலுத்தவேண்டும்.

நான்: நீ சொல்வது சிறிது நுட்பமாக இருக்கிறது. எனக்கு விளங்கவில்லை. மாமா என்றால் என்ன நிஷித்தம், அம்மாஞ்சியென்றால் என்ன சிரேஷ்டம்?

அம்: தாசி அபரஞ்சி என்ற படத்தில் "மாமா" வானவர் செய்யும் சேஷ்டைகளைப் பார்த்தபின், என் சொந்த மருமகன், மருமக்கள் கூட என்னை "மாமா" என்று அழைத்தால் நான் என் பூணூலைக் கழற்றி எறிந்துவிட்டுக் கூறாமல் சன்னியாசம் வாங்கிக்கொண்டு விடுவேன். அடேயப்பா! அந்த 'மாமா' படுத்துகிற பாட்டில், என்னைத் தெரியாத சிசுகள் யாராவது 'மாமா' என்று என்னைக் கூப்பிட்டுவிட்டால், என்ன செய்வது என்கிற கிலி என்னைப் பிடிக்கிறது! பந்துவர்க்க முறையில் 'மாமா' முறை மிகவும் சிரேஷ்டமானது என்பார்கள்—லௌகிகத்திலும் வைதிகத்திலும் மாமாவுக்குச் சுதந்தரங்கள் அநேகம் உண்டென்பார்கள்—கலியாணங்களில் தோள் தூக்கவும் மாலைமாற்றவும் ஊர்வலத்தில் பிரதானபுருஷனாகச் சட்டம் செலுத்தவும் மாமாவுக்கே உரிமை எனவும் கொள்கை. தாசி அபரஞ்சி படம் பார்த்தபிறகு எனக்கும் மருமகன்கள் மருமக்கள்கள் உண்டு என்றும், நானும் சிலருக்கு 'மாமா'வாக இருக்கிறேன் என்றும்சொல்லிக்கொள்ளவும் நடுங்கவேண்டியிருக்கிறது! நம்மாத்துக் குழந்தைகளுக்கெல்லாம் இனிமேல் தமிழில் 'மாமா' என்ற வார்த்தையை மறந்து, மலையாளத்தில் "அம்மாவன்" என்ற வார்த்தையைக் கையாள வேண்டும் என்று சொல்லிக்கொடுக்கவேண்டியது என்று எனக்குத் தோன்றுகிறது. என்ன, உன் யோசனை?

நான்: என்றைக்கும் உன் வழக்குக் கோண வழக்காகத்தான் இருக்கிறது. ஆனால் உனக்கு உண்டான யோசனைபோல் எனக்கும் ஒரு யோசனை உண்டாயிருக்கிறது.

அம்; அது என்ன, சொல் கேட்போம்.

நான்: வேறொன்றுமில்லை. அந்தப் படத்தில் கோயில் குருக்கள் ஒரு பிராமணன் அகப்பட்டுக்கொண்டு சாகிறாரே அதைப் பார்த்துத்தான் மிகவும் பரிதாபமாயிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டுப் படங்களில் ஒவ்வொன்றிலும், ஒரு புரோகிதரோ அல்லது குருக்களோ ஒரு பிராமணன் விபரீத ஒழுக்கங்களைக் கைப்பற்றி ஆசாரம் ஒன்று விவகாரம் மற்றொன்றாக நடந்துகொள்ளுகிறார்களே அது யாருடைய திருப்திக்காக? சுயமரியாதைக்காரர்களுடைய குதூகலத்திற்காகவா? அல்லது நாஸ்திகர்களுடைய சந்துஷ்டிக்காகவா? தாசி வேசித்தனமாக நடித்திருப்பது சரி. ராஜா அரசன் மாதிரி நடித்திருப்பதும் சரி. போலி அரசனின் நடிப்பும் சரி. மந்திரி சுமந்திரியாக நடித்துவருகிறான், அதுவும் சரி, நடிகர்கள் அனைவரும் தத்தம் ஒழுக்கங்களைச் சரிவரக் காட்டுகின்றனர். செட்டியாரின் புதல்வன் செல்வாக்கின் செருக்கினாலும் சபல புத்தியினாலும் கெட்டுக் குட்டிச்சுவராகக் காணுகிறான், அதுவும் சகஜமாக நடக்கக் கூடிய சம்பவம் எனலாம்! கோவில் குருக்கள் மாத்திரம் ஒழுக்கம் தவறி நடிப்பதேன்—இங்கிலிஷ் படங்களில் இதுபோல் காணோமே! மனித சுபாவம் எல்லா நாடுகளிலும் சற்றேறக் குறைய ஒரே மாதிரிதான் என்பார்! நம்முடைய குருக்கள்களிலும் புரோஹிதர்களிலும் எத்தனை அசந்தர்ப்பங்களுண்டோ அத்தனை அசந்தர்ப்பங்கள் இங்கிலிஷ் பேசும் நாடுகளிலும் பாதிரிமார்களில் உண்டு. ஆனால் இங்கிலிஷ் படங்களில் ஒவ்வொன்றிலும் வைதிக தெய்விக காரியங்களில் ஈடுபட்டிருப்பவர்களைக் குழியில் இறக்கித் துகைக்கவில்லையே! நம் நாட்டு வாயில்லாப் பூச்சிகளுக்கு மாத்திரம் என் இந்த அபகீர்த்தி என்றுதான் எனக்கு விளங்கவில்லை.

அம்: அடேயப்பா! நீ என் இதைப்பற்றிக் கவலைப்படுகிறாய்? இதுதான் சகஜம். கோவில் அர்ச்சகர் ஒருவராவது இந்தப்படத்தை பார்க்க வரமாட்டார். அர்ச்சகர்கள் எல்லாருக்கும் சாயந்திரம் 5 மணிமுதல் நிசிராத்திரி வரையில் ஜோலி சரியாக இருக்கும்—ஆதலால் அவர்களைக் குறித்துப்படத்தில் ஏளனமாக எழுதினால் ஒன்றும் சிரமம் இருக்காது—ஹாஸ்யத்துக்கு ஹாஸ்யம். பார்த்தவர்கள் சிரிப்பார்கள். உயர்ந்த ஜாதிக்காரன் தாழ்மையான ஒழுக்கத்தில் ஈடுபட்டு நடிப்பதைப் பார்த்தால் நகைப்புக்கு வெகு குஷிதானே!

நான்: இவ்வளவு இலகுவாக நீ பதில் சொல்லிவிட்டாய்—ஆனால் சினிமா படத்தைப் பார்த்துவிட்டு வெளியேபோகும்கூட்டத்தினரில்


அடியாத மாடு படியாது




ஆனால் ●
படியாத ●
கேசத்திற்கு
?

ஜப்கோ பிரில்லியன்டைன்

பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டு போகும்போது நீ கேட்டாயானால் உன்னாலும் பதில்சொல்ல முடியாது என்பது நிச்சயம். அல்லது படம் ஓடும்போதே சிறுவர்கள் சிறுமிகள் சிலர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல உன் தாதாவாலும் முடியாது. உதாரணமாக, தாசி அபரஞ்சி படுக்கையின்மீது புரண்டுகொண்டு இருக்கும்போது செட்டியாரின் மகன் பக்கத்தில் உட்கார்ந்து அசட்டுப் பிசட்டுத்தனமாக நடிக்கிறானே, அப்பொழுது ஒரு குழந்தை "என்ன அவளுக்கு உடம்பு, வயித்திலே வலியா" என்று கேட்கிறது? நீ என்ன சொல்வாய்? அவளுக்கு வயிற்றுவலி தான் என்பாயா, உனக்கு வயிற்றுப்பிரட்டல் என்பாயா? அல்லது ஆட்டுக்குட்டியும் வேலைக்காரியும் குருக்களைத் துரத்திக்கொண்டு ஓடுகின்றனவே, அப்பொழுது ஒருசிறுமி "அவாள் எல்லாரும் ஏன் அப்படி ஓடுகிறா? எதுக்காக குருக்களைத் துறத்துகிறா" என்று கேட்டால் என்ன பதில் சொல்லுவாய்? அல்லது வயசான அசடு ஒன்று "என்ன ஸார்? அந்தமா திரிகூட ஒரு மருந்து இருக்கிறதா" என்று கேட்டால் என்னென்பாய்? பட்டவர்த்தனத்துக்கும் ஒரு அளவு இல்லையா?

அம்: நீ ஒரு பெரிய மடிசஞ்சி—உன்னைப் போன்ற ஆட்களுக்கா இந்தப்பேசும்படங்கள் தயாரிக்கிறார்கள்? உனக்கும் அல்ல, குழந்தைகளுக்கும் அல்ல, கிழவன் கிழவிகளுக்கும் அல்ல, சிறுவர் சிறுமிகளுக்கும் அல்ல-தேசாபிமானம், பாஷாபிமானம், சங்கீதாபிமானம், கள்ளம், கபடு, சூது, வாது, இவைகள் எல்லாம் இல்லாமல், படத்தில் மூளையைச்செலுத்தாமல், வெறும் ஆளாக இருக்கும் சாதுக்களுக்கல்லவோ பேசும்படங்கள் தயாரிக்கிறார்கள்—அவர்களல்லவோ படங்களுக்குச் செலவழித்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறார்கள். நீயும் நானுமோ? உன்னைப்போல் ஒருவன் $1\frac{1}{4}$ ரூபாய் கொடுத்தால், வெறும் ஆள்கள் பத்துப்பேர் பத்துப் பத்து அணுக்கள் கொடுத்துப் படத்தைப் பார்க்கிறார்கள். அவர்கள் மெச்சுவது முக்கியமா, நீ தூஷிப்பது முக்கியமா?

ஆம், அம்மாஞ்சி சொல்வது சரிதான். தமிழ் பேசும் படங்கள் நகரவாசிகளுக்கும் நாகரிகமெச்சும் மடிசஞ்சிகளுக்கும் தயாரிக்கப்படவில்லை யென்பது சரி. வெளி ஜில்லாக்களிலும் கிராமங்களிலும் உள்ள ஆட்களுக்கே தயாரிக்கப்பட்டனவென்பது தெரிகிறது. ஆதலால் நாம் இதைப் பற்றிப் பேசுவது அதிகப்பிரசங்கம், அதுபோலவே தற்காலத்தில் நடக்கும் சங்கீதக்கச்சேரிகளுக்குப் போவதும், கச்சேரிகளைப் பற்றிப் பேசுவதும் அசந்தர்ப்பம்தான். இரண்டு வாரங்களுக்கு முன் ஒருநாள் ஒரு பிரபலமான வித்வான் செய்த கச்சேரிக்குப் போயிருந்தோம். அவர் அநேக வருஷ அனுபவமுள்ளவர். ஆனாலும் அன்றைய தினம் அவர் பியாகடை ராகம்பாடி விட்டு, சற்றுநேரத்திற்கெல்லாம் தர்பார் ஆரம்பித்தார்—மேல் சஞ்சாரத்திலிருந்து




சந்தோஷமாக உத்ஸாகத்துடன் நாள் தோறும் வேலை செய்யும்.

இன்று நீ பூர்ண உத்ஸாகத்துடன் தினந்தோறும் சிலிப்பின்றி உழைத்துவரும் வாலிபன் வாழ்க்கையை நீ விரும்புவதே இதற்குக் காரணம்.

ஆனால் சுமார் 25 ஆண்டுகளுக்குப்பின்பு உன்னுடைய வாழ்க்கை எவ்வகையிலிருக்கும் என்று யோசித்தாயா?

நெருக்கடியுள்ள கடுமையான உத்யோக வாழ்க்கைக்குப் பிறகு நீ அமைதியான கவலையற்ற சுக வாழ்க்கை வேண்டுமென ஏங்குவது இயற்கையே,

**எங்களை ஆலோசனை கேட்டால் இது கைகூடும்**

**நேஷனல்**

**இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

ஃ ஃ ஃ

நெருப்பு, விபத்து மோட்டார், மற்றும் எல்லாவித இன்ஷ்யூரன்சுக்கும் சிறந்தது

**நேஷனல் பயர் & ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

**7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.**

சென்னை கிளை ஆபீஸ்:

**நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்**
362, சைனா பஜார் ரோடு,
எஸ்பிளனேடு

சப்-ஆபீஸ்கள், **பங்களூர் & மதுரை**

இறங்கவே முடியவில்லை — பியாகடைக்கே சறுக்கிக்கொண்டிருந்தது. அம்மாஞ்சியும் நானும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தோம், பக்கத்திலிருந்த நண்பர் எதற்காகச் சிரித்தோம் எனக் கேட்டார். அம்மாஞ்சி "உமக்கு விஷயத்தைச் சொன்னால் அர்த்தம் புரியாது" என்றான். அதற்கு அவர் அபரிமிதமாகக் கோபித்துக்கொண்டு எங்கள் இருவர் மீதிலும் அருவருப்பைக் காட்டினார்—என்ன செய்வது?

அம்மாஞ்சியும் நானும் நேற்றையதினம் ஒரு காப்பி ஓட்டலுக்குப் போனோம். ரவாடொமாடோ பாத் என்ற வஸ்துவை "ஆர்டர்" செய்தோம். வாயில் வைக்க வழங்கவில்லை. கரப்பாம் பூச்சி நாற்றம் வந்தது. அம்மாஞ்சியின் முகத்தைப் பார்த்தேன். அவன் என் நோக்கத்தை அறிந்தவனாகி, "பேசாமல் சாப்பிடு, பிடிக்காவிட்டால் வைத்துவிடு" என்றான். ஆனால் என் கிரஹசாரவசம் அச்சமயத்தில் பரிசாரகன் ஒருவன் என் அருகில் வந்து நின்றான். அவனைப் பார்த்து 'என்ன ஓய், இந்த டொமாடோ பாத்தில் கரப்பாம்பூச்சி நாற்றம் வருகிறதே" என்றேன். அவன் சற்றும் பயமின்றி "ஏன் ஸார். உங்களைப்போல ஆசாமிகளுக்கெல்லாமா இங்கே வியாபாரம் பண்ணுகிறோம். சாமான்களே அகப்படாத சமயத்திலே எவ்வளவோ கஷ்டப்பட்டு நாங்கள் தயார் செய்தால் நீங்கள் நாக்கு நீளத்திலே இந்தமாதிரி யெல்லாம் சொல்லுகிறீர்களே! இஷ்டமிருந்தால் சாப்பிடுங்கள். இல்லாமல் போனால் கையை உதறிவிட்டு எழுந்துபோங்கள். நாங்கள் கொடுப்பதைச் சாப்பிடுவதற்கு வேண்டியமட்டும் ஆட்கள் இருக்கிறார்கள்" என்றான். இதைக்கேட்ட அம்மாஞ்சி "நான் சொன்னதைக் கேட்டால் இந்தச் சங்கடம் இருந்திராது. இனியாவது தெரிந்துகொள். சாப்பாடு, சங்கீதம், சினிமா, ரயில்பிரயாணம் எல்லாவற்றிலும் கிடைத்தது லாபம் என்று ஏற்றுக்கொள். அப்படிச் செய்யாமல்போனால் உன்னைப் பைத்தியக்காரன் ஆக்குவதற்குப் பத்தாயிரம் பேர் தயாராக இருக்கிறார்கள். அனாவசியமாகப் பேசாதே, எழுதாதே!" என்று போதித்தான்.

அம்மாஞ்சி சொல்வது சரிதான். ஆனால் "காவேரி"க்காவது எழுதாமல் எப்படியிருப்பது என்று ஏங்குகிறேன்—நான் பேசினால் கேட்பதற்கு ஆட்கள் கிடையாது என்று எனக்குத் தெரியும்—எழுதுவதையாவது பிரசுரிக்கக் "காவேரி" ஆசிரியர் தயை புரிந்திருக்கிறாரே. அவருடைய செல்வாக்கைக் கைப்பற்றியாவது இப்படியே எழுதிக்கொண்டிருக்கிறேன்—என்ன சொல்லுகிறீர்கள்?

---


புதிய ஸ்டாக் | விலையில் நயம்

நம்பிக்கையான இடம் | நாணயமான தினுசுகள்



**தீபாவளியை உத்தேசித்து** எங்கள் சொந்தக் கைத்தறிகளில் அசல் கொள்ளேகாலம் பட்டுக்களினால் தயார் செய்யப்பட்ட பலரகப் பட்டுச் சேலை, பாவாடை மடிகளும், வெண்பட்டு, நூல்வேஷ்டி தினுசுகளும், பல ஊர் புதுமாதிரியான நூல் சேலைகளும் ஏராளமாகக் கிடைக்கும்.

# ராதா ஸில்க் எம்போரியம்

## பட்டு ஜவுளி வியாபாரம்

போன் நெ. 8016

Head Office: 1/14, சன்னதித் தெரு, மயிலாப்பூர்.

Branch: 37, பெரிய தெரு, கும்பகோணம்.

# பாரதி-தமிழ்

**வீ. ஜி. ஸ்ரீநிவாஸன்**

பாரதியார் ஆவேசக்கவி; புரட்சிக்கவி; புதுமைக்கவி! அவர் தமிழிலே புது மறைகள் பாடினர். தமிழனுக்கு ஆவேச தூபம் காட்டினர். நாட்டிற்குத் தமிழுணர்ச்சி தந்தார். "பசும் பொன்னும் மணியும் கனலும் பொலி தமிழ்ப் பண்கள் பொழிந்தார்" "கள்ளையும் தீயையும் சேர்த்து" புயல் காற்றையும் வானவொளியையும் சேர்த்து, தமிழ் மொழியில் இசைத்தார். பாரதியாரின் தமிழ்க் கவிதை சஞ்சீவி—அமுதம்! அவர் கவிதை "புதிய சகாப்தத்தை, புதிய ஜாதியை, புதிய நாட்டை அமைத்தது!"

பாரதியார் "புத்தொளியிற் பழந்தமிழ்க்கோர் புதுமை ஊட்டி, புத்துயிரும் புது மணமும் புகுத்தினர்." பாரதியாரின் தமிழ் "பழஞ் சுவையிற் குன்றவில்லை; பல்லை உடைக்காது; புத்தமுதச் சுவைகாணும்." பாரதி தமிழ் விசேஷ உணர்ச்சியில் ஊறி எழுந்ததால் மந்திர சக்தி வாய்ந்ததாக அமைந்தது.

தமிழ் மொழியின் நவயுக மறு மலர்ச்சிக்குப் பாரதியார் அடிகோலினர். தமிழ் மொழி ஆரோக்ய நடை பயில நல்ல பாதை காண்பித்தார். தமக்கென்றே உரியதான எளிய இனிய நடையின் மூலம் தமிழ் மொழிக்குப் புது மெருகேற்றி இளமைப் பொலிவைக் கொடுத்தார். "தெளிந்த தமிழில் தெளிவுற மொழிதல்; அறிந்தோர்க் கினிமை; அழகின் அமுதம்; உயர்ந்த கருத்து; உலகிற்கு அரும்பயன்—இவை பாரதி மணி வாக்கின் இயல்பு" என்கிறார் யோகி சுத்தானந்தர்.

பாரதியார் கையாண்ட நடை சிற்ப நடை, எளிய நடை. பாரதியார் பல மொழிகளைப் படித்து இன்புற்றார். பழந் தமிழிலக்கியச் சுவையைப் பருகினர், நவீன முறைப்படி விஷயங்களைத் தெளிவாக்கினர். காலத்திற் கேற்ற கோலங் கொண்ட தமது தமிழ் நடையின் "நவீன கதி"யிலே புதுப் புது விஷயங்களைப் புகுத்தினர். இந்த "நவீன கதி"யே இன்றைய மறுமலர்ச்சி எழுத்தாளர்களுக்


## சந்தோஷச் செய்தி!

எங்கள் சந்திர விலாஸ் பிராஞ்சில் (கோபாலஸ்வாமி கோவிலுக்கு எதிரில்) விதவிதமான ஜவுளி தினுசுகள், புடவைகள், பிரிண்டெட் வாயில்கள், ஜாக்கெட் துணிகள், உயர்ந்த ஷர்ட்டிங் & சிட்டிகள் மற்றும் எல்லா விதமான உடைகளும், நாகரீக வாழ்க்கைக்குத் தேவையான இதர எல்லா ஷாப் சாமான்களும் எங்களிடம் நயமாக வாங்கலாம்.

**தீபாவளி புத்தாடைக்குச் சிறந்த இடம்**

**சந்திர விலாஸ் பிராஞ்ச்**

(கோபாலஸ்வாமி கோவிலுக்கு எதிரில்)

பெரிய கடைத்தெரு, :: கும்பகோணம்.

*Prop. K. Raghavandra Row.*

கெல்லாம் நல்ல முன்மாதிரியாகவும், வழி காட்டியாகவும் அமைந்தது. இன்று தமிழ் நாட்டில் நடைபெறுவது "பாரதி யுகம்."

"பண்டிதர் கொண்ட தமிழினை நாட்டில் பாமரரும் பெறச் செய்தனன்" என்று பாடினார் புதுவை யோகி! முற்றிலும் உண்மை. வெகுநாளாகச் சிறை கிடந்து, கொடு நடைக்கு உட்பட்டிருந்த தமிழ் மொழிக்கு விடுதலை வழங்கி, நன்னடை நல்கி, நலமுறச் செய்தார்; உரமுறச் செய்தார்; வளம்பெறச் செய்தார்; பலம் கொண்டதாகவும் ஆக்கினார். எதையும் ஏற்று "ஜீரணம் செய்யும் அபூர்வ சக்தி வாய்ந்ததாகவும் செய்துவிட்டார்! பாரதியார்! இது "உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!"

பாரதியார் தமிழிலே எழுதும் போதெல்லாம் தமிழ் நாட்டாரின் நிலைமையை நன்கு நினைவில் வைத்துக்கொண்டு எழுதினார். பாரதியாரின் தமிழ் எழுத்துக்கள் முத்துக் கோத்தது போல மணி மணியாக இருக்கும்; பதம் பிரித்துத்தான் எழுதுவார். வடமொழிச் சொல்லோ ஆங்கிலச் சொல்லோ, எதுவாயிருந்தாலும் சரி, தமிழுக்குப் புதிதில்லையாயின், உச்சரிக்கின்ற முறையிலேயே எழுதி விடுவார். அவசியமான சொல்லோ, வழக்கிலிருக்கும் சொல்லோ, எம்மொழியைச் சார்ந்ததாயிருந்தாலும் ஏற்றுக் கொள்ள்லாம் என்பது அவர் துணிவு. அவர் மொழி பெயர்ப்புக்கு விரோதி அல்லர். அவர் சொற்படி "பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்"! நல்ல, நயமுள்ள, அழகிய கருத்தாயின் எந்த மொழிக்குச் சொந்தமாயிருந்தாலும் ஏற்றுக் கொள்ளலாம் என்பது அவர் கொள்கை.

அவர் கற்ற விஷயங்கள் அனைத்தையும் ஆராய்ந்தார். அதன் பயனாக உளத்தினிலே உண்மை ஒளி உண்டாயிற்று. வாக்கினிலேயும் ஒளி உண்டாயிற்று; தெளிவாக நினைந்தார்; தெளிவுபட எழுதினார்! சிந்தனைத் தெளிவு இருந்தது; நடைத்தெளிவு ஏற்பட்டது! தமது தமிழ் நடை எல்லோராலும் ஏற்கப்படவேண்டுமென்று விரும்பினார். படிப்போர்க்கும், படித்துக் கேட்போருக்கும், பாடுவோர்க்கும், பாட்டைக் கேட்போருக்கும் விஷயமும் பொருளும் எளிதிலே புரிய வேண்டும், மனதிலே பதியவேண்டும் என விழைந்தார். அதனாலேயே சின்னஞ்சிறு வார்த்தைகள், எளிய பதங்கள் (அகராதியைப் புரட்ட வேண்டாத வகைக்கு) முதலியவற்றைக் கையாண்டார். அதே நோக்கத்துடனே தான் "சாதாரண நாடோடி மெட்டுக்களையும் தமது கவிக் குழலில் இணைத்துச் சிறப்பித்தார். புதுச்சேரி பாண்டு வாத்தியம், தெருப்பாட்டு, கும்மி, சிந்து முதலிய சில்லறை மெட்டுக்களில் தமது உயர்ந்த உள்ளத்தை அமைத்து, பண்டிதர் பாமரர் யாவருக்கும் கவியமுதளித்தார். "பாப்பாப் பாட்டி"லிருந்து "பாஞ்சாலி சபதம்" முடிய, பாரதியாரின் இப்பெற்றி


# ஆர். எஸ். & கோ.

## பெரியதெரு, கும்பகோணம்

★

தீபாவளி, இன்ப ஒளியாகத்
- திகழவேண்டுமானால் -

நவீன மோஸ்தரிலுள்ள
ஆடைகளை வாங்கவேண்டும்

இவை நமது கடையில்
- ஏராளமாகக் கிடைக்கும் -

நூற்றுக்கணக்கான தினுசுகளைப் புரட்டி உங்களுக்குப் பிடித்ததைவாங்கிக்கொள்ள
- வசதி வேறு எங்கும் -
- கிடைக்காது. -

★

**பூரண திருப்தி கிட்டுவது திண்ணம்**

**ஒருமுறை விஜயம் செய்யுங்கள்**

வெற்றி பெற்றிருப்பதைப் பரக்கக் காணலாம்!

இவ்வளவு ஆவேசம், இனிமை, எளிமை, உணர்ச்சி, உயர்வு முதலியன அளவு படக் கலந்து அமைந்த ஓர் தமிழ் நடை அவரால் எவ்வாறு எழுதமுடிந்தது?

தமிழ்மொழி உயர்வுபெற வேண்டும்; ஓங்கிச் செழித்து வளம் பெற்று வளரவேண்டும்; உரம்பெற்று உயரவேண்டும்; முன்னேற்றமும், வளர்ச்சியும் அடைய வேண்டும் என்ற உண்மையைக் கண்டு கொண்டார். ஆகையில் தாமே தமக்கோர் "தொழிலை" ஏற்படுத்திக்கொண்டார்.

"நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதும் சோராதிருத்தல்"

என்றவோர் சங்கற்பம் செய்துகொண்டார்.

"பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடல் வேண்டும்" "மந்திரம் போல் வேண்டுமடா சொல் இன்பம்" என்ற உயரிய ஆதர்சங்களைக் குறிக்கோளாகக் கொண்டார். இந்த ஆதர்சங்களை எட்டிப் பிடிப்பதில், தமது சக்திக்குட்பட்ட வகையில், தமது ஆயுள் முழுதும் ஓயாது பாடு பட்டார்!






"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், இவற்றினுடைய காவிய மொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனுகிறான்" என்று பணித்தார் பாரதியார்.

அந்தத் திருப்பணியைத் தாமே செய்தார். அதன் விளைவுதான் "பாஞ்சாலி சபதம்"!

ஃ ஃ ஃ ஃ

பாரதியார் பல பிறமொழிகளைக் கற்று, ஆராய்ந்து, அறிந்தவர். ஆகையால் பிறமொழிகளின் தன்மையையும், நெளிவு சுளுவையும், நயத்தையும் நன்கு தெரிந்தவராவர். இந்த நிலையில் தம் தாய்மொழியாம் தமிழ்மொழி பற்றிய தமது அபிப்பிராயத்தைச் செப்ப அவருக்குப் பரிபூரண உரிமையுண்டு. பிற மொழிகளுடன் தமிழையும் வைத்துப்பார்த்துச் சீர்தூக்கினர். தமிழின் தனி மாண்பைத் தெரிந்தார்; உயரிய தன்மையை உணர்ந்தார்; செம்மையைக் கண்டுகொண்டார். ஆகையால் வெகு துணிவோடு

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்"

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே"

என்று பறை சாற்றினர்!

தமிழ்மொழி எப்பொருளையும் தன்னுள்ளே கொண்டதாகிறது என்று தேர்ந்தே "வானம் அளந்த தனைத்தும் அளந்திடு வண்மொழி" யென்றும் "வானமறிந்த தனைத்தும் அறிந்து வளர் மொழி" என்றும் வாயார, மனமார வாழ்த்துகின்றார்!

தமிழிலே அமுதச் சுவையைச் சுவைத்தவரல்லவா பாரதியார்! ஆகையால், தமிழை ஊன்றிப்படித்தால் யாவருமே அமர நிலை எய்தலாம் என்று முடிவு கட்டிவிடுகின்றார்.

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்"

என மொழிகின்றார்.

ஃ ஃ ஃ

பாரதியார் தமிழ் மொழியினிடத்து அளவற்ற காதல் கொண்டவர்; மட்டற்ற மோகம் கொண்டவர். எல்லாம் தமிழிலே வரவேண்டும்; ஒவ்வொரு தமிழனும் தமிழிலேயே படித்துப் பேசி, எழுதிப் பாடி மகிழ வேண்டும் என்பது அவரது ஆர்வம். தமிழ் மொழி தினே தினே வளர்ந்து முன்னேற்றமடைய வேண்டும் என்பது அவருடைய அவா. மற்ற மொழிகளெல்லாம் நாளாரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகையில் நமது அருமைத் திருமொழிமட்டும் விரைவுவளர்ச்சி பெருதது பாரதியாரைப் பெரிதும் வருத்தமுறச் செய்தது.

அதனால்தான், பாரதியார் (புதுச்சேரியிலிருந்து 19, ஜூலை, 1915-ல்) தமது அன்பர் திரு. பரலி சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில்

"தம்பி, நான் ஏது செய்வேனடா! தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்த முண்டாகிறது"—என்று எழுதியிருந்தார்! இது பொறாமையின்பால் பட்டதன்று; தமிழ் வளர்ச்சி பெறாது நிற்கிறதே என்ற வருத்தமே.

பாரதியாருடைய தம்பி (ஸ்ரீ சி. விசுவநாதையர்) ஓர் சமயம் வீட்டு விஷயமாக, பாரதியாருக்கு ஆங்கிலத்திலே ஒரு கடிதம் எழுதிவிட்டார்! பாரதியாருக்கு இது பிடிக்கவில்லை. தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்து, தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இருவருக்குள்ளே, அன்னியர் மொழியில் சல்லாபம் எதற்கு?

"எனக்கு இனிமேல் இங்கிலிஷில் காயிதம் எழுதாதே. நீ எழுதும் தமிழ் எத்தனை கொச்சையாக இருந்தபோதிலும் அதை நான் படிக்க ஆவலுறுவேன்"

என்று எழுதிவிட்டார்!

மற்றொரு சம்பவத்தைக் கவனிப்போம்!

திருநெல்வேலிக் கல்லூரியைச் சார்ந்த சரித்திர போதகாசிரியர் ஒருவர், தாய்மொழியில் பாடம் கற்பிக்கும் விஷயமாக "மாடர்ன் ரெவியூ"வில் தமது கருத்தை வெளியிட்டார். அதிலே "என் மாணாக்கர்கள்.........மொத்தத்திலே தமிழைக் காட்டிலும் ஆங்கிலத்திலே நன்றாகப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்...... சரித்திர விஷயங்களை விவகரிக்கும்போது எனக்கும் ஆங்கிலத்தில்தான் தமிழைக் காட்டிலும் நன்றாகச் சொல்ல வருகிறது" எனக் குறித்திருந்தார்!

என்ன அறிவீனம்! என்ன அநியாயம்! என்ன இழிவு! என்ன புதுமை! என்ன விந்தை! வங்க நாட்டில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு, தனக்குத் தமிழில் பேச வராது என்பதுபற்றித் தென் தமிழ் நாட்டிலுள்ள ஒருவன் ஆங்கிலத்தில் விளம்பரப்படுத்திக் கொள்வானேன்? பாரதியார் கண்டார்; பொங்கி எழுந்தார். இந்தப் "புதுமை"யை வெகுவாகக் கண்டித்து, தமது "இந்தியா"வில் (ஏப்ரல் 3, 1916) "தமிழ்" என்ற தலைப்பின் கீழ் வெளியிட்டார். அதிலே தமது "தமிழ் வெறி" யையும் காண்பிக்காது விடவில்லை.

"எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப்போல் வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமே இல்லை"

என்று ஆர்ப்பரித்து எழுந்தார்! அதோடு நிற்கவில்லை!


★

**தீபாவளி** **ஜவுளி**

தீபாவளிப் பண்டிகை நெருங்குகிறது. எல்லோரும் புது ஆடை அணிந்து குதூகலமாய் இருக்கவேண்டிய காலம். தேவைக்கான ஜவுளி கிடைக்குமா என்ற உங்கள் கவலையை விடுங்கள். உங்கள் தேவையை பூர்த்திசெய்ய எல்லாவிதமான ஜவுளி தினுசுகளும் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். புத்தப் புதிய ஜவுளிகள். நாகரிகமும் நாணயமும் உள்ளது. விலை நயம்.

# நியூ பனாரிஸ் ஹால்

பெரிய தெரு : : கும்பகோணம்

"மிகவும் விரைவினிலே தமிழின் ஒளி உலக முழுதும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்"

என்று தோள் கொட்டினார்! (கலைமகள்—சுபானு—ஆடி—பார்க்கவும்)

ஃ ஃ ஃ

தாய் மொழிக்கு உரிய மதிப்புக் கொடுத்து, ஏற்றமுள்ள இடத்தில் எழில்பெற அமைப்பதில் நம் தமிழ்க் கவிகள் சிறந்தவர்கள், இம் முறையில் பாரதியார் தமிழ் மொழியை எங்கெங்கே அமைத்து, எவ்விதம் போற்றுகிறார், எவ்விதம் தமது தாய் மொழிக்கு மதிப்புக் கொடுத்து அன்பை வெளிக்காட்டியிருக்கிறார் என்று காண்போம்!

காலை வேளையில், கடற்கரையில், சூரியன் மேகங்களால் சூழப்பட்டிருக்க, முகம் காட்டும்படி அவனை வேண்டிப் பாடியபாடலாகிய "ஸூர்ய தர்சனத்"தில்

"வேதம் பாடிய சோதியைக் கண்டு
வேள்விப் பாடல்கள் பாடுதற் குற்றேன்
நாத வார்கடல் இன்னொலி யோடு
நற்றமிழ்ச் சொல் இசையையும்
சேர்ப்பேன்"

என இசைத்துத் தமது "தமிழுணர்ச்சி"யையும், "தமிழோடு இசை பாடல்மறந்தறியாத" தன்மையையும் வெளிக்காட்டியுள்ளார்.

இதையைத் தமிழாக்கும் முயற்சியில் ஈடுபட்டார் பாரதியார். அதன் பொருட்டு, காப்பாகத் தேவி வணக்கம் செலுத்துகையில் என்ன வேண்டிக் கொண்டார் தெரியுமா?

"என், வாயினிக்க வருந்தமிழ் வார்த்தைகள்
வையகத்தினர் நெஞ்சு கவர்ந்திட
தாயினிக் கருணை செய்யல் வேண்டும்"

என்று வேண்டிக்கொண்டார்.

"விநாயகர் நான்மணி மாலை" பாடுங்கால "தியே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்குவனே" எனத் "தமிழ்க் கனல்" வீச மொழிந்தார். மேலும்.

"என்னுவில் பழுத்த சுவைத், தெண்டமிழ்ப்
பாடல் ஒரு கோடி மேவிடச் செய்குவையே"

எனப்புதுவை விநாயகரிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார். சுவைபழுத்த தெள்ளு தமிழ்ப் பாடல் ஒரு கோடி பாடவேண்டுமாம்! என்ன பேராசை!

"பாரதி அறுபத்தாறை"க் கொஞ்சம் பார்க்கலாம். விஷயத்தைத் தெளிவு படுத்தி "செந் தமிழுலகத்தார்க்கு உணர்த்து" கின்ற வகையில் "பாகான தமிழினிலே பொருளைச் சொல்வேன்" என்றே மொழிகிறார்.

"பாஞ்சாலி சபதத்தை"—தமது மகா காவியத்தை—துவங்குகையில் வாணி வணக்கம் செலுத்துகிறார். தமது மகா காவியம் இன்ன ரீதியில் அமைந்திருக்க வேண்டும் என்று தமக்குப் பிள்ளைப் பிராயத்திலேயே இன்னருள் புரிந்த கலைமகளை

"கள்ளைக் கடலமுதை—நிகர்
பூண்டதொர் பூந்தமிழ்க் கவி சொலவே"

"பேணவந்தாள், அருள் பூண வந்தாள்" என்று தெரிவிக்கிறார். ஆம், கலைமகள் அன்று பிள்ளைப்பிராயத்திலே, பாரதியாருக்குஅருளியது தேனையும், அமுதத்தையும் நிகர்த்த "சுந்தரமாம் ஒரு காப்பியம்" செய்வதற்காகத் தானே?

தமது கிள்ளைத் தமிழ் மொழிகளிலே தேனையும் குழைத்துப் பேசிய "சிறு வள்ளி"யைக் கண்டு, "சொக்கி மரமென" நின்றானல்லவா, அந்தத் "தென்மலைக் காட்டிலே", தமிழர் தலைவன் முருகன்! அவன் ஒவ்வொரு நாளும் வள்ளி மொழியும் "வீரத் தமிழ்ச் சொல்லின் ஸாரத்திலே" திளைத்து மனம் பறிகொடுத்து நின்றானும்.

ஃ ஃ ஃ

தமிழ்! தமிழ்!! தமிழ்!!!; புதுமை! புதுமை!! புதுமை!!! என்றுகொண்ட கவி சுப்ரமண்ய பாரதியார் நம் பைந் தமிழ் மொழிக்கு என்றென்றும் உயர்வையே கோருகிறார்,

"எங்கள் தமிழ்மொழி, எங்கள் தமிழ்மொழி
இசைகொண்டு வாழியவே!"


மில் வேஷ்டிகள்
ஷர்ட்டிங்
கோட்டிங்
பிரிண்டெட்
கைத்தறி—புடவைகள்
ஸில்க்—உல்லன்
முதலிய
தீபாவளி ஸெலக்ஷனுக்கு
"விஷ்ணு ஹால்"
105 பெரியதெரு கும்பகோணம்
288 சைனு பஜார் மதராஸ்

# காவேரி நதியும் ★ ★ ★ மின்சார உற்பத்தியும்

• ஆர். கே. விசுவநாதன்

ஒரு தேசம் மேன்மை அடைவதற்கு வேண்டிய இயற்கைச் செல்வம் பலவகைப்படும். முக்கியமாக உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகளைப் பெற்ற தேசங்களே எல்லாத் தேசங்களைக் காட்டிலும் சிறந்தவை. இத்தகைய நாடுகளில் நம் இந்தியா தேசம் ஒன்று. நம் நாட்டில் அனேக ஜீவநதிகள் இருக்கின்றன. பருவக்காற்றுக்களினால் காலாகாலங்களில் மழைபெய்து இவ்வாறுகள் பெரும்பாலனவற்றில் எப்பொழுதும் ஜலவசதி இருந்துகொண்டே இருக்கும். இதன் பயனாகவே நம் முன்னோர்கள் எல்லாத் தொழில்களைக் காட்டிலும் விவசாயத்தையே மேற்கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆறுகள் எங்கெங்கே இருக்கின்றனவோ அங்கங்கே ஜன நெருக்கம் இருந்து வருவதை உணரலாம். காலங்களில் மழை இல்லாமலும், சில சமயம் வெள்ளம் அதிகமாகவும் ஏற்படுவதுண்டு. இவற்றினால் பயிருக்குண்டாகும் கெடுதல்களை நிவர்த்திசெய்ய முடியாமல் நம்முன்னோர்கள் திகைத்துக் கடவுளையும் வருணபகவானையும் தொழுது ஒருவாறு மனதைத் தேற்றி வந்தார்கள். தற்காலம் ஏற்பட்டிருக்கும் விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக இக்கெடுதல்களை நிவர்த்திசெய்து பயிர்த்தொழிலைக் காத்துவருகின்றார்கள். இதுகாறும் தரிசாய்க்கிடந்த நிலங்கள் வெகுவாகச் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. மேலும் இவ்வாறுகளைக் கொண்டு மின்சாரத்தையும் ஆங்காங்கே உற்பத்திசெய்து வருகின்றார்கள். தென்னிந்தியாவில் உள்ள காவேரி நதியைப்பற்றியும் அதைக்கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்வதைப் பற்றியும் இக்கட்டுரையில் கவனிப்போம்.

காவேரிநதி குடகுநாட்டில் மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. இதன் உற்பத்தி ஸ்தானம் சமுத்திர மட்டத்துக்குச் சுமார் நாலாயிரம் அடிக்குமேல் உள்ளது. தென்மேற்குப் பருவக்காற்றினால் ஏற்படும் மழைதான் இவ்வாற்றின் பிரவாகத்திற்குக் காரணமாகும். இந்நதி குடகு ராஜ்ஜியத்தில் சுமார் முப்பது மைல் ஓடி மைசூர் ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது. இந்நதி மைசூர் ராஜ்யத்திலிருந்து சேலம் ஜில்லாவின் வழியாகச்சென்று, திருச்சி தஞ்சாவூர் ஜில்லாக்களில் பாய்ந்து வங்காளக்குடாவில் கலக்கின்றது. காவேரி மைசூர் ராஜ்ஜியத்தில் சுமார் 120 மைல் ஓடி, சிவசமுத்திரம் என்னுமிடத்தில் நீர்வீழ்ச்சியாக விழுகிறது. சிறிது தூரம் மலைப் பிரதேசங்களில் ஓடி, சேலம் ஜில்லாவில் மேட்டூருக்குச் சமீபத்தில் சமவெளியை அடைகிறது. இங்கேதான் காவேரி நதியின் குறுக்கே இரண்டுமலைகளின் நடுவில் அணை கட்டப்பட்டிருக்கிறது. இதைக் கட்டுவதற்குச் சென்னை அரசாங்கத்தார் சுமார் ஏழு கோடி ரூபாய் செலவழித்தார்கள். கட்டுவதற்கு ஆறு வருஷத்துக்குமேல் ஆயிற்று. இதைக் கட்டும்பொழுது யந்திரங்களை ஓட்டுவதற்கும், கல் முதலியவற்றை உடைப்பதற்கும் வேண்டிய மின்சார ஆற்றலை மைசூர் சிவசமுத்திர நிலயத்திலிருந்து வாங்கிக் கொண்டார்கள். இவ்வணையைப் பற்றிய விவரங்களைச் சிறிது கூறுவோம், அஸ்திவாரத்திலிருந்து இதன் சராசரி உயரம் இருநூற்றுப் பதினைந்துஅடி. அடியிலிருந்து மேலே செல்லச்செல்ல இதன் அகலம் குறைந்துகொண்டே போகின்றது. அடியில் இதன் அகலம் நூற்று எழுபது அடி; உச்சியில் அகலம் இருபது அடி. இதன் நீளம் ஒரு மைல். உலகிலுள்ள எல்லாக் கல்சுவர் அணைகளைக் காட்டிலும் இதுவே மிகப் பெரியதென்று கூறப்படுகிறது. மேட்டூருக்குச் செல்லும் ஒவ்வொருவரும் இத்தகைய பிரம்மாண்டமான சுவரைக் கண்டு வியப்படையாமலிருக்கமாட்டார்கள். இதனால் ஏற்படும் நீர்த்தேக்கத்தின் விஸ்தீரணம் சுமார் அறுபது சதுர மைல் என்று கணக்கிட்டிருக்கின்றார்கள். நிறையத் தண்ணீர்தேங்கி இருக்கும்போது அணையின் அருகில் நூற்று அறுபத்தைந்து அடி ஆழத்துக்குத் தண்ணீர் நிற்பதைக் கண்டார்கள். அணையின் ஒரு கோடியில் அதன் அடியில் வாய்க்கால் கட்டி இருக்கின்றார்கள். அதன்மூலமாகத் தண்ணீர் அணையைத் தாண்டி வெளியே வருகிறது. வெளிவரும் தண்ணீரின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டியபடி கணவாய்கள் அமைத்

திருக்கின்றார்கள். அணையின் மற்றொரு கோடியில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நீர் வசதியைப் பெறுவதற்கு, அணையின் அடியில் நான்கு குழாய்களின் வழியாகத் தண்ணீர் பீரிட்டுக்கொண்டு வருமாறு செய்திருக்கின்றார்கள். அணையின் அருகிலேயே மின்சார நிலயத்தைக் கட்டியிருக்கின்றார்கள். இதிலிருந்து வெளிப்படும் ஜலமும் வாய்க்காலின் வழியாக வரும் ஜலமும் ஒன்று சேர்ந்து அணைகட்டுவதற்கு முன் காவேரி சென்ற திசையிலேயே செல்லுகின்றது. முக்கியமாகத் திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்களுக்கு அநேக நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. வடகிழக்குப் பருவக்காற்றினால் உண்டாகும் மழை சில சமயம் காலப்பிற்பாடாகவும், சில சமயம் அதிகமாகவும் ஏற்பட்டுப் பயிர் கெட்டு விடுவதுண்டு. அக்கெடுதல்கள் நீங்கிச் சீராக எப்பொழுதும் விவசாயத்துக்கு வேண்டிய ஜலவசதி அணை ஏற்பட்ட பிறகுதான் உண்டாயிற்று. மேலும் தரிசாகக் கிடந்த நிலங்களில் அனேக ஏக்கராக்கள் வளம்பெற்றன. எல்லாவற்றைக்காட்டிலும் முக்கியமாகப் பெருத்த அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ஏற்பட்டுள்ள வசதியைத்தான் குறிப்பிட வேண்டும்.

சுமார் நூற்றைம்பது வருஷ காலமாக விஞ்ஞானம் அடைந்திருக்கிற வெற்றி நம் வாழ்க்கையை முற்றிலும் மாற்றி விட்டது. நம் வேலைகளில் பெரும்பாலன வற்றை நீராவி, மின்சார இயந்திரங்களைக் கொண்டே நடத்தி வருகின்றோம். முதலில் நீராவி யந்திரங்களுக்கு வேண்டிய நிலக்கரியைப் பெற்ற நாடுகளே வியாபாரத்தில் முன்னணியில் நின்றன. தற்காலம் மின்சார வசதியுள்ள நாடுகளே முன்னணியில் நிற்கின்றன. எல்லாக் காரியங்களுக்கும் இப்பொழுது மின்சாரமே உபயோகப் பட்டு வருகின்றது. ஆலைகளில் யந்திரங்கள் ஓட்டுதல், நெசவு நெய்தல், கல் உடைத்தல் தண்ணீர் இறைத்தல் இவை போன்ற காரியங்கள் மின்சார சக்தியைக்கொண்டே தான் நடைபெற்று வருகின்றன. பெருத்த அளவில் மின்சார சக்தியை உற்பத்தி செய்யக் கூடிய வசதிகளுள் நீர்வீழ்ச்சி அல்லது நீர்த் தேக்கத்தினால் உற்பத்தி செய்யும் வசதியே மிகவும் சிறந்ததென்று கண்டார்கள். மேலும் இம்முறைக்கு வேண்டிய பணச்செலவு மிகவும் சொற்பம். அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலும், கானடாவிலும் நீரின் விசையால் மின்சார சக்தியை அபரிமிதமாய்த் தயாரிக்கின்றார்கள். நம் நாட்டில் ஆறுகளுக்கும் நீர் வீழ்ச்சிகளுக்கும் குறைவில்லை. இருந்தபோதிலும் நமக்கு இருக்கிற வசதியில் நூற்றுக்கு ஒருபாகம்கூட உபயோகப்படவில்லை. இக் குறையை உணர்ந்து சமீபத்தில் தான் ஆங்காங்கே மின்சார நிலயங்களை இயற்றி வருகின்றார்கள். தென்னிந்தியாவில், சிவ சமுத்திரம் நீர் வீழ்ச்சியைப் பயன் படுத்தி ஏற்பட்ட மின்சார நிலயமே முதலில் நிறுவப்பட்டது. பிறகு நீலகிரி ஜில்லாவில் உள்ள பைக்காரா என்ற நதியின் உதவியைக் கொண்டு பைக்காரா மின்சார நிலயம் ஸ்தாபிக்கப்பட்டது. மேட்டூர் அணை கட்டி முடிந்தவுடன் மேட்டூரில் ஓர் உற்பத்திச்சாலையை சென்னை அரசாங்கத்தார் கட்டி இருக்கின்றார்கள். திருக்குற்றாலத்துக்கு அருகிலுள்ள பாபநாசத்தில் ஓர் ஸ்தாபனமும், திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ள பள்ளிவாசலில் ஓர் ஸ்தாபனமும், ஏற்பாடாகிக் கட்டி முடிந்தாய் விட்டன. மேட்டூர் நிலயத்தை விவரிக்குமுன் பெருத்த அளவில் மின்சார உற்பத்திசெய்வதற்குண்டான பௌதிக தத்துவத்தைச் சிறிது விளக்குவோம்.

மின்சாரத்தை உண்டாக்கும் கருவிக்கு "டைனமோ" என்று பெயர். இதில் பெரிய


**நரையை ஒழியுங்கள்!**



நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலைன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

ஏஜண்டுகள்: **அப்பா & கோ.,**
கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

**கேடரைன்**



மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணாடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: **அப்பா & கோ.,** கெமிஸ்ட்ஸ்,
286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

மின் காந்தச் சட்டங்களால் காந்தப்புலம் உண்டாக்கப்படுகிறது. இக்காந்தப் புலத்தில் அடை (Armature) என்ற ஒரு அமைப்பு சுழலும். பல கம்பி வளையங்களின் சேர்க்கையைத் தான் அடை என்று சொல்லுவார்கள். இவ்வடை காந்தப் புலத்தில் சுழலும்போது கம்பிச் சுருள்கள் காந்தப் புலத்திலுள்ள வரைகளை (Lines of force) வெட்டிக்கொண்டு சுழலுவதால் அவற்றில் ஊட்ட அருவி (Induced Current) தோன்றும். அடை ஒரு முழுச் சுற்றுச் சுற்றுவதற்குள் இவ்வருவியின் திசை இரண்டு முறை மாறிவிடும். ஒரேமுகமாக அடை சுற்றிக் கொண்டே போகும்போது அதில் தோன்றும் அருவியும் திசை மாறிமாறி ஓடிக் கொண்டிருக்கும். அருவியின் திசை மாறி மாறி ஓடிவருவதால் இதற்கு மாறு மின்னேட்ட அருவி (Alternating current) என்றுபெயர். இவ்வருவியின் வலிமை காந்தப் புலத்தின் பலத்தையும் முக்கியமாக அடை சுழலும் வேகத்தையும் பொறுத்திருக்கும். பெரிய டைனமோக்களில் இவ்வருவியை உண்டாக்கும் மின்னியக்க சக்தி (Electro-motive force) ஆயிரக்கணக்கான "வோல்ட்" களாக இருக்கும். இவ்வாறு பெற்ற ஆற்றலைத்தான் கம்பிகளின்மூலமாகப் பல ஊர்களுக்கு அனுப்பி அங்கங்கே காரியங்களை நடத்தி வருகின்றார்கள். டைனமோ வேலைசெய்வதற்கு அடையின் இயக்கம்முக்கியமென்று முற்கூறியதிலிருந்து உணரலாம். இவ்வியக்கத்தை நீர்வீழ்ச்சியினாலோ அல்லது நீர்த்தேக்கத்தினாலோ பெறலாம். இதைத்தவிர வேறு வழிகளும் உண்டு. உதாரணமாக நீராவிச் சக்தி, எண்ணெய்ச்சக்தி இரண்டையும் பயன்படுத்தலாம். நீராவியை உபயோகிக்கும்போது நீராவியைக் குறுகிய வாயுள்ள குழாய்களின் மூலமாகப் பீரிட்டு வரச்செய்து அடையுடன் இணைக்கப்பட்டிருக்கும் பல்சக்கர உருளைகளின் (Turbines) மீது மோதச்செய்வார்கள். நிலக்கரி எளிதில் கிடைக்கக்கூடாத இடங்களில் "குரூட் ஆயில்" என்னும் எண்ணெயின் ஆவியால் ஓட்டப்படும் என்ஜின்களோடு பூட்டி அடையைச் சுழலச் செய்வார்கள். ஆறுகள் மிகுந்திருக்கும் நாடுகளில் மேற்கூறிய முறைகளைக் காட்டிலும் நீர்ச் சக்தியினால் அடையின் இயக்கத்தைப் பெறுவதே லாபகரமாகும். இம்முறையைத்தான் மேட்டூர் மின்சார நிலயத்தில் கையாண்டிருக்கின்றார்கள்.

மேட்டூரில் காவேரி ஆற்றின் நீரைத்தேக்கி அணை கட்டியிருக்கும் விதத்தை முதலில் பார்த்தோம். அதன் ஒரு கோடியில் அணையின் அடியிலிருந்து நான்கு குழாய்களின் வழியாக ஜலம் பீரிட்டுக்கொண்டு வருமாறு அமைத்திருக்கின்றார்கள். அணையை அடுத்துள்ள ஒரு கட்டிடத்தில் டைனமோக்களை அமைத்திருக்கின்றார்கள். ஏக காலத்தில் நான்கு டைனமோக்கள் ஓட்டுவதற்குத்தான் அணையின் அடியில் நான்கு குழாய்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது மூன்று டைனமோக்களே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சண்டை முடிந்ததும் நான்காவது டைனமோவும் ஸ்தாபிக்கப்படும். அவற்றில் இரண்டு டைனமோக்களே எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒன்று சரியாக வேலை செய்யாவிட்டால் அதை நிறுத்திவிட்டு மூன்றாவதைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். அணையிலிருந்து நீரைப் பெரிய எஃகுக்குழாய்களின் வழியாகக் கொண்டுவருகின்றார்கள். இக்குழாய்களின் விட்டம் எட்டரை அடி. ஒவ்வொன்றையும் ஆறு அடி விட்டமுள்ள இருகிளைகளாப்பிரித்துக்கொண்டு இவற்றின் மூலமாக விடும் நீரை, அடையுடன் இணைக்கப்பட்டு அதன் இருபுறமும் உள்ள பல்சக்கர உருளைகளைத் (Turbines) தாக்குமாறு செய்து, வெளியே கொண்டுபோகின்றார்கள். உருளைகளைத் தாக்கும் நீரின் விசை அணைக்கு அப்புறத்தில் தேங்கி நிற்கும் தண்ணீரின் உயரத்தைப் பொறுத்திருக்கும். நிறையத் தண்ணீர்நிற்கும் காலங்களில் குழாய்களுக்கு மேல் நூற்றைம்பது அடிக்கு நீர் நிற்கும். கோடைக் காலத்தில் எண்பது அடிக்குக் குறைந்துவிடுகிறது. இந்நீரின் அமுக்கத்தினால்தான் குழாய்களின் வழியாகத் தண்ணீர் பீரிட்டுக்கொண்டு வெளி வருகின்றது. சிவ சமுத்திரம், பைக்காரா முதலிய இடங்களில்உள்ள மின்சார நிலயங்களுக்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு. அவ்விடங்களில் ஏற்படும் நீர்வீழ்ச்சியினால் பல்சக்கர உருளைகளைச் சுழலச் செய்கின்றார்கள். இவ்விடங்களில் உள்ள டைனமோக்களுக்கு Impulse டைனமோக்கள் என்று பெயர். மேட்டூரில் உள்ள டைனமோவுக்கு Reaction டைனமோவென்று பெயர். சிவ சமுத்திரத்தில் நீர் வீழ்ச்சிக்கு மேலே இரண்டு மைலுக்கு அப்பால் வாய்க்காலைப் பிரித்து நீர்வீழ்ச்சிக்குக் கீழே அரை மைல் தூரத்துக்கு அப்பால் மறுபடியும் ஆற்றுடன் சேர்த்துவிடுகிறார்கள். நீர்வீழ்ச்சிக்குக் கீழே சிறிது தூரத்தில் மின்சார உற்பத்திச்சாலையைக் கட்டி இருக்கின்றார்கள். நீர் வீழ்ச்சிக்கு மேலேயுள்ள வாய்க்காலிலிருந்து வரும் நீர் குழாய்களின் வழியாக நானூறு அடி கீழேவிழுந்து உற்பத்திச்சாலையிலுள்ள பல்சக்கர உருளைகளைச் சுழற்றுகின்

றது. பைக்காராவிலும் இதேமாதிரிதான் அடையின் சுழற்சி பெறப்படுகின்றது. சிவசமுத்திரம் உற்பத்திச்சாலையிலிருந்து மின்சார சக்தியை பங்களூர், மைசூர், கோலார் முதலிய இடங்களுக்குக் கொண்டுபோகின்றார்கள். அந்நகரங்களில் விளக்குக்களுக்கு வேண்டிய ஆற்றலை உபயோகிப்பதல்லாமல் பஞ்சாலைகளுக்கும், நெசவுச்சாலைகளுக்கும், தங்கச் சுரங்கங்களுக்கும் ஆற்றலைப்பயன் படுத்திவருகின்றார்கள். பைக்காராவில் உள்ள மின்சார உற்பத்திச்சாலையிலிருந்து கோயம்பத்தூர், மதுரை முதலிய இடங்களில் உள்ள பஞ்சாலைகளுக்கும், திருநெல்வேலி, தென் மலையாளம்முதலிய இடங்களுக்கும்சக்தியைக் கொண்டுபோகிறார்கள். மேட்டூர் மின்சார நிலயத்திலிருந்து சேலம், திருச்சி, தஞ்சாவூர், தென்னாற்காடு, வடஆர்க்காடு முதலிய இடங்களுக்கு மின்சார சக்தி கொண்டுபோகப்படுகிறது. தென்னிந்தியாவில் பெரிய ஆலைகளும் யந்திர ஸ்தாபனங்களும் இவ்வளவு காலம் ஏற்படாததின் காரணம் அவற்றுக்கு வேண்டிய ஆற்றல் மலிவாகக் கிடைக்காததினால் தான். மேட்டூர், பைக்காரா மின்சார நிலயங்கள் ஏற்பட்ட பிறகு மின்சார சக்தியை உபயோகித்து அனேக ஆலைகள் ஆங்காங்கே நிறுவப்பட்டிருக்கின்றன. மேட்டூரைச் சுற்றிப் பல தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. சுத்தமான தண்ணீரும், குறைந்த விலைக்கு மின்சார ஆற்றலும் கிடைப்பதனால் மேட்டூரில் அனேக இரசாயனப் பொருள்களைச் செய்து வருகின்றார்கள். அங்கே பஞ்சாலையும் நெசவாலையும் கூட இருக்கின்றன. மேட்டூருக்குச் சமீபத்தில் ஏராளமாகக் காலி இடங்கள் இருப்பதினாலும், ரயில் வசதி இருப்பதினாலும் இன்னும் அனேகம் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய யந்திரங்களை இயற்றிக் கொள்ளலாம். காகிதம் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள்களும் அருகில் கிடைக்கின்றன. அதற்கு வேண்டிய தண்ணீர், இரசாயனப் பொருள்களும் அங்கேயே கிடைப்பதினால் அனேக காகிதச் சாலைகள் நிறுவப்படலாம். சமீபத்தில் "மேட்டூர் பேப்பர் இண்டஸ்ட்ரி" என்று ஒரு தொழிற்சாலையைத் துவக்கி இருக்கின்றார்கள். இதுபோல இன்னும் பல காரியங்களுக்கு அனேக ஆலைகள் அங்கே நிறுவப்பட்டுத் தென்னிந்தியாவின் பொருளாதாரச் செல்வம் விருத்தி பெறுவதற்கு இடமிருக்கின்றது.


மேதாஸ்

"சுந்தரி எலிக்ஸர்"

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார்செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

K. S. மேதா & Co., மதராஸ்.

ஹைதராபாத் ஏஜண்டு :—

ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,
ஸெகண்ட்ராபாத்.

# தேமேன்னு பாவம்

கௌரி

ராமய்யர் வீட்டில் மாப்பிள்ளை அழைப்புத் தடபுடல், ஊர்வலம் வெகு விமரிசையாக வந்துகெரண்டிருந்தது. மழையும் கொஞ்சம் பிசுபிசென்று தூற ஆரம்பித்தது. மோட்டார்களும் வண்டிகளும் ஏகமாய்ச் சரியாய்ப் போய்க்கொண்டிருந்தன. அவரவர்கள் விருப்பப்படி சிலர் வண்டிகளிலும் சிலர் நடந்தும் சென்றுகொண்டிருந்தனர்.

"பிசுபிசென்று தூறுகிறது! நீவேணுமானால் வண்டியில் ஏறிக்கொண்டு விடுடீயம்மா" என்றாள் கமலம் காமுவைப் பார்த்து.

"போடீ ரொம்ப அழகு! இவ்வளவு பேர் நடக்கும் பொழுது எனக்கு மட்டில் என்ன வந்துவிட்டது இப்போ? உபசாரம் செய்கிறாயாக்கும் நீ?" என்றாள் காமு.

கமல: ஆனால் நாங்களும் நீயும் ஒன்றாடீ? இந்தத் தூறலிலும் ஈரத்திலும் நீ நடந்துவிட்டு எங்கேயாவது ஜலதோஷம் பிடித்துக் கொண்டால் போதும்—யார் பதில் சொல்லுகிறது அத்திம்பேருக்கு? ஏதோ மனது வந்து இந்த மட்டில் கலியாணத்திற்காவது அனுப்பினாரே அதைச்சொல்லு. ஏன் அவர்மட்டில் வராமல் இருந்துவிட்டார். ஒரு நாளாவது வந்துவிட்டுப் போனால் எல்லோருக்கும்? எவ்வளவுசந்தோஷமாய் இருக்கும்? அப்படி என்ன வேலை பிரமாதம்?

காமு: வேலை என்ன பிரமாதம்? எல்லாம் வருகிறேன் என்றுதான் கிளம்பினார். நான் தான் வேண்டாமென்று கிளம்பி வந்தேன்.

கமல: காமு, இருந்தாலும்உனக்கு அஸாத்ய பிடிவாதம்தாண்டீ. வருகிறேன் என்று ஆசையாக் கிளம்பினவரை நிறுத்திவிட்டு வந்திருக்கிறாயே? என்ன தைரியமடீ உனக்கு? எதைச் சொன்னாலும் கேட்கிறாரே தேமேன்னு பாவம். அதுதான் ஆட்டி வைக்கிறாய. இருக்கிறாரே இவரும், ஊருக்கு முன்னால் குடுக்கைக் கரப்பு மாதிரி அலைவதற்கு, எதையாவது சொன்னால் கேட்பாரா? இவர் மாதிரி இருந்தால் அப்பொழுது தெரியும் உனக்கு.

சிரித்தாள் காமு. அவள் மனதில் என்ன அலைகள் மோதிக் கொண்டிருந்தனவோ தேமேன்னு பாவம்! "ஆமாம்டியம்மா உனக்கென்ன? எல்லாம் சொல்லுவாய்." சொல்வதை எல்லாம் கேட்கமாட்டாரோ? கேட்பார்!! இதுகளையும் இழுத்துக் கொண்டு எல்லோரும் ஒரு இடத்திற்கு வந்துவிட்டால் போதும், வேறு வினையே வேண்டாம். வருகிறேன் என்றுதான்குதித்தார். ஒன்று நானாவது போகிறேன், இல்லை நீங்களாவது போங்கள் என்று தான் நான் சொன்னேன். என்னமோ அவருக்கும் மனம் வந்துவிட்டது. என்னமோ பிரமாதமாய்ப் பரிந்துகொண்டு வருகிறயே உங்க அத்தம் பேருக்கு? நாலு நாட்கள் அவரோடு பழகினால் அப்பொழுது சொல்லுவாய் உங்க அத்திம்பேரை. நான் பாட்டில் இருந்தாலும் கிளறுகிறாயே என்வாயை" என்று நகைத்த வண்ணம் கமலத்தைப் பார்த்தாள்.

கமல:— போடீ, ரொம்ப கெட்டிக்காரி. வரவேணும் என்று அவ்வளவு ஆசைப்படுகிறவரை விட்டுவிட்டு வந்தாயே அதைச் சொல்லு. உனக்கென்ன? இரண்டு வேலைக்காரர்களை அழைத்துக்கொண்டு வந்தால் குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு போகிறார்கள். அவரையும் குழந்தைகளையும் நீயா தலையில் தூக்கி வைத்துக்கொண்டு இருக்கப் போகிறாய்?............" என்பதற்குள்,

"அதோ பார் உன்னைத்தேடிக்கொண்டு ஓடி வருகிறார் ஓங்காத்துக்காரர் - மழையில் நனையாதே என்கிறாயே என்னைப் பிடித்து?" என்று பரிகாசத்துடன் கூறினாள் காமு.

நாணுவைப் பார்த்தவுடன் சற்று முகத்தைச் சுளித்துக்கொண்டாள் கமலம். "பார்த்துக் கொள், சொன்னால் ஒரு வார்த்தை கேட்பாரா கேள்? எங்கேயானாலும் சரி, எனக்கு முன்னால் வந்து நிற்காவிட்டால் தலை வெடித்துவிடும். வந்து விட்டுப் பேசாமல் இருந்துவிடுகிறாரா? வேண்டாத வம்பை எல்லாம் இழுத்துவிட்டுக் கொண்டு கொட்டுடா குடையடா என்று அலைகிறது. நானும் பார்த்து இருக்கிறேனே, அத்திம்பேர் வந்தால் இருக்கும் சோடு தெரியுமா? தேமேன்னு பாவம் அவர் உன் கையில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறார்" என்பதற்குள் நாணுவும் சமீபத்தில் வந்துவிட்டார், மழைத்தூறலும் சற்று வலுத்துக் கொண்டிருந்தது'

"ஏண்டி ஏதாவது புத்தி கித்தி இருக்கா உனக்கு? அவளையும் இழுத்துக்கொண்டு நடக்கிறயே மழையில், உடம்புக்கு ஆகுமா? ஒரு வண்டியில் ஏறிக்கொள்ளக் கூடாது?" என்று கமலத்தை அதட்டிக்கொண்டே வந்தார் நாணு.

'பார்த்தாயோன்னோடி? முணுக்கு என்பதற்குள் இப்படியா? இந்தக் கூட்டத்திலும் இதுவும் இடித்துப் பூந்துகொண்டு வராவிட்டால் என்ன? அவரவர்களுக்கு அக்கரை இல்லையாக்கும்? தானே வண்டியில் ஏறிக்

கொள்ளுகிருர்கள்" என்று கமலம் நாணுவின் பேரில் சிள்ளென்று விழுந்தாள்.

"ஆரம்பித்துவிட்டாயா உன் சிடுசிடுப் பிற்கு? நல்லது ஒன்று சொல்லக்கூடாதே உனக்கு? பார் புடவை எல்லாம் ஒரே ஈரம். சீக்கிரம்போய் வேறு சேலை உடுத்திக்கொள். நான்கு நாட்கள் கலியாணத்திலும் நடமாட வேண்டாமா" என்று அவள் முதுகில் தட்டினர் நாணு.

"போதுமே உங்க அக்கரை. எல்லாம் இவ் வளவு பேர் எதிரில்தாணுக்கும்?" என்று அலக்ஷியமாய்க் கூறிவிட்டு வண்டியில்ஏறிக்கொண் டாளேயொழிய கமலத்தின் முகத்திலிருந்த திருப்தியும் மலர்ச்சியும் எவ்விதம் மறையும்?

"பார்த்தாயாஎவ்வளவு அக்கரைஅவருக்கு?" என்று காமு சொல்ல, "போதுமே பெருமை, ஏதோ ஆள்கண்ட சமுத்திரம் குதிக்கிறது. உனக்குத்தான் வேண்டியிருக்கு" என்று கமலம்சொல்ல வண்டிவேகமாய்ப்பங்களாவை நோக்கிச் சென்றது. ஊர்வலமும் வேகமாய்ச் சென்றது.

காமுவும் கமலமும் சகோதரிகள். பெரிய சம்சாரியின் வயிற்றில் பிறந்தாலும் மிகவும் செல்வமாக வளர்ந்தவர்கள். தந்தை ஆஸ்தி உள்ளவரானதால் பெண்களை நல்ல இடத்தில் கொடுத்தார். காமு பெரிய உத்தியோகஸ்த ரின் மனைவி. ஸால்ட் மணி என்று! சொன் ணுலே எல்லோருக்கும் தெரியும். காமுவிற்குப் புக்ககத்திலும் ஒன்றும் குறைவில்லை. எல் லாம் அவள் இஷ்டம். வைத்தது சட்டம். வேண்டியது நடக்கும். ஆனால் ஒரு குறை என்னவென்ருல் காமுவால் இரண்டு நாளைக்கு அக்கடா என்று பிறந்தகம் வந்து இரு க்க முடியாது. வேண்டுமானால் நினைத்த பொ ழுது அவருடன் வரவேண்டியது.

கமலமும் நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட் டாள். நாணு வக்கில். அதில் நல்ல சம்பாத் தியம். ஆனல் கமலத்திற்கும் காமுவிற்கும் வாழ்க்கையில் என்ன வித்தியாசமென்ருல் கம லம் காமுவைப் போல், நாகரிகமாய் வேண் டியதைச்செலவு செய்ய முடியாது. தானு பார் த்து எது வாங்கிக்கொடுப்பாரோசெய்வாரோ, அதுதான்.ஆனல் ஒன்றில் காமுவைவிடசுதந்தி ரம், அதாவது எப்பொழுதுவேண்டுமானலும் பிறந்தகமோ எங்கேயோ இஷ்டப்படி செல்ல லாம். இதுதான் இருவருக்கும் வித்தியாசம். தேகாரோக்கியத்தில் காமு மிகவும் பலவீனம். எவ்வளவு சௌகரியங்கள் இருந்தபோதிலும் எப்பொழுதும் மருந்துகள் சாப்பிடுவதுதான். வைத்தியர் வந்தபடிதான்.

கமலம் அப்படியில்லை; புருஷன் நன்ருய்ச் சம்பாதிக்கிருர் என்ருலும் பெரிய குடும்பம். அதில் வேலையோ எதுவோ செய்யாமல் உட் கார்ந்துகொண்டிருக்க முடியாது. பலவீன மோ எதுவோ ஒன்றையும் பொருட்படுத் தவும் முடியாது. எப்பொழுதும் மருந்து மா யம் என்று நிற்கவும் முடியாது. கூடியமட்டில் திடமாக இருந்தாள் என்றே கூறவேண்டும். தன்னுல் எது முடிந்ததோ அதைச்செய்வாள்; எங்கு வேண்டுமானுலும் செல்வாள்; சமாளித் துக்கொள்வாள்.

காமுவுக்கும் இப்படி எல்லாம் வரவேண் டும் இருக்கவேண்டும் என்று கொள்ளை ஆசை தான். ஆனல் கமலத்தைப்போல் அவளால் எப்படியோ இருக்கவும் முடியாது. அது முடிந்தாலும் மணி விடவேமாட்டார். தாமும் கூட இருந்து பார்த்து அவளைக் கவனித்தால் தான் அவருக்குத் திருப்தி. ஒரு இடமும் போகவிடமாட்டார்.

காமு கமலத்திற்கு ஒரே ஒரு அருமை அம்மான். அம்மானும் நல்ல பெரிய பணக் காரர். அவருடைய இரண்டாவது மகள் சாரதாவிற்குக் கலியாணம். அதற்குத்தான் காமுவும் கமலமும் வந்திருந்தார்கள்.

இரண்டு வருஷங்களுக்குமுன் மூத்தவளு டைய கலியாணத்திற்கு எல்லோரும் வந்திருந் தார்கள். உறவினரோ ஊரோ அப்படியே புரண்டுவந்திருந்தது. கமலமும் குழந்தைகளை யும் அழைத்துக்கொண்டு அவருடன் வந் திருந்தாள். ஆகமொத்தம் கலியாணத்திற்கு வராதவள் காமு ஒருவள்தான். மணி மட்டும் ஒரு வேளை வந்துவிட்டுப் போய்விட்டார். எல் லோருக்கும் இது மிகவும் குறைதான். அது வும் மூத்தமருமகளா? மாமாவிற்குக் காமுவின் பேரில்தான் மிகுந்த ஆசை. ,,அவள் வராதது கலியாணம்போலவே இல்லை" என்று சொல் லிக்கொண்டே இருந்தார். இந்தக் கலியா ணத்திற்கும் வராமலிருந்தால் அவர் மனம் கேட்குமா? கடிதமும் எழுதினர் நேரிலேயே சென்று மணியிடமும் சொல்லிவிட்டுக் காமு வையும் அழைத்துக்கொண்டு கலியாணத் திற்கு ஒருவாரம் முந்தியே வரவேண்டுமென்று கூப்பிட்டுவிட்டு வந்தார். காமுவின் வருகை யில் மாமாவிற்கோ வீட்டில் மற்றவர் களுக்கோ எல்லோருக்கும் மிகுந்த சந்தோ ஷம். அதுவும் ஒருநாள் முந்தியே வந்தாள் என்றது இன்னும் மகிழ்ச்சி.

"என்ன காமு, இப்படி அடையாளமே தெரி யாமல் போய்விட்டது? உடம்பு துரும்பாய்ப் போய் உன் அழகே எங்கேயோ போய்விட் டதே?" என்ருள் மாமி.

"அதை ஏன் கேக்கறே போ, வந்து இருடீ நாலு நாளைக்கு, உடம்பைப் பார்க்கலாம் என்ருல் வந்தால்தானே? அவள் ஆமடையானு அதுக்குமேலே. நாம் சொன்னுல் ஏதாவது லக்ஷியம் செய்தால்தானே? போறது இப் பொவாவது அனுப்பிச்சானே" என்ருள் காமுவின் தாயார்.

உண்மையில் அவர்கள் கூறியது சரி. காமு வின் அழகைப் பார்திருந்ருந்தவர்களுக்குத் தானே அதுவும் தெரியும்? இப்படிக் கேட் கிருர்களே என்று அவளுக்கும் ஒன்றும்

தோன்றவில்லை. "ஆமாம் எப்பொழுதும் உடம்புதான், ஒரே தொல்லைதான்" என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டுப் பேசாமல் இருந்துவிட்டாள். ஆனால் இந்த "அவர் ஏன் வரவில்லை? அழைத்துக்கொண்டு வரவில்லையா? ஒரு வேளை வந்துவிட்டுப் போகக் கூடாதா" என்னும் கேள்விகளும் கமலம் படுத்தும்பாடும் அவளால் பொறுக்கமுடியவில்லை. எவ்வளவு பேருக்குத்தான் பதில் சொல்வது? உண்மையில் அவளுக்குமட்டில் அவரும் கலியாணத்திற்கு வரவேண்டுமென்ற ஆசை இல்லையா? நானும் கமலமும் ஒற்றுமையாகச் சேர்ந்து வந்திருந்து கல்யாணத்திற்குச் செய்வதைப் பார்த்தால் அவளுக்குமட்டில் "நாமும் இப்படி இருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்" என்று தோன்றாமலா இருந்தது? அவளும் அறிவில்லாதவள் அல்ல. ஆனால் அவர் வராததே மேல் என்று தோன்றவேண்டுமென்றால் அதற்கும் தகுந்த காரணம் இல்லாமலா இருக்கும்?

மூன்று நான்கு வருஷங்களும் ஆய்விட்டன. ஒரு இடத்திற்குப் போவதோ ஒரு கலியாணத்திற்குப் போவதோ காமுவிற்குக் கட்டோடு பிடிக்காமல் போய்விட்டது. அதற்காகக் காமுவிற்குக் இதெல்லாம் பிடிக்காதா? எல்லோரோடும் சேர்ந்து இருக்கவேண்டும் என்ற ஆசைதான் கிடையாதா? எல்லாம் உண்டு. ஒருவேளை குழந்தைகள் பிடுங்கலா அல்லது சௌகரியக் குறைவா என்றால் அவளுக்கு என்ன குறை? அதெல்லாம் ஒன்றும் கிடையாது. மூன்று வருஷங்களுக்கு முன்பு மணியின் நண்பர் ஒருவருடைய கலியாணத்திற்குச் சென்றிருந்தார்கள். சென்றதில் இவர்களுக்கும் சந்தோஷம்; அவர்களுக்கும் பரம திருப்தி. எல்லாம்தான். எல்லாரோடும் இருப்பதோ,


# சேலம்
# கல்யாணப்பட்டு ஜவுளி ரகங்கள் வாங்கச் சிறந்த இடம்

# ராம விலாஸ்

## 396, கடைவீதி சேலம்.

★

**Proprietors:**

**S. N. Ramaswamy Chetty & Bros.**


பேசுவதோ, சிரிப்பதோ, சாப்பாடோ எல்லாம் வெகு நன்றாகவே இருந்தன. குழந்தைகளோ வேலையாட்களுடன் அவர்கள் பாட்டில் இருந்தார்கள். ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அவளுக்கு அப்படியே நாக்கைப் பிடுங்கிக்கொள்ள வேண்டும்போல் அவ்வளவு வெட்கமாய்ப் போய்விட்டது. ஒருவரையும் ஒன்றும் சொல்லிப் பயனில்லை. கோபித்துக் கொள்வதிலும் பயனில்லை. அங்கே சென்று அவர் ஒன்றுசொல்ல இவள் ஒன்று சொல்ல தர்க்கம் செய்வதும் பிடிக்கவில்லை. உடனேயே புறப்பட்டு வீடுவந்து சேர்ந்தவள்தான் "இனி தலைபோகும் விஷயமானாலும் சரி, எல்லோரும் சேர்ந்து போவதில்லை. ஒன்று அவராவது செல்லவேண்டும், இல்லை நானாவது செல்ல வேண்டும்" என்று தீர்மானம் செய்துகொண்டு விட்டாள். "ஒரு கலியாணம் கார்த்தி என்றால் எல்லோரும்தான் வருகிறார்கள். இப்படியா இருக்கிறார்கள்?" என்று நினைக்க நினைக்க அவளால் தாங்கவே முடியவில்லை. "எதுவாய் இருந்தாலும் நம்மாத்தோடு இருந்துவிட்டுப் போகட்டும்" என்று கடைசியில் தீர்மானம் செய்துகொண்டவள்தான்.

அம்மானின் முதல் பெண் கலியாணத்திற்கும் இதை எல்லாம் வைத்துக்கொண்டுதான் அவள் போகவில்லை. அவரைமட்டில் அனுப்பி வைத்தாள். அதுவே அம்மானுக்கு மிகுந்த குறை. இப்பொழுது நேரில் அழைக்க வந்து விட்டார். என்னசெய்வதென்று காமுவிற்கு விளங்கவில்லை. போகவும் ஆசை. போனாலும் தனியாகப் போகவேண்டுமென்ற தீர்மானம். இந்தக் குழந்தைகளையும் இழுத்துக்கொண்டு அங்கே சென்று அலைவதைவிட அவரே சென்று விட்டு வருவது மேல் என்றுதான் தோன்றியது அவளுக்கும். நீங்கள் வேண்டாம் நான் மட்டில் போகிறேன் என்று கூறப் பிடிக்கவும் இல்லை. எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்துவிட்டுக் கடைசியில் "நீங்கள் வேணும்னா போய்விட்டு வந்துவிடுங்களேன். நான் எங்கேயும் வரவில்லை" என்றாள். ஆனால் மணிக்கு இது சரியாய்த் தோன்றவில்லை. அப்பொழுது தான் அழைத்துக்கொண்டு போகவில்லை. இப்பொழுதும் அப்படியே சென்றால் எல்லோரும் என்ன சொல்லுவார்கள்? என்று நினைத்துக்கொண்டவர் "நீ வராமல் நான் மட்டில் போனால் நன்றாய் இருக்குமா? உங்க அம்மானாத்துக் கலியாணம், நீயும் வரத்தான் வேண்டும்" என்றார்.

வேண்டாம், ஒன்றும் நாமாகச் சொல்ல வேண்டாம் என்றாலும் இதற்குமேல் காமுவால் பேசாமல் இருக்கமுடியவில்லை.

"ஒன்று நீங்களாவது போங்கள், இல்லை நானாவது போய்விட்டு வருகிறேன். இதுகளையும் இழுத்துக்கொண்டு இரண்டுபேரும் எங்கேயும் போகவேண்டாம்" என்றாள் தீர்மானமாய்.

மணியும் சொல்லிப் பார்த்தார். அடிக்கடி இவள்கூட ஒரு இடத்திற்கும் வரமாட்டேன்



501
SPECIAL
HOUSEHOLD SOAP
SPECIALLY MADE FOR
WASHING DELICATE MATERIALS
A TATA PRODUCT
501
SPECIAL
501
ஸ்பெஷல்
வீட்டிற்குரிய
ஸோப்பு
வெள்ளை வஸ்திரங்களை
வெண்மையாகவே
யிருக்கச்செய்கிறது
கலர் ஆடைகளை
பளபளப்பாகவே
யிருக்கச்செய்கிறது
எல்லா துணிமணிகளையும்
நீடித்துழைக்கச்செய்கிறது
A TATA PRODUCT
டாம்கோ விற்பனை இலாகா
19, வாணியவீதி, P. B. நெ. 31, சென்னை
தி. டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

என்ற பிடிவாதமும் அவருக்குப் பிடிக்க வில்லை. கடைசியில் பேச்சு வலுத்து இருவருக்கும் சண்டை வரையிலும் வந்துவிட்டது.

"ஒருநாள் எங்கேயாவது போய் நிம்மதியாய் இரு என்று உங்கள் வாயால் சொல்லிவிடுவீர்களோ? எல்லாருமாய்ப் போய்ச் சந்தி சிரிக்கணும்." என்று கடைசியில் காமு சிள்ளென்று விழுந்தாள். எப்படியோ கடைசியில் அவருக்கும் மனம் வந்தது. காமு மட்டில் கலியாணத்திற்குப் புறப்பட்டுவிட்டாள்.

காமுவிற்கும் மிகவும் சந்தோஷம். எல்லோரோடும் சேர்ந்து இருந்து எவ்வளவு வருஷங்களாய் விட்டன? எவ்வளவோ பார்க்காத உறவினர்கள் எல்லாம் வந்திருப்பார்கள். அதுவும் கமலம் வந்திருப்பாள் என்று நினைத்துக்கொள்ளும்பொழுது அவள் மனதில் எழுந்த எண்ணங்களுக்கு அளவே இல்லை. எவ்வளவோ ஆசைகள். கமலத்திற்கும் தனக்கும் வேண்டிய புடைவைகளை எடுத்துக்கொண்டாள். எல்லா நகைகட்டுக்களையும் எடுத்து வைத்துக்கொண்டாள். புறப்படும்பொழுது மணியைப் பார்த்தால் அவளுக்கே சற்று இரக்கமாய் இருந்தது. குழந்தைகளையும் விட்டு விட்டுக் கலியாணம் முடிந்தவுடன் வருவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பி வந்தாள்.

ஃ ஃ ஃ ஃ

மழை பலத்ததால் எல்லோரும் வேகமாய்ப் பங்களாவை அடைந்தனர். ஜானுவாசம் எல்லாம் முடிந்து சாப்பாடு நடந்தது. யார் என்ன செய்தார்களோ, காமுவும் கமலமும் ஒன்றையும் கவனிக்கவில்லை. இரண்டு வருஷங்களாய்ச் சேர்ந்து இராத சகோதரிகளுக்கு எவ்வளவு பேச்சும் நகைப்பும்தான் இராது! இருவருக்கும்வயதும்அதிகவித்தியாசம்இராது. காமு புக்ககம் போகும் சமயம் கமலம் எவ்வளவு வருத்தப்பட்டிருப்பாள் தெரியுமா? அவ்வளவு ஆசையாய் இருந்தவர்களுக்கு இப்பொழுது எவ்வளவு சந்தோஷமாய்த்தான் இருக்காது! கண்விழிக்கக் கமலத்தின் தேகத்தில் கொஞ்சம்தெம்பாகிலும் இருந்தது. காமுவால் அதுவும் முடியாது. போதாக்குறைக்கு நான்கு மாதங்கள். ஆனாலும் ஆசை அவளை விடவில்லை இரவுமுழுதும் ஓயவில்லை. "சள,பள,சள,பள," என்று அப்படிப் பேசினார்கள். கண்கொட்ட வில்லை. அவ்வளவு தானே? தன் உள்ளத்தை எல்லாம் அவனிடம் கொட்டினாள் காமு, தன் உள்ளத்தில் இருப்பதை எல்லாம் அவளிடம் கொட்டினாள் கமலம்.

உயர்ந்த கட்டிலும் கொசுவலையுமாய்ப் படுத்துக்கொள்ளும் காமு, தன்னுடைய படுக்கையையும் பிரிக்கவில்லை. கமலத்துடன் கலியாண வீட்டு ஜமக்காளத்திலேயேபடுத்துக் கொண்டிருந்தாள்.

"ஐயோ, படுக்கையைக்கூட போட்டுக் கொள்ளாமல் இருக்கிறாயே? பிரித்துக் கொள்டி" என்றாள் கமலம் காமுவைப் பார்த்து.

"நீதான் பிரித்துக்கொண்டு படுத்துக்கொள் நான் இப்படியே படுத்துக் கொள்ளுகிறேன்" என்றாள் காமு.

கமல: அடியம்மா! மகாராஜி, எங்கேயாவது கொஞ்சம் முணுக் என்கட்டும் வந்துவிடுவார் அத்திம்பேர் கழியைத் தூக்கிக்கொண்டு எங்களை எல்லாம் அடிக்க.

காமு: ஆமாம், வந்துவிடுவார். இதோ பார்! இங்கே இருக்கார். உனக்கு ஏதாவது ஜலதோஷம் என்றால் நான்னு பதில் சொல்லனும்? இந்தக் காமு வந்திருந்தா...........அது இதுன்னு அப்பொழுதுன்னு தெரியும்?

கமல: ஆமாம் உங்களைப்போல் என்று நினைத்துக்கொண்டு விட்டாயாக்கும்? அவர் எங்கே இருந்தால் எனக்கு என்ன? நான் எங்கே இருந்தால் அவருக்கு என்ன? எல்லாம் உங்களுக்குத்தான். வேணுமானால் பார்த்துக் கொண்டு இரேன் நாளைக்காலை.

காமு: என்னத்தைப்பார்த்துக்கொண்டிருப்பது?

கமல:- அத்திம்பேர் வரப்போகிறார் பாரேன் என்று சொல்லிவிட்டுக் கடகடவென்றுச் சிரித்தாள்.

"போடீ, ஒன்றும் வரமாட்டார். வருவதாய் இருந்தால் என்னுடன் வரமாட்டாராக்கும்?" என்று காமு சொன்னாளேயொழிய ஏதோ ஒரு விதமான எண்ணம் அவளுடைய மனதில் உறுத்தியது, பேசாமல் படுத்துக்கொண்டாள். இப்படி எல்லாம் பேசிவிட்டு எப்பொழுது தான் கண்ணயர்ந்தாளோ தெரியாது.

"எழுந்திருங்கோடீ, பரதேசகோலம் புறப்படணும்" என்று தாயார் வந்து எழுப்பியதும் தான் அவர்களுக்குத் தெரியும். இருவரும் எழுந்து தயாரானார்கள்.

முகூர்த்தத்திற்குள் எல்லோரும் அலங்காரங்கள் செய்துகொண்டு புறப்பட்டனர். காமுவுக்குத் தானும் கமலமும் ஒரே தினுசாய்ச் சேலைகள் உடுத்திக்கொள்ள வேண்டுமென்ற எவ்வளவோ ஆசை. வேண்டியதை எடுத்து வந்திருந்தாளா! இருவரும் ஒரே மாதிரி உடுத்துக் கொண்டார்கள். காமு, தன்னுடைய கமல நெக்லேஸ், வளைகள், இரட்டை ஜிமிக்கிகள் எல்லாவற்றையும் கமலத்திற்குப் போட்டு அழகு பார்த்தாள். கமலம் தான் இப்பொழுது காமுவைவிட அழகாய் இருக்கிறாளா? அலங்காரங்களைச் செய்துகொண்டு "ஜில், ஜில்"லென்று இங்கும் அங்கும் நடைபோட்டுக்கொண்டுபெருமையில் ஆழ்ந்திருந்தாள்.

காமுவிற்கு இதற்கெல்லாம் எங்கே? அலங்காரங்களா செய்துகொண்டு செய்துகொண்டு அலுத்துவிட்டது. விசாரிப்பவர்களும் பேசுபவர்களும் ஒருவரா இரண்டுபேரா? பேச்சில் முனைந்திருந்தாள்.

"என்ன கமலம்? இரவலில் பிரமாதமாய் ஜொலிக்கிருயே? இதைப் பார்த்தால் எனக்குக்கூட ஒரு பெண்ணைப் பிறந்திருக்க வேணுமென்று ஆசையாய் இருக்கிறதே?" என்று நடுவில் நாணு வேறு பரிகாசம் செய்ய.

"பாரேண்டீ, இதுகூட இவருக்குப்பொறுக்கவில்லை. ஆமாம்! நீங்க ரொம்ப வாங்கிக் கிழித்துவிடுகிறீர்களோன்னே இல்லாவிட்டா" என்று கமலம் சொல்ல

"எதற்காக அவளைப் பிடித்து? அவள்தான் மாட்டவே மாட்டேன் என்ருள். எனக்குத்தான் ஆசையாய் இருந்தது. பேசாமே இருங்கோ" என்று காமு தங்கைக்குப் பரிந்து கொண்டுவர, கலியாணத்தைக்கூட கவனிப்பார் இருந்தனரே, இல்லையோ இவர்களிடம் எல்லோரும் சூழ்ந்துகொண்டு நின்ருர்கள்.

இந்த அமர்க்களத்தின் நடுவில் மாமாவின் குரல் பெரிதாய்க் கேட்டது. "காமு" என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே வந்தார்.

சத்தம் பெரியதாய் இருக்கவே காமுவும் சற்றுத் திடுக்கிட்டு "ஏன் மாமா" என்று கேட்டுக்கொண்டு வந்தாள்.

"அடீ, சொன்னேனே இல்லையோ? அத்திம்பேர் வந்திருக்கார். நீ விட்டுவிட்டு வந்தால் அவருக்கு வரத் தெரியாதோ?" என்ருள் அவசரமாய் வந்த கமலம்.

காமுவிற்கு ஒன்றும் தோன்றவில்லை. சற்றே தயங்கியவள் "குழந்தைகள்?" என்ருள்.

"குழந்தைகளைக் காணமே; ஏன் அத்திம்பேரே! குழந்தைகளை அழைத்துக்கொண்டு வரவில்லையா?" என்ருள் கமலம்.

"இல்லை," என்று பதில் கூறிவிட்டுக் காமுவைப் பார்த்துப் புன்னகை புரிந்தார் மணி.

மணியைப் பார்த்ததும் காமுவின் முகத்திலோ செய்கையிலோ ஒருவிதமான மகிழ்ச்சியும் தென்படவில்லை. முகமே மாறிவிட்டது. "நான் சொல்லிவிட்டுத் தானே வந்தேன்! இந்த இழவு தெரிந்திருந்தால் நான் வந்தே இருக்கமாட்டேன். குழந்தைகளையும் தனியாய் விட்டுவிட்டு ஒரு வேளைக்கும் அரை வேளைக்கும் வராவிட்டால் என்ன முழுகிப் போய்விட்டது?" எனச் "சுள்"ளென்று விழுந்தாள்.

"என்னடீ இது! ரொம்ப நன்ருய் இருக்கிறதுபோ. தேமென்னு கலியாணத்திற்கு ஆசையாய் வந்தவரைப் பிடித்து இப்படியா?" என்று கோபித்துக்கொண்டாள் கமலம்.

ஃ ஃ ஃ

யார் எப்படி இருந்தால் என்ன? பெரிய மாப்பிள்ளை அதிசயமாய் வந்திருக்கிருர். எல்லோருக்கும் ஒரே ஆனந்தம். விழுந்து விழுந்து மாப்பிள்ளைக்கு உபசாரம். மாடியில் ஒரு தனி அறை. அங்கேயே எல்லாம் நடக்க ஆரம்பித்தது. காப்பி எடுத்துப் போவாரும் பலகாரம் எடுத்துப் போவாரும் மாடிக்கும் கீழுக்குமாய் ஓடிக்கொண்டிருந்தனர். கமலமும் நாணுவும் அத்திம்பேருடன் பேசுவதில் முனைந்திருந்தனர். ஆனல் காமுவிற்கு ஒன்றும் ஓடவில்லை. கலகலப்போ பறந்துபோய்விட்டது. முகத்தில் இருந்த சிரிப்பே மறைந்துவிட்டது. "இவர் வராமல் கலியாணம் நடக்காதாக்கும்? குழந்தைகளையும் தனியாய் விட்டுவிட்டு இங்கு என்ன வேலை? தலையிலெழுத்து" என்று முணுமுணுத்துக் கொட்டிக்கொண்டே இருந்தாள்.

"இவளுக்கு என்ன இவ்வளவு துர்க்குணம்? என்ன இவ்வளவு பிடிவாதம்? பொம்மனாட்டிக்கு இவ்வளவு முன்கோபமா? கொஞ்சம் அவை அடக்கம் வேண்டாம்? தலையில் தூக்கி வைத்துகொண்டிருக்கும் புருஷனிடமா இவ்வளவு படபடப்பு? வந்தவரிடம் முகம்கொடுத்து ஒரு வார்த்தை பேசமாட்டாள்? அதற்குத்தான் அவர் ஒரு இடத்திற்கும் வருகிறதில்லை." என்று கோபித்துக்கொண்டாள் கமலம்.

காமு:—ஆமாண்டீ, இவர் ஒருவர்தான் மாப்பிள்ளை. அதற்கடுத்தாப்போல் அவர் இல்லையா எல்லோரோடும் கலகலப்பாய்? அவரால் யாருக்காவது ஒரு சிரமம் உண்டா? மாடியில் தனியாய் ஒரு அறை. வாய் கொப்புளிக்க முதற்கொண்டு ஜலம் கொண்டு கொடுக்கணும். மாடியில் ஏறி உட்காருகிறது. யாருக்கு வேண்டியிருக்கிறது!

கமல;— இதற்கு என்னடீ செய்வது? ஒவ்வொருவருடைய சுபாவம் ஒரு தினுசு. எல்லோரும் ஒரே மாதிரியாக இருப்பார்களோ? இதை எல்லாமா குற்றமா எடுத்துக் கொள்ளுவார்கள்? அவருக்கென்ன? வீட்டில் எப்பொழுதும் கைகட்டிப் பத்து ஆட்கள். திடீரென்று இன்னிக்கு எப்படிடீ எல்லாம் வரும்? தேமேன்று அவர் பாட்டில் ஏதாவது வாயைத் திறக்கிருரா? இது வேணும் வேண்டாம் என்றுகூட சொல்வதில்லை. இருந்தாலும் நீ செய்வது கொஞ்சம்கூட நன்ருய் இல்லை. உனக்கென்ன அவரால் கஷ்டம். எது வேண்டுமானுலும் செய்துவிட்டுப் போகிறேன். நீ வாயை மூடிக்கொண்டிருந்தால் போதும்.

'செய்வாய், எல்லாம் செய்வாய், இன்னும் ஒரு மெத்தை கட்டிவேண்டுமானுலும் உட்கார

வையேன். எனக்கென்ன?" என்று சொல்லிக்கொண்டே போய் விட்டாள் காமு. காமு இப்படி இருந்தது ஒருவருக்கும் பிடிக்கவில்லை.

மாமாவுக்கோ கமலமும் காமுவும் வந்ததே பெருமை. அதற்குமேல் வராத மாப்பிள்ளையும் வந்திருக்கிறார் என்றால் கேட்க வேண்டுமா அமர்க்களத்திற்கு? வருவார் போவார், சம்பந்தி எல்லோருக்கும் மாப்பிள்ளையை அறிமுகப்படுத்துகிறார். மாலை பாட்டுக் கச்சேரியும் வரவேற்பும் தடபுடல். கமலத்திற்கும் காமுவுக்கும் வேலை சரியாக இருந்தது. சம்பந்தி சாப்பாடு முடிந்து இவர்கள் எல்லோரும் சாப்பாட்டை முடிக்கும் சமயம் வெகு நேரமாய்விட்டது. கமலம், காமு, நாணு, மாமா எல்லோரும் சாப்பிட்டுவிட்டு "உஸ் அப்பாடா" என்று வந்து உட்கார்ந்து கொண்டார்கள். மாப்பிள்ளை மணி பாட்டுக் கச்சேரி முடிந்ததும் மெத்தைக்குச் சென்றவர்தான். "மாப்பிள்ளை எங்கே படுத்துக் கொள்ளப் போய்விட்டாரா? "என்றுகேட்டுக் கொண்டே அவரை விசாரிக்கச் சென்றார் மாமா. "உங்களுக்குத்தான் மிகுந்த சிரமம்" என்றார் நாணு காமுவைப்பார்த்து,

"இதென்ன பிரமாதம்? உங்களுக்குதான் மிகுந்த சிரமம்" என்றாள் காமு.

இப்படி ஒருவரை ஒருவர் ஸ்தோத்ரம் செய்துகொண்டு இருந்துவிட்டுப் பிறகு நாணு படுக்கைக்குச் சென்று விட்டார்.

கமலமும் காமுவும்படுத்துக்கொண்டார்கள். அதற்குள் மாமா மெத்தையிலிருந்து இறங்கி வந்தார். "காமு, மாப்பிள்ளை பால் வேண்டுமென்கிறார்; நல்ல பாலாய்ப் பார்த்து வாங்கிக் கொண்டுபோய்க் கொடு" என்றார் காமுவைப் பார்த்து.

"சரி இது ஒரு சீரா? ஒன்றில் ஒன்று குறையக் கூடாதே. கமலும் சற்றுப் போய்ப் பார்த்துவிட்டு வாயேன். கோவித்துக்கொண்டால் அப்புறம் கோவிந்தாதாண்டீ" என்றாள் காமு கமலத்தைப்பார்த்து.

இப்பொழு கமலத்திற்குச் சிறிது கிராக்கி வந்துவிட்டது. "ஏன்? வந்தவரை இன்னும் ஒரு வார்த்தை நீ விசாரிக்கவில்லையே. நீதான் எடுத்துப்போய்க் கொடுத்துவிட்டு வாயேன்" என்றாள் துடுக்காய்.

"என்னால் ஒரு அடி எடுத்துவைக்க முடியாது. தெரியுமா? வேணுமானால் வாங்கிச் சாப்பிடட்டும். இல்லாவிட்டால் பேசாமல் இருக்கட்டும். கலியாணத்திற்கு வந்தவர் கலகலவென்றிருக்காமல் மெத்தையில் யார்போய் உட்காரச்சொன்னார்கள்?" என்று சொல்லிக் கொண்டே காமு படுத்துக்கொண்டுவிட்டாள்.

"சரி, நீ சித்தே பேசாமல் இரு. நான் போய் பார்த்துக் கேட்டுவிட்டு வருகிறேன். போய்க் கேட்காவிட்டால் வாயை மூடிக்கொண்டாவது இரு" என்று கூறிக்கொண்டே கமலம் மெத்தைக்கு ஏறிச் சென்றாள்.

மெத்தையில் பெரிய அறை. பெரிய கட்டிலில் இரண்டு படுக்கைகள் போடப்பெற்றிருந்தன. மணி ஒன்றில் படுத்துக்கொண்டிருந்தார். கமலம் போட்டுக்கொண்டிருந்த நகைகளும் அணிந்திருந்த புடவையும் காமுவினுடையதா? சற்று ஏமாந்துவிட்டாரோ என்னவோ "காமூ" என்று கூப்பிட வாயெடுத்தவர், நீயா? கமலமா?" என்றார் ஏமாற்றத்துடன். கமலத்திற்குச் சிறிதுநேரம் ஒன்றும் தோன்றவில்லை. காமுவினிடத்திலிருந்த கோபம் திடுதிடென்று வந்துவிட்டாளே ஒழிய அவ்வறையில் அவர் தனியாகப் படுத்திருப்பதும், கம்மென்ற ஊதுவத்தியின் மணமும் அவளை எவ்வளவோ யோசனைகளில் ஆழ்த்தியது. அறை முழுவதும் ஓர் முறை நன்றாய்ச் சுற்றிப் பார்த்தவள் "என்ன அத்திம்பேரே? கீழேயே வரவில்லை? சாப்பாடு ஏதாவது வந்ததோ இல்லையோ?" என்றாள்.

மணி:—"எல்லாம் வந்தது. உங்க அக்காவிற்கு இன்னும் என்னை வந்துகூட பார்க்க முடியவில்லையாமோ? பால் வேண்டும் என்பதுகூடமறந்துபோய்விட்டதாக்கும்" என்றார். அவருடைய பேச்சில் சிறிது ஆத்திரம் தொனித்தது.

அந்த அறையில் இருந்த ஏற்பாடுகளையும் இவரையும் பார்க்கப் பார்க்கக் கமலத்திற்கு என்னவோ செய்தது. ஒருபுறம் ஆச்சரியம், ஒருபுறம் கோபம், ஒரு பக்கம் வெறுப்பு. எல்லாம் சேர்ந்து அவளால் அவ்விடம் நின்று பேச முடியவில்லை. ஒரு திருப்பல் திருப்பிக் கொண்டவள் தடதடவென்று கீழே இறங்கி வந்தாள். நேரே காமுவிடம் வந்தாள். "ரொம்ப நன்றாய் இருக்கு போ!" என்றாள்.

படுத்துக்கொண்டிருந்தவள் காமு எழுந்து உட்கார்ந்தாள். "என்னடீ" என்றாள் கமலத்தைப் பார்த்து.

கமல:—என்ன? பால் கொண்டுவரச்சொல்றார் உன்னை. கோபம் போலிருக்கிறது அவருக்கு.

"பார்த்தாயோன்னோ எல்லாவற்றையும்? இப்படித்தாண்டீ எப்பொழுது பார்த்தாலும் கூத்துக்கட்டி அடிக்கிறது. என்னடீ செய்வேன் நான். என்று சொல்லிக்கொண்டே காமு கமலத்தின்மீது சாய்ந்தாள். அவளையும் அறியாமல் கண்ணீர் கமலத்தின் தோள்களில் வழிந்தது.

27-ஆம் பக்கம் பார்க்க.

# இரு சகோதரர்கள்

*ஹரிணி*

உலகத்தில் தற்புகழ்ச்சி என்னும் வியாதியினால் பீடிக்கப்படாத மனிதனே கிடையாது. அதனுடன் குடும்பப் பெருமையும் சேர்ந்துகொண்டால் கேட்கவே வேண்டியதில்லை. அது மனிதனைப் பைத்தியமாகச் செய்துவிடும். அந்த வியாதி சிலரைத் தன் நிலை தெரியாமல் தலை விரித்தாடும்படிகூட செய்துவிடும். ஓயாமல் தன் வீட்டில் விருந்துவந்த பெருமையும், தன் பாட்டனார் காலத்தில் அன்னதானமளித்த பெருமையும் ஆக, கேட்பவர்களின் காதைத் துளைத்துவிடுவார்கள். சில சமயம் அப்பெருமையின் விஷத்தில் தோய்ந்த சொல்லம்புகளால் எதிராளியின் இதயத்தைக்கூட துளைத்துவிடுவார்கள். இது அக்கொடிய வியாதியினுடைய கோளாறு.

தினகரலால்தேசாய்கூட இதே வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்தான். அவன் ஒரு பழமையான பெரிய குடும்பத்தில் பிறந்தவன் அவனுடைய முன்னோர்கள் குஜராத் ராஜ்யத்தை நிலைபெறச் செய்வதில் மிகவும் ஊக்கத்துடன் பாடுபட்டனர். அந்த ராஜ்யாதிகாரம் பலஹீனமடைந்த சமயத்தில் அங்கே முகம்மதியர்களைக் கொண்டுவந்து நிலைபெறச்செய்வதிலும் அதே குடும்பத்தினர்தான் வெகு அக்கறையுடன் வேலை செய்தனர். அதற்காகச் சிலர் பிராணத்தியாகம் செய்யக்கூட பின்வாங்கவில்லை.

பிறகு முகம்மதியர்களின் சிம்மாசனம் ஆட ஆரம்பித்தது. அப்பொழுது பேஷ்வா "காயக்பாடுகள்" இதே தேசாய் குடும்பத்தினரின் உதவியைத்தான் வேண்டினர். அதேமாதிரி மஹாராஷ்டிரர்களுடைய பாக்ய சூர்யன் அஸ்தமித்தவுடனே தேசாய் குடும்பத்தினர் கம்பெனி வீரர்களுக்கும் உதவி செய்தனர்.

தேசாய் குடும்பத்தினர் உதவிசெய்திராவிட்டால் இவர்களுடைய ராஜ்யங்களை நிலைபெறச் செய்யமுடிந்திருக்காதென்றுதான் தினகரலாலின் பூரண நம்பிக்கை. இதற்கு அத்தாட்சியாக அவன் பார்ஸி, மராட்டி, ஆங்கிலம் முதலிய பாஷைகளில் நற்சாக்ஷிப் பத்திரங்களும் கடிதங்களும், உத்தரவுகளும் நிறைந்த பெரிய கட்டு ஒன்று வைத்துக்கொண்டிருந்தான். வருகிறவர்களிடமெல்லாம் அவைகளைப் படித்துக்காட்டுவதற்கும், முன்னோர்களின் வீரதீரபராக்கிரமத்தைப் புகழ்ந்து பாடுவதற்கும் சளைக்கவேமாட்டான். அவன் தன் சகபாடிகளின் நடுவில் தலை நிமிர்ந்து உட்கார்ந்து, வீராவேசத்துடன் பேசும்போது பார்க்க வேண்டும். "கேசவா, இதைக்கேளடா! முகம்மத் பேகடாவினுடைய சைன்யத்திற்குச் சரியான சமயத்தில் உணவு அளித்துக் காப்பாற்றியது யார் என்று நினைத்தாய்? இந்திரஜித் தேசாய்தான் தெரியுமா? வேட்டைக்குவந்த அக்பர் காட்டில் வழிதப்பித் திண்டாடியபோது அவருக்குச் சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்தது யார்? பத்மநாபதேசாய்தானே. ஔரங்கசீப்பினுடைய யானை சேற்றில் அழுந்திவிட்டதல்லவா? அப்போது கிராமவாசிகளைக் கூட்டி யானையை விடுவித்தது நமது குமாரதேசாய்தான். சமயோசித புத்தியுடன் வேலை செய்வதில் நமது குடும்பம் இருக்கிறதே......" என்று தடபுடலாகப் பேசுவான்.

சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுக்கு ஏனோ இச் சம்பவங்கள் கண்ணில் படவில்லை. தங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் ஒரு இடத்திலும் இவைகளைக் குறிக்கவில்லை. ஒருவேளை மறந்துவிட்டார்களோ என்னவோ? எப்படியாவது இருக்கட்டுமே. தினகரலால் குடும்பத்தினருக்குப் பெரிய ஜமீன் இருந்ததென்னவோ உண்மைதான். அக்காலத்தில் மிக்க வைபவத்துடன் வாழ்ந்துவந்த குடும்பம் என்பதற்கும் சந்தேகமில்லை. ஆனால் அந்தப் பழைய வைபவமும், தடபுடலும் தினகரலால் காலத்தில் இருளில் மங்கிக் கிடந்தன.

அவனுக்குப் புராதனமான, பகட்டான ஒரு பெரிய பங்களா இருந்தது. வேலைக்காரர்களுக்கும் குறைவில்லை. சாரட்டு வண்டி, மாட்டு வண்டி, இருந்தன. ஆனால் குதிரை இல்லை, இறந்துவிட்டது. புழுதியடைந்த சாரட்டு, இடிந்த 'காடிகானா'வில் ஒடிந்து கிடந்தது. புதிய குதிரை விலை பேசிக்கொண்டுதானிருந்தான் தினகரன். விருந்தாளிகளின் வரிசை ஓயவேயில்லை. கலெக்டர், தாசில்தார், ரயிலதிகாரி, எல்லாரும் தினகரனின் விருந்தாளிகளாகிவிடுவார்கள். அவர்களை வற்புறுத்தி அழைத்து வருவதில் தினகரன் கைதேர்ந்தவன். நாளுக்குநாள் விருந்தினர் கூட்டம் அதிகரித்ததேதவிர குறையவில்லை. ஆனால் 'கஜானா'வில் பணம் குறைந்துகொண்டே வந்தது.

தினகரனுடைய பொருளாதார நிலைமையைப் பற்றி விருந்தினர்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? ஆனால் அவனுக்குக்கடன்கொடுத்த மார்வாடிக்கு ரொம்ப கவலைப்படவேண்டிய சந்தர்ப்பம் உண்டாகிவிட்டது. எல்லாச் சொத்துக்களும் அடமானத்தில் இருந்தன. மேலும் கடன் கொடுக்கப் பயந்தனர். இப்பொழுது யாருமே கையைத் திறப்பதில்லை.

தினகரன் என்னவோ "மார்வாடிகள் காலிப்பயல்கள், அல்ப தரித்ரன்கள், உதைக்க வேணும் படவாக்களை" என்று வாய்க்கு வந்தபடி கூச்சலிட்டுக் கொண்டிருந்தான். மூலதனத்திலிருந்து மூன்று பங்கு பணத்தை வட்டிக்காகக் கொடுத்துங்கூட இன்னும் கடன் தீர்ந்தபாடில்லை. சாவுகார்களுடைய மாயையைப் பரமாத்மாகூட அறிந்துகொள்ள முடியாது போலிருக்கிறது. அவர்கள் மூன்று பங்கு, நான்கு பங்குவீதம் வட்டியுடன் கடன் கொடுப்பதற்கும் அஞ்சுவதில்லை, பிறகு அவர்களே கோர்ட்டில் வழக்குத் தொடுத்துப் பணம் பறிப்பதற்கும் தயங்குவதில்லை.

2

தினகரன் மார்வாடிகளுடைய இந்த அல்பத் தனத்தைக்கூட பொறுத்துக்கொண்டுவிடுவான். ஆனால் அவனுடைய ஒன்றுவிட்ட சகோதரன் விஜயலால்தேசாயினுடைய நீசத்தனத்தை அவனால் கொஞ்சம்கூட சகிக்கவே முடியவில்லை.

விஜயலால் தினகரனுடைய உதார குணத்தைக் கண்டு பயந்துவிட்டான். வீண் செலவென்று கூறி, 'கோர்ட்டி'ல் வழக்காடி, ஜயித்துத் தன்பாகத்தைப் பிரித்துக் கொண்டது தினகரனுக்குப் பிடிக்கவேயில்லை. பிறகு தன் பங்குச் சொத்துக்களுடன் தனியாக வாழ்ந்து வந்தான் விஜயலால்.

பலதலைமுறைகளாக ஒன்றாக வாழ்ந்த குடும்பம், இப்படிப்பிரிந்து விட்டது அழகாயில்லை என்பது தினகரன் அபிப்பிராயம். கண்டபடி தாறுமாறாகச்செலவழித்துக்குடும்ப கௌரவத்தை அழிப்பது நன்றாயில்லை என்பது விஜயனின் அபிப்பிராயம், அவ்வளவுதான். இருவரும் ஒருவரை யொருவர் விரோதபாவத்துடன் பார்த்துக்கொண்டனர். தங்களுடைய வீரதீர முன்னோர்களைப்போல் கையில் கத்தியுடன் சண்டையிடக்கூடிய வீரத்தனம் இருவரிடமும் இல்லை. இருந்தாலும் வாய்ச்சண்டை மூலமாக முன்னோர்களின் கௌரவத்தைக் காப்பாற்றி வந்தனர்.

இருவர் வீட்டிற்கும் நடுவே ஒரே சுவர். பாகம் பிரிந்தபோது வீட்டின் நடுவே போட்ட சுவர்தான் அது. இதனால் அவர்களுக்கு மிக்க அனுகூலம் உண்டாயிற்று. 'நேரில் சண்டையிட்ட சமயம் போக மற்றச் சமயங்களில் சுவரின் இருபுறத்திலிருந்தும் ஒருவர்மீது ஒருவர் அர்ச்சனை செய்துகொள்ள மிகவும் அனுகூலமாயிருந்தது.

"ஓ! இவன் மனிதனா? தேசாய் குடும்பத்துக்கே அவமானம். அவன் மார்வாடின்னா. தேசாயா அவன்?" என்று சொல்லும்பொழுது தினகரன் சற்றுக் குரலை உயர்த்தியே பேசுவான். இது விஜயனின் கோபத்தைக் கிளப்பி விடும். உடனே அவன் "முட்டாள் கண்ட

25-ஆம் பக்கம் தொடர்ச்சி)

"போடி எக்கேடு கெட்டுப் போகட்டும்" என்றாள் காமு. என்ன செய்வது? முரட்டாத்மா சிறிது நேரம் கமலத்திற்கும் ஒன்றும் தோன்றவில்லை. "தேமேன்னு பாவம் நீ என்ன செய்வது? அது போனவழிதானே போகவேண்டும். பாலை எடுத்துக்கொண்டு போய்த்தொலை. பேசிக்கொண்டால் வெட்கக் கேடு" என்று ஒரு டம்ப்ளர் பாலை எடுத்து அவள் கையில் கொடுத்தாள், பிறகு கமலத்திற்குத் தூக்கமே பிடிக்கவில்லை,

மறுநாள் காலை காமு ரயிலுக்குப் புறப்பட்டு விட்டாள். கேட்கவேண்டுமா கேள்விகளுக்கு. "ஏன்?" ',ஏன்?" "ஏன்?" என்றுஒரே பல்லவி: காமு வாயே திறக்கவில்லை, "தேமேன்னு பாவம் குழந்தைகளைத் தனியாய் விட்டுவிட்டு வந்திருக்கிறாளோ இல்லையோ? இருப்புக் கொள்ளவில்லை அவளுக்கு.' என்று சொல்லிச் சமாதனப்படுத்திக் கொண்டிருந்தாள் கமலம். தேமேன்னு அவள்தான் வேறு என்ன சொல்வாள் பாவம்!





தாய்மார்களே!
உங்களுடைய குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளை நீக்கவும் தடுக்கவும்

# கிரைப்-விட்-டி

மிகவும் அவசியமானது

*Distributors in Ceylon:-*

LAJAPATHRAI STORES
25/¼ Dam Street, Pettah, COLOMBO

பயல்களுக்கு விருந்துசெய்து, மாலை போட்டு விட்டால் இவனுக்கு உடனே மோக்ஷம்; பெருமையைப்பார். வரட்டு ஜம்பம்'' என்று கர்ஜிப்பான்.

"கருமிப் பயல்; குடும்ப கௌரவத்தைக் கெடுக்கப் பிறந்தான்."

"யார் கருமி?"

"நீதான். இதுகூட தெரியவில்லையா?"

"அடாடா! ரொம்ப புத்திசாலி"

"பணத்தைப் புதைத்துவைத்து, பாம்பாகிக் காவல்காக்கப் போகிறான். மூடன்"

உடனே ஒரு சிறு யுத்தம் ஆரம்பமாகிவிடும். இந்த யுத்த களத்திலுள்ள யுத்த வீரர்கள் இரு சகோதரர்கள்மட்டும்தான். அவர்களுடைய மனைவி மக்களிடையே இதன் வாடை கூட வீசாது. வாசலில் சண்டை மண்டையுடையும். உள்ளே ஓர்ப்படிகளிருவரும் புதுவிதமான பக்ஷணம் செய்வதில் முனைந்திருப்பார்கள். அல்லது நகைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். விஜயலால் மனைவி, தினகரலாவின் பெண் பத்மாவுக்குப் பூ வைத்துப் பின்னிக்கொண்டிருப்பாள். அண்ணன் தம்பிகளோ—கேட்கவேண்டியதில்லை. அதுஒரு புதியமாதிரி. காலையில் வெட்டுப்பழி–சண்டை. மாலையில் கலெக்டர் விருந்துக்கு விஜயலால் சாப்பிடவந்துவிடுவான். தினகரனும் கூப்பிடுவான்.

தினகரன் எந்தக் காரியத்தையும் தனியாகச் செய்யமாட்டான். எங்கேயாவது ராமாயண காலக்ஷேபமா? முதல் சந்தா தினகரனுடையது. பாட்டுக் கச்சேரியா? முதல் 'டிக்கட்'. தான தருமமா? முதலில்தான். இப்படித் தினகரன் எல்லாவற்றிலும் முன்னால் வந்துநிற்பான். விஜயலால் எதற்கும் பின்னால்தான். ஒன்றிலும் சேரமாட்டான். ஏதோ அரையோ, காலோ கொடுத்துத் தொலைத்துவிடுவான்.

சில சமயம் சந்தா வசூலிப்பவர்கள் வந்து "அடாடா! உங்களைப்போல் தருமதுரை உண்டோ! தான தருமத்திற்கே பெயர் எடுத்த வம்சமாச்சே. உங்கள் அண்ணா ஆயிரம் ரூபாய் போட்டிருக்கிறார். நீங்கள் அதற்குக் குறையலாமா?'' என்று புகழ்ந்து பாடுவார்கள். இந்தப் புகழ்ச்சியும், உபமானமும் விஜயனுக்கு எரிச்சலைத்தான் உண்டாக்கும். சட்டென்று "சரிதான் அவன்தான் பிச்சை எடுக்கப் பார்க்கிறான். நான் பிச்சைக்காரனாக ஆகமுடியாது. நமஸ்காரம் தயவுசெய்து போய்வாருங்கள்'' என்று கூறுவான்.

உடனே தினகரன் 'ஐயோ! போயும் போயும் அவனிடமா போய்க் கேட்டீர்கள்? காலையில் அவன் முகத்தில் விழித்தால் சாப்பாடுகூட அன்று பூராவும் கிடைக்காதே'' என்பான்.

(3)

மாலை ஐந்துமணி. தினகரன் ஒரு பிராம்மணனிடம் தன்னுடைய குடும்ப கீர்த்தியைப் பாடிக்கொண்டிருந்தான். இவைகளைக் கேட்ட பிராம்மணன் தினகரனைச் சந்திரன் என்றும், சூர்யன் என்றும், குபேரன், கர்ணன், என்றும் முகஸ்துதி செய்தான். இதற்குப் பிரதியாக அவனுக்கு ஒரு விலைபெற்ற சால்வையும், ஐந்து ரூபாயும் கிடைத்தன.

பிறகு பிராம்மணன் புறப்பட்டுச் சென்றான். மற்றொரு பக்கத்திலிருந்து சாவுகார் இரண்டு சேவகர்களுடனும், அமீனாவுடனும் காட்சியளித்தான். தினகரன் முன்சீபுக்கு விருந்து செய்தான். தன்னுடைய பெரிய 'பீரோ'வை அனுப்பினான். ஆனாலும் 'ஜப்தி' வந்துவிட்டதே என்று அவன் எண்ணமிட்டான். "நன்றிகெட்ட பயல்கள்'' என்று முணமுணத்தான்.

ஆத்திரத்துடன் எழுந்து—"யாருடா அது? என்ன அக்ரமம் இதோ பார்? உன்னை என்ன செய்கிறேன். மான நஷ்டத்திற்குத் 'தாவா' போடுகிறேன். பார், கவர்னருக்குத் தந்தி கொடுக்கிறேன் இதோ. என்னை யாரென்று நினைத்தாய்? அற்பப்பயலே! உன் பணத்தை இதோவீசியெறிகிறேன் பார்'' என்று கையை ஆட்டிக் கூச்சலிட்டான்.

சாவுகார் இந்தமிரட்டலுக்கு அசையப்பட்ட ஆசாமியாகத் தோன்றவில்லை. தினகரனின் யுக்தி ஒன்றுமே பலிக்கவில்லை. 'ஜப்தி' ஆரம்பமாகியது.

விஜயலால் தன் வீட்டு "வராண்டா''வில் ஊஞ்சலில் ஆடியவண்ணம் இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் முகம் கண்டிப்பாகவும், கடுமையாகவும் இருந்தது. அச்சமயம் அவன் மனைவி அங்கு வந்து, "என்ன இது? அண்ணாவாத்தில் 'ஜப்தி'யா?'' என்றாள்.

"ஆமாம் அவன் அதிர்ஷ்டம். நாமென்ன செய்யலாம்?''

"ரொம்ப அழகாய்த்தானிருக்கு நீங்கள் பேசுவது. போய் விசாரிக்கக்கூடாதோ?''

"அவனுடைய சிநேகிதர்கள் விசாரிக்கட்டுமே. எனக்கென்ன? கமிஷனருக்கும், கலெக்டருக்கும் தடபுடலாக விருந்து செய்தானே. அவர்களெல்லாம் இன்னும் உயிருடன்தானிருக்கிறார்கள். உதவி செய்யட்டுமே.''

"போதும், பிறகுகதை படிக்கலாம். முதலில் இந்த ஸேட்டுக்கு ஏதாவது கொடுத்தனுப்புங்கள்''

"நாலைந்து முறை இதுமாதிரி கொடுத்தாகி விட்டது. இனிமேல் முடியாது. இனி இந்த வீட்டை விற்பதைத் தவிர வேறு வழியில்லை. என்ன ஆடம்பரம் வேண்டியிருக்கு. எது வந்தாலும் அவனுக்குப் புத்தி வராது." என்று கண்டிப்பாகக் கூறிய வண்ணம் எழுந்து உள்ளே சென்றுவிட்டான்.

மறுபடி அவன் உடையணிந்து வெளியில் வந்தபொழுது பத்மா தன் சித்தியின் தோள் மேல் சாய்ந்த வண்ணம் அழுது கொண்டிருந்தாள். விஜயலால் திடுக்கிட்டு "ஏனம்மா அழுகிறாய்? என்ன சமாசாரம்? என்று பரிவுடன் கேட்டான்.

"ஒன்றுமில்லை சித்தப்பா"

"நீ ஏனம்மா வருத்தப்படுகிறாய்! தேசாய்கள் டம்பக்காரர்கள். இப்படித்தான் நடக்கும். ஜப்தியும் நடக்கும். இன்னமும் ஏதாவதுகூட நடக்கும். அதற்கெல்லாம் பயப்படாதே" என்று சமாதானம் கூறினான்.

"இதோ பாருங்கள், உங்கள் பிடிவாதமும் நீங்களும் கொஞ்சம்கூட நன்றாயில்லை. குழந்தைக்குக் கல்யாணத்தில் சீர்வரிசை கொடுத்த சாமான்களும் நகைகளும்கூட ஜப்தியாகின்றனவாமே? பேசாமலிருப்பது அழகா?" என்று விஜயலால் மனைவி கோபித்தாள்.

மறுபடியும் பத்மாவின் கண்களில் கண்ணீர் துளித்தது.

"அழாதே அம்மா! யாருக்கு அவ்வளவு துணிச்சல்? உன்னுடைய நகையில் கைவைக்க அவனுக்கு என்ன அதிகாரமிருக்கிறது? பார்க்கலாம்" என்று சீறினான். உடனே சாவியைக் கீழே விட்டெறிந்து "என் சின்னப் பெட்டியில் நோட்டுக்கள் கட்டிவைத்திருக்கிறேன். எடுத்துக்கொண்டுவா" என்று மனைவியிடம் கூறினான்.

அந்த நோட்டுக்கள் நிறைந்த கட்டைப்பத்மாவிடங் கொடுத்து "போ! ஓடு; இதை உன் அப்பாவிடம் கொடு" என்றான். பத்மா சிரித்தவண்ணம் ஓடினாள். ஆனால் அடுத்த நிமிஷம் வாடிய முகத்துடன் திரும்பிவந்து "அப்பா வாங்கமாட்டாராம்" என்றாள்.

விஜயலால் கர்ஜித்தான். "அடாடா! பெரிய லக்ஷாதிபதி. இதில் ஒன்றும் குறைச்சலில்லை" என்று கத்தியவண்ணம் "ஸேட்ஜீ! இறங்கும் கீழே. வெட்கமில்லை? என் உத்தரவில்லாமல் வீட்டில் எப்படி நுழையலாம்?" என்று அதட்டினான்.

சாவுகார் ஏதோ பதில் சொல்ல ஆரம்பித்தான்.

"சரிதான் ஐயா! இந்தாரும். உம்முடைய பணத்தை எடுத்துக்கொண்டு நடவும். வட்டிக்கு வட்டி வாங்கி ஜனங்களைத் துன்புறுத்துகிறது உண்டே ரொம்ப நல்லது. போய்விட்டு வாருங்கள்" என்றான்.

அச்சமயம் தினகரன் அங்கு வந்து, "நீ யாருடா என் கடனைத் தீர்க்க? என்னை அவமானப் படுத்துகிறாய்" என்று கூச்சலிட்டான்.

"சரி! சரி! உள்ளே போ. அண்ணா! உன் மரியாதை எவ்வளவு வரையிலிருக்கிறதென்று எனக்குத் தெரியும் போ."

"உன்னை யாருடா பணம் கொடுக்கச் சொன்னது? என் வீடு ஏலம் போகட்டுமே. உனக்கென்ன வந்தது?"

"உனக்காக யார் பணம் கொடுத்தது?"

"பிறகு யாருக்காகக் கொடுத்தாய்? சொல்லுடா?" என்று கர்ஜித்தான் தினகரன்.

"என் குழந்தைக்காக. அவள் நகைகள் 'ஜப்தி' செய்யப்படுவதைப் பார்த்துக்கொண்டிருப்பேனா?" என்றான் சாந்தமாக.

"பத்மா உன் குழந்தையோ?"

"ஆம்! என் குழந்தைதான். ஒரு முறையல்ல. ஆயிரம் முறை சொல்லுவேன். என் குழந்தைதான். அவள் உனக்குமட்டும் பெண்ணல்ல. தேசாய் குலத்துப்பெண். ஏழுதலை முறைக்கும் பெண். தெரியுமா?" என்றான் அழுத்தமாக.

"சரிதான் போதும்டா உன் பிரதாபம். கடைசியில் உன் உறவுப்பெருமையைச் சொல்லிக்கொண்டு, எல்லாருடைய முன்னிலையிலும் என்னை அவமானப்படுத்திவிட்டாய்." என்று முணுமுணுத்த வண்ணம் தினகரன் ஊஞ்சலில் போய் உட்கார்ந்தான். பக்கத்தில் இருந்த வெள்ளி வெற்றிலைப் பெட்டியிலிருந்து இரண்டு வெற்றிலை பாக்கு இவைகளை எடுத்து இரண்டு "பீடா" செய்தான். அதைப் பத்மாவிடம் கொடுத்து, "இந்தா, இவற்றை உன் சித்தப்பாவிடம் கொடு." என்றான்.

இரு சகோதரர்களும் இதேமாதிரிதான் தினந்தோறும் பேசாமலே "பீடா"க்களைக் கொடுத்து வாங்கிக்கொள்வது வழக்கம். அவர்கள் எவ்வளவுதான் சண்டையிட்டாலும், தினகரன் கொடுத்த 'பீடா'வை மாத்திரம் விஜயலால் சாப்பிடாமல் இருக்கமாட்டான்.

இன்று தலையணையில் சாய்ந்துகொண்டே தன் முன்னோர்களின் பராக்ரமத்தை விமர்சனம் செய்தவண்ணம், அவன் மனம் அடிக்கடி "என்ன இருந்தாலும் விஜயனும் தேசாய் வம்சத்துக் குழந்தைதானே." என்று எண்ணியது.

(ரமணலால் வசந்தலால் தேசாய் அவர்களின் குஜராதிக் கதையைத் தழுவியது.)

# தியாகியின் உள்ளம்

மானஸீகன்

இரவு எட்டு மணி. சிறைச்சாலையில் ஓர் அறை. ஒரு சிறிய விளக்கின் முன் ஒரு கைதி சிலைபோல் அசைவற்று அமர்ந்திருந்தான். அவனது கண்கள் பதுமையின் கண்கள் போல் வெறித்துக்கொண்டிருந்தன, ஆனால் அவன் உதடுகள் மட்டும் அசைவது அம்மங்கிய ஒளியில் தெரிந்தது. சிற்சில சமயங்களில் அவன் அசையா உருவம் பெருமூச்சு விடும்போது அசைந்தன. அவன் கொலைத் தண்டனைக்காளான கைதி.

சிறைச்சாலையின் மணி அடித்தது. கைதிகளுக்கு உணவு வைக்கப்படவேண்டிய நேர அறிவிப்பு அது. தூரத்தில் தட்டுக்களின் ஓசைகளும் காலடிகளும் கேட்டன. ஓர் காலடி இக்கைதியின் அறையை நெருங்கியது. ஒரு சிறைகாப்போன் ஒரு தட்டில் உணவும் மற்றொரு கையில் ஒரு பானை தண்ணீரையுங் கொண்டுவந்தான். கம்பிகளின் இடுக்கின் வழியாக அவற்றை உள்ளே தள்ளினான். மறுபடியும் நிசப்தம் குலைக்கப்பட்டது. "ஏய் நாளைக்குத்தான் சனிக்கிழமை. ஆகையினால் தயாராய் இரு" என்று கூறிச்சென்றான்.

இவ்வார்த்தைகள் கைதியின் மனதைக் கலைத்தன. சனிக்கிழமை தன் வாழ்வின் இறுதிப்படி. அன்று தன் வாழ்க்கைச் சீட்டுக் கிழிக்கப்படும். அன்று சங்கரதாஸ் கோடீச்வரரான பாலகிருஷ்ண கங்காதரரைக் கொன்றதற்காகத் தூக்கிலிடப்படுவான். இவ்வெண்ணங்கள் அவன் மனதில் வட்டமிட்டன. நாளைக்காலை சூரியன் கிரணங்கள் படும்போது அவன் சடலம் உயிரற்று இருக்கவேண்டும். இதுவே நீதிபதியின் ஆக்ஞை. அவன் இறப்பைக் குறித்து உலகம் வருந்தாது. ஓர் கொலையாளி ஒழிந்தானென்று உவக்கும். உலகம் ஓர் சிறந்த தியாகியை இழந்ததென்று பேதை மக்களுக்கெப்படித் தெரியும். இவ்வுலகில் ராதைக்குமட்டுமே அவன் குணம் தெரியும். அவளுக்கவன் ஓர் பெரிய மஹான். வெளியுலகத்திற்கோர் கொலையாளி.

இதுவே அவன் கடைசி இரவு. அவன் நிழலின் கடைசி நாள். நாளைக்கு அவன் நிழலற்றவனாகிவிடுவான். முப்பது வருஷங்கள் அலைந்து திரிந்து, இன்பதுன்பங்கள் துய்த்த இவ்வுலகை நீத்துச்செல்லவேண்டியிருக்கும். காலதேவன் தன்னிடமிருந்து பறித்த தன் வாழ்நாட்களை மீண்டும் அவன் நினைவிற்குக் கொண்டுவந்தான். அவன் மனக் குதிரை கடந்த வழியின்மீது நடந்தது. அவன் கண்முன் பழைய சம்பவங்கள் தோன்றின. அவன் வாழ்க்கையில்தான் எவ்வளவு மேடுபள்ளங்கள்? தத்தித்தத்தி ஒரு குடிசையைச் சுற்றிய குழந்தையா அவன்? என்ன மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டன?

அந்தோ! அவன் தகப்பனார் அவனைக்கொஞ்சி முத்தமிடுகின்றார், அன்னை அடித்து அன்னம் ஊட்டுகின்றாள். நித்தம் புது ஆடை அணிவித்து மகிழ்கின்றாள். கொலைக்களத்திற்கனுப்பவோ இவ்வளவு கஷ்டங்களும்? அச்சிறு குழந்தை ஒரு பொம்மை வைத்திருக்கின்றது, அதைக் கட்டியணைத்து விளையாடுகின்றது. தன்னை மறக்கின்றது. வெளியில் ஓர் ஏழைக் குழந்தை இதைக் காண்கிறது. பொம்மையை விருப்புடன் பார்க்கின்றது. அவன் அன்னை அதைக்கண்டு "தாஸ் அப்பொம்மையைக்கொடுத்துவிடு. நான் வேறொன்று வாங்கிக் கொடுக்கிறேன்" என்று கூறுகிறாள். அக்குழந்தை சந்தோஷத்துடன் பொம்மையைக் கொடுத்துவிடுகின்றது. நீ இதை வச்சுண்டு விளையாடு. நான் இன்னொன்னு வாங்கிக்கிறேன்" என்று இதமொழி கூறுகின்றது. அதன் தியாகத்தில்தான் என்ன பெருமை? என்ன சந்தோஷம்? அது ஒரு சிறிய தியாகந்தான். ஆனால் அதுவே அவன் முதல் தியாகம். அவன் வாழ்க்கையின் தியாகச் செயல்களுக்கு அதுதான்வித்து, அடிப்படி. தியாகமென்ன வென்றறிய உள்ளத்தின் இயல்பு.

அடுத்தது அவன் பள்ளி செல்லுங்காட்சி. இளமையும் குதூகலமும் கலந்த காலம். வாழ்க்கையின் கஷ்டங்களால் பாதிக்கப்படாத அழகிய முகம். கண்டோர் களிக்கும்படியான புன்முறுவல் பூத்தது. வாழ்க்கையில் இன்பங்கண்ட பருவம். வெட்டுக்கிளிபோல் தத்தி விளையாடிய விளையாட்டுக்கள் தாம் எவ்வளவு? அன்புள்ள பெற்றோர், கபடமற்ற நண்பர்கள், சிறு உள்ளங்கள், தெவிட்டாக்கேளிக்கைகள், விளையாட்டுக்கள் மற்றும் பள்ளியில் கம்பீரம் பொருந்திய ஆசிரியர், இவர்கள்தாம் எவ்வளவு இன்பம் ஊட்டிவந்தனர்? சமூகத்தால் விலக்கப்பட்டுத் தன் சுதந்திரம் பறிக்கப்பட்டு, விலங்குபோல் கூட்டிலடைக்கப்பட்ட அவனுக்கு இவை இனிமேல் ஊமைகண்ட கனவுதான். நாளை அவன் செல்லும் இடத்தில் இவை கிடைக்குமோ என்னவோ?

அவ்வயதில் அவன் செய்த தியாகங்களை உலகமறியுமா? தினமும் பக்கத்துப் பையனின் கணக்கைப் போட்டுக் கொடுத்துவிட்டு, தன் கணக்கைப் போடாமல் ஆசிரியரிடம் பெற்ற உதைகள் தாம் எவ்வளவோ?

எங்கே சோனிப் பயலுக்குப் புரியாத கேள்வியின் விடையைத் தான் சொன்னால் அவனைக் குட்டச் சொல்வாரோ என்று இரக்கப்பட்டு, புரிந்த கேள்விக்கும் விடை கூறாது அவனுடன் குட்டுப்பட்ட' சந்தர்ப்பங்கள் பல. ஆம், மற்றொரு சமயம், பரீக்ஷை மண்டபத்தில் பக்கத்துப் பையன் பேனாவில் மசியில்லாமல் பரிதாபகரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த போது, அவன் ஏன் சட்டென்று யோசியாமல் தன் பேனாவைக் கொடுத்துவிட்டு வெளியேற வேண்டும்? இச்செய்கையினால் அவன் பரீக்ஷையில் தவறியபோது அதை மதியாமல் உவகை கொண்டதை உலகம் ஏன் தியாகச் செயலென்றே ஒப்புக்கொள்ள வேண்டும்.

வருடங்கள் ஓடிமறைகின்றன. சிறுவன் இளைஞனாகின்றான். இளமை மறைகின்றது. ஆனால் ஏழ்மை மறையவில்லை. பழைய மந்தஹாஸம் பொருந்திய முகமில்லை; வாழ்க்கைப் போராட்டத்தில் பெற்ற தழும்புகள் கொண்டவை. நெற்றியில் மடிப்புக்கள். கண்களில் சுருக்கங்கள். பயமறியாப் பார்வை நீங்கி, தன் ஏழ்மை ஸ்திதியை உணர்ந்த அடக்கமான, நாணமுற்ற பார்வை. ஆனால் முகக்களை மாறவில்லை, குணச் சிறப்பும் மாறவில்லை. சமூகத்தின் காலடியில் கிடந்து உழல்கின்றான். பணத்திமிர் பிடித்த பலரால் மிதிக்கப்படுகின்றான். பெற்றோரை இழந்து தனியனாய் நின்ற அவனை ஏழ்மை தலைகாட்டவொட்டாமல் அழுத்துகின்றது. வெளுத்ததெல்லாம் பால் என்ற அவள் உள்ளத்திற்கு உலகத்தின் செய்கைகள் அருவருப்பை அளிக்கின்றன.

விஷம் பேன்றிருந்த இக்கொடிய உலகில் சற்று ஆதரவையும் சாந்தியையும் அளித்தவள் ராதைதான். அவள் அவனுடன் இளமையிலிருந்து பழகியவள். அவள் ஒரு செல்வந்தர் புத்திரி தான். இருப்பினும் அவள் மனம் தாஸையே நாடிச் சென்றது. அவள் அவனை உண்மையுடன் அறிந்து அவன்பால் இரக்கங் கொண்டாள். மாசற்ற தன்மையின் பர்வங்கள் பிரதிபலித்த அவள் சொற்களிலும் முகத்திலும் தாஸ் ஒரு ஆனந்தத்தைக் கண்டான். இவை அவன் மனப்புண்ணிற்கு மருந்தாயிருந்தன. சமூகத்தின் சேற்றில் உழன்ற அவனுக்கு மனம் சாந்தியடைய முடியவில்லை.

ராதை தன் மீது காதல் கொள்வாளென்று தாஸ் கனவிலும் கருதினானில்லை. அதை அவன் வேண்டவும் இல்லை. மனக்கோயிலின் தெய்வத்தை வாழ்க்கைத் துணைவியாக எங்ஙனம் கொள்ளமுடியும். அவளையும் சோகவாழ்வில் புகுத்துவதா? தாஸ் மனம் அதற்கு இசையவில்லை.


பாத்ருடுவின்

**பால சஞ்சீவினி (Regd.)**

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

**டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,**

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு

ஆனால் அவன் ராதைத் தன்மீது காதல்கொள்வதைத் தடுக்கமுடியவில்லை. அவள் மனதைப் புண்ணாக்கவிரும்பவில்லை தாஸ். அவள் தன்னை மறக்க ஒரு யுக்தி செய்தான். ஒருநாள் அவள் வீட்டெதிரில் குடிகாரனைப்போல் நடித்தான். வந்தவர்களை யெல்லாம் கண்டபடி திட்டினான். ராதையின் தகப்பனார் அங்கே வந்தபோது அவரையும் தூஷித்தான். அவர் அதைக் கண்டு திடுக்கிட்டார். ராதைக்கு இச்சமாசாரம் எட்டியது. அவள் மனம் முறிந்தது. தாஸ் குடிகாரனாக இருப்பானென்று அவள் கனவிலும் நம்பவில்லை. அவன்மேல் கொண்டிருந்த அன்பையும் மாற்றமுடியவில்லை. இருப்பினும் அவனை அடையும் எண்ணத்தை அறவே மறந்தாள்.

தாஸ் தன் எண்ணத்தில் வெற்றிபெற்றான். ஆனால் திரும்பவும் அந்தகாரத்தில் ஆழ்த்தப்பட்டான். சாந்தியளித்த தெய்வத்தின் தரிசனம் அவனுக்குக் கிடைக்கவில்லை. அவன் மனம் நிலைகொள்ளாது தவித்தது. திடீரென்று ஒருநாள் புறப்பட்டுவிட்டான். அப்புறம் அவனைப்பற்றி யாரும் அறியவில்லை.

காலம்சென்றது. ராதைக்கும் தக்க கணவன் கிடைத்துவிட்டார். அவ்வூர் கோடீசுவரரான பாலகிருஷ்ணகங்காதரர் அவளை மணந்தார். பெரிய அரண்மனைக்கு அதிகாரியாக விளங்கினாள் ராதை. குற்றேவல்புரியக் கைகட்டிக் காத்து நின்றனர் ஒரு படை வேலையாட்கள். இருப்பினும் அவள்மனம் சாந்தியடையவில்லை. தாஸின் உருவம் அவள் மனக்கண்முன் நிலைத்து நின்றது. அவன் திரஸ்கரித்த காதல் அவள் மனதைப் புண்படுத்திவிட்டது. உலகிற் சிறந்த உத்தமனாகக் கருதப்பட்ட அவன் ஓர் குடிகாரனாக இருப்பனேல் இவ்வுலகில் அவள் யாரை நம்புவது?

இச்சமயத்தில் அவள் தலையில் ஒரு பேரிடி விழுந்தது. அவள் கணவர் ஒரு பெரிய குடிகாரர் என்பதை அவள் அறிந்தாள். சட்டென்று அவள் மனம் தாஸையே நினைவிற்குக் கொண்டுவந்தது. தன் கணவர் அடிக்கடி நிலைவிழுந்து வீடு திரும்புவதைக்கண்டு அவள் தவித்தாள். பன்முறை அவரை வேண்டிக் கொண்டாள். அவள் தம் செய்கையைக் கண்டுபிடித்துவிட்டாள் என்பதை அறிந்த கங்காதரர், தம் சுயரூபத்தைக்காட்ட ஆரம்பித்தார். தினமும் ராதைக்குக் கணக்கற்ற அடிகளும் உதைகளும் விழுந்தன. அவள் இல்வாழ்க்கை நரகமாயிற்று. ஏற்கனவே சாந்தி பெறாத அவள் மனம் பின்னும் தவித்தது.

இச்சமயத்தில் அவள் வீட்டை நாடி வந்தான் ஒருவன். ஏக்கமும் துக்கமும் நிறைந்த அவன் மங்கின கண்கள், அவன் நடத்திய வாழ்க்கையைப் பிரதிபலித்தன. வந்தவன் ராதையை யணுகி தான் வந்த காரியத்தைத் தெரிவித்தான். ராதையும் அவனிடம் இரக்கப்பட்டு வீட்டு வேலைக்காரனாக நியமித்தாள். அவனுக்குத் தோட்டத்திலிருந்த குடிசையிலேயே இடம் கொடுக்கப்பட்டது. அவனும் தன்னந்தனியனாய்த் தன் காரியத்தைச் செய்து வந்தான். அடக்கமும் மரியாதையும் நிறைந்த அவன் திக்கற்றவனைப்போலிருந்தான். இவ்வுலகில் அவனுடன் பழகியவர் யாருமிலர்.

ராதைக்கு இவனிடம் ஒருவித நம்பிக்கையும் மரியாதையும் விழுந்தது. உலகை வெறுத்த அவளுக்கு மௌன வாழ்க்கை நடத்திய அவ்வேலைக்காரன் ஒரு யோகியாகக் காணப்பட்டான். நாளாக நாளாக அவனிடம் தன் கதையைச் சொல்லியழுதாள் ராதை. அவள் புண்பட்ட மனதை, தன் அறிவுணர்ந்த சொற்களால் ஆற்றினான் அவ்வேலைக்காரன். நடுவில் நடுவில் அவன் பெருமூச்சு விடுவதை அவள் அறிந்தாளில்லை. அவன் தாஸ் என்பதை அவள் அறியவில்லை. அவன் தன் வாழ்நாளை அவள் சேவையில் அர்ப்பணம் செய்ய வந்திருந்தான்.

கங்காதரரின் கொடுமைச் செயல்கள் அதிகரித்தன. தணலில் விழுந்த புழுப்போல் ராதை துடித்தாள். ஆனால் அச்சமயங்களில் எவ்விதமோ தாஸ் வந்து அவளைக் காப்பாற்றி விடுவான்.

ஒருநாள் இரவு கங்காதரர் நிரம்பக் குடித்துவிட்டு வீடு திரும்பினார். தினம்போல் ராதை


ஆப்டோன் ப்ளாக்குக்களும்

அழகான கலர் ப்ளாக்குக்களும்

செய்யுமிடம்!

★



★

எம். ஸி.

அப்பாசாமி செட்டி & கோ.,

14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,

மதராஸ்.

யுடன் சண்டை தொடங்கியது. கோபத்தில் தம் காலில் மாட்டியிருந்த பூட்ஸைத் தூக்கி அவள்மீது விட்டெறிந்தார். இச்சமயத்தில் எங்கிருந்தோ தாஸ் குறுக்கிட்டான்.

அடி அவன் தலையில் விழுந்தது. நினைவிழந்து கீழே விழுந்தான்.

மறு நாள் ராதை அவனைக் குடிசையில் காணச் சென்றபோது அவன் தலையில் பலத்தகாயம் பட்டிருப்பதை அறிந்தாள். துக்கம் தாங்காது வாய்விட்டழுதாள்.

மற்றொருநாள் இரவு. அதுவே கடைசி இரவாயிற்று. தினமும் போல மனைவியைக் கண்டபடி தூஷித்துக் கொண்டிருந்தார் குடிவெறியில் கிடந்த கங்காதரர். தாஸ் என்றைக்கும் போல வெளிவராந்தாவில் காத்துக் கொண்டிருந்தான். என்றைக்குமில்லாதபடி சண்டை முற்றியது. கங்காதரர் வசை மொழிகள் பொறுக்கமுடியாதபடி கொடூரமாயிருந்தன. ராதை தன் பொறுமையை யிழந்தாள். தன் மடியிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்தாள். மறு கணம் இரு வேட்டுக்கள் பறந்தன. கங்காதரர் உயிரற்றுக் கீழே சாய்ந்தார். ராதையும் தன் நினைவை யிழந்தாள். தாஸ் திகிலுடன் உள்ளே நுழைந்தான். அறையெங்கும் புகையாக இருந்தது. ஒருநிமிஷத்தில் நடந்த சம்பவத்தை யூகித்துக் கொண்டான். அவன் மனதில் எழுந்தது ஒரு தியாக உணர்ச்சி. சட்டென்று ராதையின் கையிலிருந்த துப்பாக்கியைத் தான் எடுத்து வைத்துக் கொண்டான். அவளையும் சற்று அப்புறப் படுத்தினான். இதைச் செய்து முடிப்பதற்குச் சரியாக உள்ளே நுழைந்தார்கள் போலீஸ்காரர்கள். கொலை நடந்திருப்பதைக் கண்டு தாஸைப் பிடித்துக்கொண்டனர். தாஸ் சற்றும் திமிறவில்லை. தான் கொலை செய்ததாக ஒப்புக் கொண்டான். தான் போகு முன்பு ராதைக்கு விரிவாக ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தான்.

கேஸ் விசாரணைக்கு முன்பு சிறையில் அவனைக்காண வந்திருந்தாள் ராதை. கடிதத்தின் மூலம் அவன் யாரென்பதை அவள் அறிந்திருந்தாள். தன் செய்கைக்குத் தானே தண்டனை அனுபவிக்கவேண்டுமென்று சொல்லி உண்மையைக்கூறி அவனை விடுவிக்கப்போவதாகவும் அவள் கூறியதைத் தாஸ் சற்றும் மதிக்கவில்லை. தன் செய்கைக்கு அவள் வருந்தாதிருக்குமாறு கேட்டுக்கொண்டான்.

கேஸ் விசாரணை ஆயிற்று. ராதை தாஸ் கொலை செய்யவில்லையென்றும் தானே செய்ததாகவும் கூறினாள். ஆனால் கையுங்களவுமாகப் பிடிபட்ட தாஸை அவர்கள் எங்ஙனம் விட்டுவிடமுடியும்? அதுவும் அவனே ஒப்புக் கொண்டபோது? தாஸுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது.

இவை யெல்லாம் அவனுக்குப் பழங் கதையாகத் தோன்றின. இனி அவை மண்ணில் மறைந்து அழியவேண்டியவைதாம். சிறைச் சாலையின் மணியோசை அவனைக் கனவு லோகத்திலிருந்து கீழே தள்ளியது. ஆயிற்று மணி மூன்றாகிவிட்டது. இன்னும் மூன்று மணி நேரத்தில் அவன் விடைபெறவேண்டும். நேரம் சென்றது. தாஸ் அப்படியே இருந்த இடத்தில் அமர்ந்திருந்தான்.

வெள்ளி முளைத்தது. கிழ்த் திசையில் விண் மீன்கள் வரனத்திடை தேய்ந்தன. மையிருட்டு மெல்ல விலகத் தொடங்கியது. ஐந்து மணிக்கு ஒருவன் வந்தான். "ஏய் கிளம்பு, சீக்கிரம் போகவேண்டும்" என்றான். தாஸ் கடைசித் தடவையாகத் தன் மடியிலிருந்த ராதையின் படத்தை உற்று நோக்கினான். கண்களில் நீர்வழியப் பலதடவை கண்களில் ஒற்றிக் கொண்டான். தான் படுத்திருந்த கட்டில் அறை இவைகளை ஒருகணம் நோக்கினான். மறுகணம் காவற்காரனைப் பின்தொடர்ந்தான்.

நேராகச் சிறை அதிகாரியிடம் அழைத்துச் செல்லப்பட்டான். அங்கே அவன்மீது சாற்றப்பட்ட குற்றம் வாசிக்கப்பட்டது. அதிகாரி கேள்விகேட்க ஆரம்பித்தார்.

உத்: "உன் இறப்பைத் தெரிவிக்க உற்றார் உறவினர்கள் இருக்கிறார்களா?"

தாஸ்: "கிடையாது"


குளிர்ந்த வாசனையுடன்
உயர்ந்த முறையில் தயாரித்த

# எவரெஸ்ட் (ஸ்பெஷல்)
&
# அமர்ஜோதி

—: பேஸ் பவுடர்கள் :—

சந்தனாதி – அரைக்கீரை விதை – பிருங்காமலக தைலம் – மட்டிப்பால் பத்தி வில்லைகள்—அரகஜா – சந்தனப் பவுடர் முதலிய வாசனாதிரவியங்கள்

தயாரிப்பவர்கள்:
**வி. ராமய்யர் அண் கோ.,**
பர்பியூமர்ஸ்
கும்பகோணம்.

"ஒருவர்கூட?"

"இல்லை"

"நண்பர்கள்?"

"கிடையாது"

"அப்போது உன் இறப்பைக் குறித்து வருந்தக்கூடியவர்கள் ஒருவர்கூட இவ்வுலகில் இல்லையா?"

மௌனம்.

"உன் கடைசி விருப்பம் யாது?"

"விருப்பம் என்றிருக்குமானால்,அது சீக்கிரம் இறக்க விரும்புவதே?"

உத்யோகஸ்தர் அவனை வெறித்துப் பார்த்தார். பிறகு எழுந்து சென்றுவிட்டார்.

சரியாக ஆறுமணிக்குத் தாஸ் சிறையை அடுத்த வெளிக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அங்கு அவனை ஓர் மத போதகர் வரவேற்றார். தூக்குமரம் தயாராயிருந்தது. முழக் கயிறு உயிரைப் பருகத் துடித்தது. மனப்புண்ணை ஆற்றத் தொடங்கினார் குரு.

"அப்பா நீ இப்போது கடவுளிடம் போகப் போகிறாய். உலகத்தின் நீதி உன்னை அங்கே கட்டுப்படுத்தாது. கடவுளின் ஆசியைப் பெற ஒரே ஒருவழிதானுண்டு. அதுதான் பிரார்த்தனை."

தாஸ் இவைகளை யெல்லாம் கவனித்தானில்லை. மனம் வேறெங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது. குரு ஆரம்பித்தார்.

"இறைவனே! நான் பாபம் செய்தவன்"
"செய்தவன்"

"கொலைக் குற்றத்திற்காளானவன்"

"ஆளானவன்"

"உன் மன்னிப்பை வேண்டுகின்றேன்"

"வேண்டுகின்றேன்"

குருவும் பார்த்தார் "சரி இது பைத்தியம் போலிருக்கிறது" என்று நினைத்துக் கொண்டு போய்விட்டார்.

உத்யோகஸ்தர்கள் நெருங்கினார்கள். தாஸ் வானத்தை நோக்கினான். ராதா என்று கூவியது அவன் மனம். மெல்லப் படிகளில் ஏறினான். கழுத்தில் சுருக்கு மாட்டப்பட்டது!! 'ஐயோ போக வேண்டுமே ராதா' என்று துடித்தது அவன் மனம்.

உத்யோகஸ்தர் எண்ணத் தொடங்கினார். "ஒன்று, இரண்டு, மூன்று"

அந்தகாரம்,

சூரியன் சிறைச்சாலையின் மதிற்சுவரின்மேல் எட்டிப்பார்த்தான். அவனது பொற்கிரணங்கள் தூக்குமரத்தில் தொங்கிய ஓர் உருவத்தின் மேல் படிந்தன. அது அப்போது காற்றில் ஊசலாடிக்கொண்டிருந்தது.

---




**உங்கள் கூந்தலைக் காப்பாற்ற**

**மூலமந்திரம்**

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

## காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

## ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

**எங்கும் கிடைக்கும்**

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

சோல் ஏஜண்டுகள் :

**ஆங்கிளோ - இந்தியன்**
**டிரக் & கெமிகல் கம்பெனி,**
பம்பாய்—2


WHEN CORRECT TIMING IS VITAL-
the choice is 'WEST END'
W
இந்தியாவில் நடைபெறும்
ரயில் வேலைகளில் நிதான
மான, நீடித்த உழைப்பை
நல்குவதற்காகவே, நேர்த்தி
யான, உறுதிவாய்ந்த, சாவி
யற்ற இந்த லீவர் கடியாரங்
கள் தயாரிக்கப்பட்டிருக்கின்
றன. வேலைப்பாடும் உலோகப்
பொருளமைப்பும் குறைபாடி
ன்றி இருப்பதால் அது அநேக
மாக நிரந்தரமாய் உழைக்கக்
கூடியதாகிறது. எல்லா ரயில்
வேத் தொழிலாளர்களிடமும்
இன்னும்பலரிடமும் பலஆண்
டுகளுக்குமுன்பே அது அடை
ந்துள்ள செல்வாக்கு அது
பெற்றுள்ள நன்னம்பிக்கை
யையும் தனித்தகுதியையும்
எடுத்துக்காட்டுகிறது.
ரயில்வே சர்வீஸ்
சாவியற்ற உறுதியான லீவர் கெடியாரம்
ஸ்டாண்டர்டு குவாலிடி
ஜுவல்ஸ் 15
நிக்கல் ஸில்வர் கேஸ் ... ரு. 52
WEST END WATCH Co
BOMBAY
CALCUTTA
காலதாமதமாக வருவதால் விளம்பரப்படுத்தப்பட்ட எல்லா ரகங்களையும் சப்ளைசெய்ய
சாத்தியமல்ல. ஆயினும் ஸ்டாக்கிற்கு ஏற்றவாறு ஆர்டர்கள் பூர்த்தி செய்யப்படும்
வெஸ்ட் எண்டு வாச் கம்பெனி, பம்பாய், கல்கத்தா

# இதென்ன பைத்தியக்காரத்தனம்!

ரா. விழிநாதன்

அன்று மாலை, 'காந்தி பார்க்கி'ல் அமர்ந்திருந்த ரகுராமனை, 'கதையுலகம்' ஆசிரியர் கண்டார். "ஸார், கதையை நாளைக்கே அனுப்பிவிடுங்கள். அடுத்த இதழில், 'இதென்ன பைத்தியக்காரத்தனம்' என்ற ரகுராமனின் கதை ஒன்று வெளிவரும் என்று சென்ற இதழிலேயே அறிவித்திருக்கிறேன். வாசகர்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். பத்திரிகை வெளிவரவேண்டிய தேதியும் நெருங்குகிறது" என்று கூறிச் சென்றார்.

மறுநாள் முதல், ஆபீஸ் வேலையாக வெளியூர்க் 'காம்ப்' போவதென 'புரோகிராம்' போட்டிருந்தான் ரகுராமன். அதனால் அன்றிரவே கதையை எழுதி முடித்து விடுவது என்ற நோக்கத்துடன், சற்றுச் சீக்கிரமாகவே வீட்டை அடைந்தான்.

ஸந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு 'சாப்பாடு ஆயிற்று' என்று பெயர் பண்ணிக்கொண்டு, தன்னறையை அடைந்து, 'எலெக்ட்ரிக் ஸ்விட்ச்சைப் போட்டான். பிறகு பேனா, மசிக்கூடு, பேப்பர் முதலியவைகளைத் தயாராக வைத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

'பெரிய மனிதர்கள்' என்று பெயர் பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் சிந்தனை செய்யும் பொழுது எதையாவது 'அசைபோடும்' பழக்கம் உண்டு என்று கேள்வி. மைசூர் திவான் ரங்காச்சாரியார், வறுத்த கடலைப் பருப்பை ஒரு கிண்ணியில் வைத்துக்கொண்டுதான் சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க அமருவாராம். பிரபல சங்கீதக்ஞரான வாஸுதேவாச்சாரியாருக்கு இந்தமாதிரி ஏதோ ஒரு பழக்கம் உண்டாம். அதேபோல ரகுராமனுக்கும் முந்திரிப்பருப்பில்லை என்றால் சிந்தனை ஓடுவதில்லை.

ஆகையால் உள்ளே சென்று முந்திரிப் பருப்புக்கிண்ணியை எடுத்து வந்தான். வாயில் இரண்டு முந்திரிப் பருப்பைப் போட்டுக் கொண்டு பேனாவை யெடுத்தான் 'பிள்ளையார் சுழி' போட. பேனாவில் மசியிருந்தால் தானே அது எழுத? உடனே பேனாவில் மசியை ஊற்றி நிரப்பிக்கொண்டு, 'பிள்ளையார் சுழி'யையும் போட்டு கதைக்கு 'இதென்ன பைத்தியக்காரத்தனம்' என்ற தலைப்பையும் கொடுத்தான். கதை எழுத ஆரம்பிக்க வேண்டியது தான் பாக்கி. கதையை எங்கிருந்து ஆரம்பிக்கலாம் என்ற பிரச்னை தீருவதற்கு முன்னமேயே அரைக்கிண்ணி முந்திரிப்பருப்புக் காலியாகி விட்டது.

'பகலவன் மலை வாயில் விழுந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு ஸந்தியா தேவியை விட்டுப்பிரிய மனமில்லை. அதனால் அவனது முகவொளி மங்குகிறது. பிரமதேவனின் எழுத்தை மீறுவது என்பது முடிந்த காரியமா? பகலவனது ஏக்கம் அதிகரிக்க அதிகரிக்க, முகவொளியும் மங்குகிறது...' என்று மாலை நேரத்தை வர்ணித்தபின், 'எங்கிருந்தோ வீணையின் ஒலி காற்றில் மிதந்து கொண்டு வருகிறது' என்று ஆரம்பித்தால்...... இதெல்லாம் நாவலுக்கேற்ற வருணனையாயிற்றே! நாமோ சிறு கதை தானே எழுதப் போகிறோம், கதை இப்படி ஆரம்பிக்கக் கூடாது.' என்று யோசித்துக்கொண்டிருக்கும் பொழுது, அவனது ஒன்றரை வயதுக் குழந்தை 'அம்மா, அம்மா' என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தது. ரகுராமன் உடனே எழுந்து சென்று, குழந்தையை வாரி யெடுத்து, 'கண்ணா இப்பொ இங்கே வராதே. நான் வேலையா யிருக்கேன். அம்மா கிட்டப் போ' என்று சொல்லிய வண்ணம், குழந்தையைத் தாயிடம் சமையலறையில் கொண்டுபோய் விட்டு வந்தான். பிறகு அறைக் கதவைச் சார்த்திக்கொண்டு மறுபடியும் எழுத உட்கார்ந்தான்.

அவன் எழுத விரும்பிய கதை சங்கீத சிரோமணி சாமண்ணாவினுடையது. மைசூர் சமஸ்தானத்தில் மிகப் பிரசித்திபெற்ற வைணிகர் சாமண்ணா. முதுமைப் பருவத்தை அடைந்த சாமண்ணா, 'தமது ஜீவிய காலத்திற்குப் பிறகு வீணை வாத்தியக்கலையே அஸ்தமித்து விடுமோ' எனக் கலங்கினார் 'தமக்குப் பிறகு யார் இவ்வளவு இனிமையாக வீணை வாசிப்பார்' என ஏங்கினார். அதனால் மிகச் சிறந்த மாணாக்கன் ஒருவனைத் தயார் செய்துவிடவேண்டுமெனச் சங்கல்பம் செய்துகொண்டார்.

தம் சங்கல்பத்தைப் பூர்த்திசெய்ய, தமது பிரதான சிஷ்யனான 'சேஷண்ணா'வைத் தேர்ந்து எடுத்து, வெகு பிரயாசையுடன் சங்கீத சாஸ்திரத்தின் நுட்பங்களைப் போதிக்கலானார். சேஷண்ணாவும் வெகு புத்திசாலி. குறுகிய காலத்திற்குள் அவன் சங்கீத பாரங்கதன் ஆய் விட்டான். சங்கராபரணம், கேதாரம், பைரவி, தோடி, முதலிய ராகங்கள் அவனுக்குத் தண்ணீர் பட்டபாடுதான். ஆனால் கல்யாணி, கானடா, இவ்விரண்டிலும் தனது குருவினிடம் அழுந்திக் கிடந்த இனிமை அவனிடம் காணப்படவில்லை. சங்கீத சாஸ்திரப்படி, அவனது வாசிப்பில் எவ்வித பிழையுமில்லாமலிருந்தபொழுதிலும், கல்யாணியிலும்

னடாவிலுமுள்ள மர்மத்தை ஸ்பரிசிக்கும் துயரமும், கருணை வேகமும், குருவினிடமிருந்தது—அவனுக்குக் கிட்டவில்லை.

'அவனுடைய கானடா, கல்யாணிராக வாசிப்பில், துயரப் பெருக்கையும் கருணைப் பிரவாகத்தையும் வரவழைத்துக் கேட்போர்களைப் பரவசப்படுத்தும் சக்தியை எப்படி ஊட்டுவது' என்ற இதே கவலைதான், குரு சாமண்ணாவுக்கு. ஒருநாள் திடீரென அவருக்கு ஏதோ ஒரு யோசனை தோன்றிற்று.

உடனே, தமது ஏக புத்திரியைத் தம் சிஷ்யனுக்கே மணம் செய்துவைத்தார். புதுத் தம்பதிகள் இருவரிடமும் இணைபிரியாப் பரஸ்பரக் காதலைப் பெருக்குவதற்கான ஏற்பாட்டையும் செய்தார். தம்பதிகளிருவரும் ஓருயிர் ஈருடலாகி, ஆனந்த நீர் ஆடிக்கொண்டிருந்த காலத்தில், ஒருநாள், எவருக்கும் தெரியாமல் தம் பெண்ணுக்கு விஷம் கொடுத்துவிட்டார்; பெண் இறந்துவிட்டாள். குடும்பமே துயரக் கடலில் தத்தளித்தது. கிழட்டுச் சங்கீதக்ஞரின் உள்ளம் எப்படிப் பதைபதைத்ததோ நமக்குத் தெரியாது. அவர் செய்தது, தப்போ சரியோ, பாபமோ புண்யமோ, எதையும் நாம் அறியோம். இளம் மனைவியின் பிரிவாற்றாமையினால் கனிந்துபோன இளைஞன் சேஷண்ணாவின் நிலையையும் வர்ணிப்பது என்பது இயலாதகாரியம். குரு, சிஷ்யன் இவ்விருவர்களின் வாழ்க்கையும் இரவு பகல் நித்திரையின்றித் துயரக் கடலிலேயே மிதந்துகொண்டிருந்தது.

ஒருநாள் நள்ளிரவு. குருவின் காதுகளில் வீணையின் இன்னொலி எழுந்தது. உடனே அவர் வெளியே எழுந்துவந்தார். அடுத்த அறையில் தமது சிஷ்யனும், மாப்பிள்ளையுமான சேஷன் வீணையில் 'கானடா' ராகம் மீட்டிக்கொண்டிருந்தான். அந்தக் 'கானடா' ராகம் அவனது உள்ளத்தை உருக்கிக்கொண்டு வெளிப் பாய்ந்துகொண்டிருந்தது. அவனது ஒவ்வொரு நரம்பிலும் 'கானடா' ரத்தம் தான் சுரந்துகொண்டிருந்தது. அவனது அக் 'கானடா' ராக வாசிப்பில் கல்லையும் கரைய வைக்கும் துயரமும், கருணையின் வேகமும் ததும்பிக்கொண்டிருந்தன. குரு சாந்த நிலையில் தமக்குள் பெண் இறந்துவிட்டாள் என்று நினைத்தது தப்பு. சேஷனது உள்ளத்தில் பெண் இன்னும் உயிருடன் இருக்கிறாளே. 'இறந்துவிட்டாள்' என்று நான் வருத்தப்படுவானேன்! 'கலை வாணி'யாக விகஸிக்கிறாளே என்று கூறிக்கொண்டார்.

கலைக்காகக் கொலை—இதென்ன பைத்தியக்காரத்தனம் பார்த்தீர்களா?

இதில் எவ்வளவு உன்னத நோக்கம்? இதே கதையைத்தான் ரகுராமன் எழுதுவதாக இருந்தான். குருசாமண்ணாவினிடத்தில் 'ஷெல்லி'யின் திடசங்கல்பத்தைப் புகுத்தவேண்டும். 'ஷெல்லி' உடலினின்றும் ஆத்மா பிரிவதைக் காணும்பொருட்டு ஒரு கையில் 'பைபிளை'யும் மற்றொரு கையில் 'ஷேக்ஸ்பியரின்' கவிதைகளையும் எடுத்துக்கொண்டு தண்ணீரில் மூழ்கிவிட்டானே! அதேபோல சாமண்ணா கலையைக் காக்கும் பொருட்டுத் தம் அருமந்தப் புதல்வியைப் பலியிடுகிறார். கலை சாச்வதமானது; நித்யமானது. வாழ்க்கை அநித்தியமானது என்ற உயர் நோக்கம் கொண்ட சாமண்ணாவின் சரித்திரத்தைச் சிருஷ்டிக்கவேண்டும். ரகுராமன் அதற்காகத்தான் பிரயாசைப்பட்டுக்கொண்டிருந்தான். ஆரம்பிப்பது எப்படி முடிப்பது எப்படி, என்ற பிரச்னைதான் ரகுராமனைக் குழப்பிக்கொண்டிருந்தது.

ரகுராமன் இந்நிலையில் இருக்கும்பொழுது அவனுடைய மனைவி சாவித்திரி சமயலறை வேலைகளை முடித்துக்கொண்டு படுக்கையறைக்கு வந்தாள். மெதுவாகக் கணவரது அறைக்கதவைத் திறந்துகொண்டு எட்டிப் பார்த்தாள். ரகுராமன் ஒரு கையில் பேனாவை வைத்துக்கொண்டு மற்றொரு கையை மேஜையிலும் நெற்றியிலும் முட்டுக்கொடுத்த வண்ணம் யோசனையில் ஆழ்ந்திருந்தான். இதைக் கண்ட அவள் எழுதிக்கொண்டிருக்கும் பொழுது போய் அவருக்குத் தொந்தரவு கொடுப்பது சரியில்லை என்றெண்ணிப் போய்ப் படுக்கையில் படுத்துக்கொண்டாள்.

ரகுராமன் இருந்த இடத்தைவிட்டு அசையவேயில்லை. கற்சிலை மாதிரி அமர்ந்தவண்ணம் யோசனையில் ஆழ்ந்திருந்தான். இச்சமயம்




டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற குழந்தைகளின் டானிக்

பார்த்து ஜன்னல் வழியாக ஒரு கொசு பூஜை வேளையில் கரடிவிட்டு ஓட்டியதுபோல வந்து சேர்ந்தது. அவனது காதண்டைபோய்த் தனது நடனத்தையும் சங்கிதத்தையும் அரங்கேற்ற ஆரம்பித்தது. 'இச்சமயம் ரகுராமனுக்கு சிரமம் அளிப்பது சரியில்லை' என்று மனைவிக்குத் தெரிவதுபோல அதற்குத் தெரிந்திருந்தால்தானே. தனது நடனத்தையும் சங்கீதக்தையும் ஆரம்பிக்காமல் இருக்க? கையால் விரட்டினன். வலது காதிலிருந்து இடது காதிற்குச்சென்றது. மறுபடியும் விரட்டினன். வலது காதிற்கே வந்துவிட்டது. ரகுராமனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அத்துடன் குஸ்திக்குப் புறப்பட்டான்.

கொசு நேசதேசத்தின் நண்பன்போலும், எச்சமயம் முன்னேறவேண்டும், எச்சமயம் பின்னடையவேண்டும் என்பதை நன்கறிந்தது அது. அவனுடைய முஸ்திப்பைக் கண்டதும் எவ்வித சேதமுமின்றிப் பின்வாங்கி விட்டது. ரகுராமன் உடனே ஜன்னல் திரையைப் போட்டு, தற்காப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டான். பிறகு படுக்கையறையை எட்டிப்பார்த்தான். சாவித்திரியும் குழந்தையும் நித்திரையில் ஆழ்ந்திருந்தனர். படுக்கையறையில் பச்சை நிற பல்பு எரிந்துகொண்டிருந்தது. மறுபடியும் நாற்காலியில் அமர்ந்து கற்பனை உலகத்தில் ஈடுபட்டான்—'கதையைச் சிஷ்யனுடைய கல்யாணத்திற்கு முன்பு ஆரம்பிப்பானேன்! கல்யாணம் ஆகி இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்துவிட்டன. குருவிற்குத் தம் மனோரதத்தைப் பூர்த்திசெய்து கொள்ளும் அவா எழுகிறது. அப்பொழுது அவரது மனத்தில் நடக்கும் போராட்டத்தைச் சற்று விரிவாகவே தத்ரூபமாக வர்ணிக்க வேண்டும்'

பாராக்காரனின் சீழ்க்கைச் சப்தம் காதில் விழுந்து அவனது சிந்தனையைக் கலைத்தது. சாவித்திரியும் தூக்கம் கலைந்து பேசாமல் அவன் பின்னால் வந்து நின்றாள். கால் மணி நேரம் பேசாமல் இருந்து பார்த்தாள். அவளால் பேசாமல் இருக்கமுடியவில்லை. "காகிதத்தில் ஒரு எழுத்தைக்கூட காணோம். பேனு பிடித்தது பிடித்தபடி இருக்கிறது. இன்னிக்கு உங்களுக்கென்ன வந்துவிட்டது இப்படி?" என்று பேச்சை ஆரம்பித்தாள்.

ரகுராமன் பதில் சொல்லவில்லை. "ஏன்னு, இதென்ன வைராக்கியம்! உங்களுக்குப் பெண்டாட்டி நினைவோ, பிள்ளை நினைவோ, இருப்பதாகத் தெரியவில்லையே. காலையில் எழுந்திருந்ததும் எழுந்திருக்காததுமாகப் பேப்பர் படிக்க உட்கார்ந்துடரேள். பத்துமணி அடிச்சுதோ, இல்லியோ, ஆபீஸு. அப்புறம் சாயங்காலம் வந்தால், ஒருவாய் காப்பியைக் குடிச்சூட்டு, வெளியிலே 'வாக்கிங்' கிளம்பிபிடரேள். இராத்திரி வந்தால் இதுமாதிரி எழுத உட்கார்ந்தூட்டா என்ன அர்த்தம்?



எனக்கு ஒண்ணும் புரிய—" என்று கூறும் பொழுதே, அவளுக்குத் தொண்டையை அடைத்தது.

அப்பொழுதும், மறுமொழியில்லாததைக் கண்டு, "இப்படியிருக்கணும்னு, கல்யாணம் ஏதுக்குப் பண்ணிண்டேள். கல்யாணம் பண்ணிண்டிருக்கப்படாது.. குழந்தை இன்னிக்கி 'மாமா' கூப்படக் கத்துண்டிருக்கான். என்ன அழகாகப் பேசறான் தெரியுமா? இதெல்லாம் பார்க்காமே—" என்று அரையாகவே வாக்கியத்தை நிறுத்தினாள்,

சாவித்திரியின் இக்குற்றச்சாட்டை நாம் அங்கீகரிக்கத் தயாராயில்லை. ரகுராமனைப் போன்ற ரஸிகனை நாம் இதுவரை கண்டதில்லை. சாவித்திரிக்கு அந்த நாட்கள் மறந்துவிட்டன போலும். 24 மணிநேரமும் வீட்டைவிட்டு அவன் நகராமல் கிடந்தான். எப்பொழுதும் அப்படியே இருக்கவேண்டுமென்றால் முடியுமா! அதெல்லாம் அந்தந்தக் காலத்தில் தான் முடியும். இந்தப் பெண்களின் ஆசைக்கே ஓர் அளவில்லை.

ரகுராமன் 'இருக்கட்டுமே' என்று சலித்துக்கொண்டான். அவனது உள்ளம், 'தன் பெண்ணிற்கு விஷம் கொடுத்த சாமண்ணாவின்' மனோநிலை—போராட்டம் இவைகளைப்பற்றிய கற்பனையில் பறிபோயிருந்தது. 'தான் செய்யும் காரியம் சரிதானா' என்ற பிரச்னை சாமண்ணாவின் உள்ளத்தில் எழுந்திருக்கும். 'சரியோ, தப்போ, கலைக்காகச் செய்யவேண்டியது, உன் கடமை' என்று சித்தம் வாதாடியிருக்கும்.' இதுபோன்ற பிரச்னைகளை அவனது உள்ளம் அலசிக்கொண்டிருந்தது,

'அப்படியானால் நீங்கள் இப்படியே உட்கார்ந்திண்டிருங்கோ, நான் தூங்கப்போறேன்' என்று கூறிச் சாவித்திரி படுக்கைக்குப் போய் விட்டாள். ரகுராமனின் மனோநிலையை அவனது தோழர்கள் நன்கறிவார்கள். 'அவன் பரம சாது. ஆத்திரத்தில் ஏதோ படபட வென்று சொல்லிவிடுகிறான். பிறகு வருந்துகிறான்' என்பதை அறியாதவர் ஒருவரும் இல்லை.

'நான் ஏன் சலித்துக்கொண்டேன் அவளை. நம்மாலேயோ, நாலுவரி எழுத முடியவில்லை. அதற்காக அவளைக் கோபித்தது நீதியா? என்னவோ, இன்று எழுதவே ஓடவில்லை.' என்று சிந்திக்கலானான் ரகுராமன்.

கதை அப்படியே நின்றது. சிந்தனை வேறு பக்கம் புரண்டுவிட்டது. கடைசியாக, கதையுலகம் ஆசிரியருக்கு, 'இத்தடவை கதை அனுப்பமுடியாமற் போய்விட்டதற்காக வருந்துகிறேன். மன்னிப்பீர்களாக. அடுத்த இதழிற்கு அவசியம் அனுப்பிவிடுகிறேன், என்று கடிதம் எழுதி உறையில், போட்டு, ஆசிரியர், 'கதையுலகம்' என்று விலாஸத்தையும் எழுதி மேஜை மீது வைத்தான்.

அதற்குள் சாவித்திரி "இன்னும் எழுத ஆரம்பிச்சுட்டேளா! நாளைக்கு 'காம்ப்' போவதாக வைச்சிருக்கேளே. மணி 2 ஆகப் போறதே?" என்றாள்.

'ஒண்ணும் எழுதலை' என்று கூறிக்கட்டிலில் போய்ப் படுத்தான். சாவித்திரி அவனது தலையை மெதுவாகத் தடவிக்கொடுத்துக்கொண்டு, "என்மேல் கோபமா, நடுவில் கலைத்துவிட்டேனே என்று" என்று கேட்டாள்.

ரகுராமன், "அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று கூறிக் கம்பளியை இழுத்துப் போர்த்திக்கொண்டான். மறு நாள் பயணத்திற்கு முன்னால் என்ன என்ன செய்ய வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொண்டிருந்த அவனது மனத்தில் 'இந்தப் பத்திரிகாசிரியர்களிடம் மாட்டிக் கொண்டாலே இப்படித்தான். கதையோ எழுதமுடியவில்லை. போதும் போதாக் குறைக்கு அவள் வேறு கோபித்துக் கொண்டு விட்டாள்' என்று என்ன வெல்லாமோ, சிந்தனை மொய்த்துத் தூக்கத்தை வருவித்துவிட்டது.

ஆனால் சாவித்திரிக்குத் தூக்கம் வரவில்லை. 'அவர் என்ன எழுதிக்கொண்டிருந்தாரோ? நான் அதற்கு இடையூறாகப்போய் நின்றேனே. அவருக்கு என்மேல் கோபம் வராமல் எப்படியிருக்கமுடியும்?' என்று சிந்தனை செய்யலானாள். அவர் என்ன எழுதிக்கொண்டிருந்தார் என்பதை அறிய அவளுள்ளத்தில் தீவிர ஆவல் உதித்தது. 'பார்ப்பது தப்பல்லவா?' என்றது ஒரு மனம். நீ பார்ப்பதில் எவ்வித தப்பும் இல்லை என்றது இன்னொரு மனம். கடைசியில் ஆசையை அடக்கமாட்டாதவளாய் எழுந்து, மெதுவாக அடிமேலடி எடுத்துவைத்து ரகுராமனது அறையை அடைந்தாள். கதவைச் சார்த்திக்கொண்டு 'லைட்' போட்டுக்கொண்டு மேஜையினருகில் சென்றாள். மேஜையின்மீது ஆசிரியர் கதையுலகம் என்ற விலாஸமிடப்பட்ட ஒரு கவர் இருந்தது. அதன் பக்கத்தில் பிள்ளையார் சுழியும் தலைப்பும் கொடுக்கப்பட்ட காகிதம் கிடந்தது. பக்கத்திலேயே கதையுலகத்தின் முதல் மாதத்து இதழ் கிடந்தது. அதன் மேலட்டையிலேயே 'இதென்ன பைத்தியக்காரத்தனம்?' என்ற ரகுராமனது கதை அடுத்த இதழில் என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதை யெல்லாம் பார்த்தபின், கடிதத்திற்குள் என்ன விஷயம் இருக்கிறது என்பதைக்காண ஆவல் உதித்தது அவளுக்கு. பார்த்ததும் 'நாம்தானே இக்கதையைஎழுதவிடாமல் அடித்தோம்! நம்மால் எவ்வளவு ஜனங்கள் ஏமாற்றமடைவார்கள். அவரது கதையில் வாசகர்கள் உயிரை வைத்திருக்கிறார்களே! நாமல்லவா, அவர்களது ஏமாற்றத்திற்குக் காரணமாகிறோம்! என்ற கவலை அவளை வாட்டியது. 'என்னால்தான் அவர் தம் வாக்கைக் காப்பாற்ற முடியாத நிலையில் இருக்கிறார், அந்தோ! நானென்ன

அசட்டுக்காரியம் செய்துவிட்டேன்?' எனப் பொருமினாள். அப்படியே நாற்காலியில் சாய்ந்தும் விட்டாள் அவள்.

'ரகுராமன், மாலை சீக்கிரம் வீடு வந்து, சந்தியா வந்தனத்தை முடித்துக்கொண்டது, சாப்பாட்டை ஏதோ கொறித்து விட்டுத், தன்னறைக்குச் சென்று எழுத உட்கார்ந்தது, குழந்தை உள்ளே நுழைந்தது, அதை எடுத்துச் சமையலறையில் அவன் கொண்டுபோய் விட்டது, தான் கணவரைக் குறை கூறிப் பேசினது' முதலிய எல்லாச் சம்பவங்களும் அவளது மனத்திரையில் எழுந்தன.

'நடந்தது நடந்துவிட்டது. பார்ப்போம், கடவுள் என்ன வழி விடுகிறார் என்று' மனத்தைத் திடப் படுத்திக்கொண்டு, எழுத உட்கார்ந்தாள், சாவித்திரி. கிட்டத் தட்ட இரண்டுமணி நேரம் பிடித்தது. ஆறுபக்கம் கதையெழுதி முடித்த பிறகு, உரையினின்றும் கடிதத்தை எடுத்துவிட்டு, தான்எழுதிய கதையைச் சரியாக மடித்து உரையில் போட்டாள்.

'கணவரிடம் போய் இப்பொழுதே சொல்வோமே' என்று படுக்கையறையை அடைந்தாள். ரகுராமன் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தான். 'எழுப்புவது உசிதமில்லை. காலையில் எழுந்ததும் சொல்வோமே' என்று தீர்மானித்துக்கொண்டு, தன் படுக்கையில் படுத்துக் கொண்டாள். 'பரிக்ஷை முடிந்துவிட்டது. இனி நிம்மதியாகக்—கவலையற்றுத் தூங்கலாம்?' என்றெண்ணித் தூங்க முயற்சிசெய்யும் மாணவனைப்போலத் தூங்க முயன்றாள். ஆனால் வெகுநேரம்வரை தூக்கம்வரவில்லை. பொழுது புலரும் சமயம் அவளுடைய கண்ணிமைகள் மூடின.

காலையில் சாவித்திரி எழுந்திருக்குமுன்னரே, ரகுராமன் எழுந்து படுக்கையைக் கட்டி வண்டி கொண்டுவருமாறு ஆளுக்கு உத்தரவு இட்டான். வண்டி வந்ததும், அவனுடைய சாமான்கள் வண்டியில் ஏற்றப்பட்டன. வேலையாளிடம் ஆசிரியர் கடிதத்தைத் தபாலில் சேர்க்கச் சொல்லிவிட்டு வண்டியில் ஏறி உட்கார்ந்தான். சாவித்திரியும் விழித்துக்கொண்டு, கணவனிடம் இரவு நடந்த சம்பவத்தைச் சொல்ல வாசற்படிக்கு வந்தாள். அவள் சொல்ல வாய் எடுக்குமுன்பே, 'ஒரு வாரத்திற்கெல்லாம் வந்துவிடுகிறேன்' என்று கூறி ரகுராமன் வண்டியை ஓட்டச்சொன்னான். வண்டியும் நகர்ந்துவிட்டது. சாவித்திரியின் மனத்திலேயே அவ்விஷயங்களும் தங்கிவிட்டன.

ஃ ஃ ஃ

ஒரு வாரம் சென்றது. ரகுராமன் மாலை வண்டியில் வரப்போகிறான் என்பதையறிந்து நானும், சுந்தரமும் ஸ்டேஷனுக்குப்போனோம். ரகுராமன் வண்டியிலிருந்து இறங்கினான். சுந்தரம் அவன் அருகில் சென்று 'ஏண்டா ரகு, நீ எங்களுக்குச் சொல்லவே இல்லையே! இந்தத் தடவை உன் கதை உண்டோல்லியோ, போ, மற்ற எல்லாக் கதைகளையும் அதன் காலில் கட்டித்தான் அடிக்கவேண்டும்' என்றான்.


# ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

**மிக்க முன்னேற்றமடையும் லைப் ஆபீஸ்**

**இதில் இன்ஷ்யூர் செய்யுங்கள்.**

1943 டிஸம்பர் 31-ஆந் தேதி முடிய வருடத்தின் புதிய பாலிசிகள்
ரூ. 5 கோடிக்கதிகம்

ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி ....ரூ. 5,39,00,000
அமுலிலுள்ள மொத்த வியாபாரம் ....ரூ. 24,82,00,000

**இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில்**

## ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதவும்:—

மதராஸ் பிராஞ்சு:

**ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்,**

107, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி. மதராஸ்.

ரகுராமனின் முகம் வெளிறிவிட்டது. 'கதை வராமலிருந்தால் ஜனங்கள் அவதூறு செய்வார்கள்தான். ஆனாலும் ஆப்த நண்பர்கள்கூட இப்படிப் பரிகசிப்பார்கள் என்று நான் கனவிலும் கருதவில்லை' என்று தனக்குள் கூறிக்கொண்டு வண்டியிலேறி அமர்ந்தான். தன் நண்பர்களிடமும் அவன் சுமுகமாகப் பேசக்கூடவில்லை.

வண்டி வீட்டு வாசலண்டை வந்தது. தன்னறைக்குள் சென்று தொப்பியை மேஜைமீது வைத்தான். பிறகு கோட்டைக் கழற்ற ஆரம்பித்தான்.

மேஜைமீது 'கதையுலகம்' பத்திரிகையின் புது இதழ் கிடந்தது. கோட்டைப் பாதி கழற்றியவண்ணமே அதைப் பிரித்துப்பார்த்தான். 'தன் கடிதம் அப்படியே வெளிவந்திருக்கிறதோ' என்று பார்க்கவேண்டுமென்ற ஆசை அவனுக்கு. அட்டவணையில் 'இதென்ன பைத்தியக்காரத்தனம் — ரகுராமன் என்று போடப்பட்டிருந்தது. ரகுராமனுக்கு ஆச்சரியமும் அவநம்பிக்கையும் தாங்கவில்லை. 'தனது கடிதம் பிரசுரிக்கப்பட்டிருக்குமோ' என எண்ணிக் குறித்த பக்கத்தைத்திறந்தான். கதையின் தலைப்பிற்குக்கீழ்'இவ்வளவு அழகிய ருசிகரமான கதை இன்றுவரை வெளிவந்ததில்லை' என்ற ஆசிரியர் குறிப்பும் காணப்பட்டது. ஒருவாரத்திற்குமுன் தன் அறைக்குள் நடந்த சம்பவங்களைக், கவர்ச்சி மிகுந்த முறையில், மிக ரஸமாகச் சித்திரித்துக் காட்டப்பட்டிருந்தது. கதையின் ஆரம்பமே அருமையாயிருந்தது—'இதென்ன பைத்தியக் காரத்தனம்! இன்று எட்டு அடித்துப் பத்து நிமிஷம் ஆறு ஸெகண்டிற்கெல்லாம் கதை எழுத உட்கார்ந்தேன். ஆனால் கதை எழுத ஓடவே இல்லை. கதை யென்பது மனைவியா, கூப்பிட்டதும் ஓடிவந்து சொன்னது சொன்னபடி கேட்பதற்கு? மனைவியின்பேரில் அதிகாரம் செலுத்துவதுபோலக் கதையின் ஓட்டத்திலும், நடையிலும் நாம் அதிகாரம் செலுத்த முடியுமா?...... கதை ஓட ஆரம்பித்துவிட்டால் அப்புறம் பிடிப்பது யார்......?'

ரகுராமன் வெகு வேகமாகக் கதையைப் படித்துக்கொண்டிருந்தான். பக்கங்களும் தானே புரண்டு கொடுத்தன. கதை ஒரு சிருங்கார ரஸக் கவிதையுடன் முடிவுற்றிருந்தது. இக்கவிதையை ஒருநாள் ரகுராமன் தன் மனைவிக்குச் சொல்லியிருந்தான். அக்கவிதை அவளுக்கு மனப்பாடம் ஆகியிருந்தது. சிற்சில சமயம் அக்கவிதையைக் கொண்டு, தன் கணவனைப் பரிகசிப்பாள், அவள். இருவரும் கவிதையை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு சிரிப்பார்கள்.

ரகுராமனுக்கு, இக்கவிதையைக் கண்டதும் ஆனந்தம் தாங்கவில்லை. மகிழ்ச்சியில் துள்ளி எழுந்து, கோட்டைப் பாதி கழற்றினதும், கழற்றாததுமாகப் போட்டுக்கொண்டு, கையில் 'கதையுலகம்' பத்திரிகையைத் தூக்கிக் கொண்டு சமையலறைக்குள் ஓடினான்.

சாவித்திரி ஏதோ கையலுவலாகஇருந்தாள். ரகுராமனைக் கண்டதும் பரபரப்புடன்எழுந்து நின்றாள், ரகுராமனின் கையில் 'கதை உலக'த்தைப் பார்த்ததும் அவளுக்குச் சிரிப்பு உதட்டில் வந்து நின்றது. அடக்கிக் கொண்டு விட்டாள்.

'ஏன் இந்தக்கதை நீதானே எழுதினே? நீ இவ்வளவு அழகா இந்தமாதிரிக் கதை எழுதுவேன்னு நான்கனவிலும் நினைத்ததில்லை. பட்டிக்காடாயிருந்தாலும் நீ கெட்டிக்காரிதான். என்பேரை—மரியாதையைக் காப்பாத்தினயே' என்று அவளது முகவாய்க் கட்டையை நிமிர்த்தினான், ரகுராமன். சாவித்திரியின் உதட்டில் வந்து நின்ற சிரிப்பு நீரருவியைப்போலக் 'கலகல' வெனச் சப்தித்துக் கொண்டு வெளிவந்தது. ரகுராமன் ஆனந்த சாகரத்தில் மூழ்கி அவளது வதனத்தில் ஒரு முத்திரை வைத்துவிட்டான். சாவித்திரி பொய்க் கோபத்தை வரவழைத்துக்கொண்டு 'இதென்ன பைத்தியக்காரத்தனம்?' என்றாள்.

---


## திருப்தி நிச்சயம்

★

நாகரிகம் வாய்ந்த நவீன கலர்களில் சாயத்திற்கும் உறுதிக்கும் உழைக்கக்கூடிய கொள்ளேகாலம் முறுக்குப் பட்டில் எங்களுக்கென்றே ஸ்பெஷலாகத் தயாராகி வரும் 19, 18, 16, 12 முழங்களில் சேலைகளும் பலவூர் புதுமாதிரியான நூல் சேலைகளும் நவீன பார்டர்களுடன் எப்பொழுதும் விலை நயமாகக் கிடைக்கும்.

★

# V. N. சுப்பிரமணிய அய்யர்

ஜவுளி வியாபாரம் "மணி பவனம்"

பெரிய தெரு : கும்பகோணம்

பிராஞ்சு:- 227, ராஜவீதி, கோயமுத்தூர்.

# இதென்ன உலகம்!

மொழிபெயர்ப்பு—கிருத்திவாஸ்

இலா சந்திர ஜோஷி ஹிந்தியில் எழுதியது

16

ராஜுவின்பேரில் எனக்குக் கோபம் கோபமாக வந்தது. டாக்டரின் இவ்விபரீதக் கெட்ட நிலையை என்னால் தாள முடியவில்லை. 'வாருங்கள், டாக்டர். உள்ளே போவோம். இங்கு நின்றுகொண்டு என்ன செய்யப்போகிறீர்கள்? உங்களுடன் சில விஷயங்கள் பேச வேண்டியிருக்கிறது' என்று துணிவுடன் அழைத்தேன். புத்தித் தடுமாற்றத்தில் டாக்டர் கையைப் பிடிக்கப் போனவள், நல்ல வேளை, சமாளித்துக்கொண்டேன்.

என் வார்த்தைகளைக் கேட்டு ராஜு பிரமிப்புடன், வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். உள்ளூற நான் அரண்டிருந்த பொழுதிலும், மேலுக்குத் தைரியமாக, அவனை ஒருவித வெறுப்புடன் நோக்கினேன்.

டாக்டர் என்னுடன் நகரலானார். ராஜு பின் நின்று எங்களிருவரையும் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். சிறிது தூரம் சென்ற பின் திரும்பி, 'ராஜு, நீ வரவில்லையா?' என்று வினவினேன், நான்.

அவன். 'இதோ வருகிறேன். நீ போ' என்று கூறி 'வராண்டா'வில் உலாவலானான்.

டாக்டரை எனதறைக்குள் அழைத்துச் சென்று சாய்வு நாற்காலியொன்றில் உட்காரும்படி சொன்னேன். அவர் உட்கார்ந்தபின், படுப்பதற்கும் உட்காருவதற்குமுள்ள இடைநிலையில் நான் ஒரு 'கோச்' மீது அமர்ந்தேன். 'ஒரு புருஷனுக்கு எதிரில் இம்மாதிரி உட்காருவது மரியாதைக்குகந்ததாக ஆகாது' என்பதை நன்கறிவேன். ஆயினும், எனது சரீர அமைப்பின் லாவண்யத்தையும், லலித கதியையும் கண்ணுற்ற பின், டாக்டர், நல்லொழுக்கம்—தீயவொழுக்கம் என்ற வித்தியாஸத்தை மறந்துவிடுவார்.' என்ற நம்பிக்கை. ஒவ்வொரு பெண்ணின் உள்ளத்திலும் ஆண்களை எப்படியாவது மோகிக்கச்செய்துவிடவேண்டும் என்ற அவா குடிகொண்டிருக்கும். ஆணைத் தன் மோக வலையில் சிக்க வைப்பதன் பொருட்டு, அநாகரிகத்தின் எல்லையை மீறவும் அவர்கள் தயங்கார்கள் என்பதை நான் சொல்லியா தெரிந்துகொள்ளவேண்டும்?

நாணமற்ற புன்முறுவலை முகத்தில் வரவழைத்துக்கொண்டு, 'டாக்டர். எனக்கு வைத்தியம் செய்யமாட்டீர்களா?' என்று வினவினேன்.

டாக்டர் என்னைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார். என் கேள்வி அவரது மோகத்தைப் பங்கப்படுத்தி விட்டது. ஒன்றுமே புரியாமல் 'என்ன வைத்தியமா? யாருக்கு? ஆமாம் ஆமாம். மறந்துபோய்விட்டேனே நீங்கள் நான் சொன்னபடி 'டெம்பரேச்சர்' எடுத்துப் பார்த்தீர்களோ?' என்றார்.

அவரது இப்பதட்டத்தைக் கண்டு புன்முறுவலுடன், 'எடுத்துப் பார்த்தேன். 97°க்குக் கிட்டத்தட்டத்தானிருக்கிறது. சில தினங்கள் பகலில் 'நார்மலா'க இருக்கிறது. காலைவேளையில் நார்மலாக இருப்பதே இல்லை. குறையத்தான் குறைகிறது' என்றேன்.

டாக்டர் வருத்தம் தோய்ந்த பார்வையில் கூறலானார்—'இது சரியல்ல. பெண்களின் 'நார்மல் டெம்பரேச்சர்' ஆண்களைக் காட்டிலும் அதிகமாகத்தானிருப்பது வழக்கம். நீங்கள் 97°க்குக் குறைவாயிருக்கிறது என்று சொல்கிறீர்களே. 'எனீமியா'வின் காரணமாக ரத்தம் குறைந்து, சரீரத்தில் உஷ்ணம் குறைவது உண்டு. அதனால் உள்ளூர உங்களுக்கு ஏதோ வியாதிகண்டிருக்கிறது எனத் தோன்றுகிறது. ஒரு லேடி டாக்டரைக் கூப்பிட்டுக் காண்பியுங்கள்.'

'லேடி டாக்டர் வியாதியைக் கண்டுபிடித்து சரிவரச் சிகித்ஸை செய்துவிடுவாள் என்று எண்ணுகிறீர்களா?'

என் கேள்வியில் புதிர் ஒன்று மறைந்திருந்தது. டாக்டர் அந்த இரகஸியத்தை அறியமாட்டாதவராய்' 'ஏன் மாட்டாள்?' என்றார்.

'எனக்கு நம்பிக்கை ஏற்படமாட்டேன் என்கிறது' என்றேன்.

'அப்படியானால்? என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? உங்களது சரீரக் கோளாற்றை நான் எப்படி அறிவது?'

'ரப்பர் குழாயைச் சரீரம் பூராவும் வைத்துப் பார்த்து, மனிதனது அஸௌக்கியத்தை அறிந்துகொள்ளமுடியும் என்றா நினைக்கிறீர்கள்? கேவலம் சரீரவியாதி மட்டும் தான் வியாதியா?'

'மானஸிகக் கோளாற்றைப்பற்றியும் 'மெடிகல் ஸயன்ஸ்' என்பது ஆராய்கிறது. மானஸிகக் கோளாற்றைப்பற்றி அதிகமாக ஆராய்வதுதான் 'ஸைகோபதி' என்பது. மனிதன் ஏன் பித்தனாகிறான். செய்யத்தகாத காரியத்தை ஒரு சக்தியின் குருட்டுப் போக்கில்செய்துவிட்டுப் பின்னர் ஏன் பச்சாத்தாபப்படுகிறான். நளன், யுதிஷ்டிரர் போன்ற சாத்வீக குணம்

படைத்தவர்கள் சூதாட்டத்தில் மூழ்கித் தம் நாசத்தைத் தேடிக் கொண்டனரே, அது ஏன்? ரூஸோ, டால்ஸ்டாய் போன்ற பெரியார்கள் நீசத் தொழிலில் ஏன் இறங்கினர்? பொது நோக்கம் படைத்த மகாத்மாகாந்தியின் அந்தக் காரணத்தில் பலவீனம் குடிகொண்டிருப்பது ஏன்? விசேஷ ஸ்வபாவம் வாய்ந்த சில ஆண் பெண்களிடத்தில் கொலையோ தற்கொலையோ செய்து கொள்ளும் அவா உதிக்கிறதே, அது ஏன்' என்பது போன்ற விஷயங்களை அறிந்து கொள்ள 'ஸைகோபதி' அல்லது 'ஸைகிரட்ரி'க் கல்விதான் உபயோகப் படுகிறது. உள்ளம் மூளை இவைகளிலுள்ள சூக்ஷ்ம கோஷங்களில் பலஹீனம் ஏற்பட்டு விடுமாகில், ஸ்வபாவத்தில் ஏற்றத் தாழ்வு உதித்துவிடுகிறது. இந்த ஏற்றத் தாழ்வின் காரணமாகச் செய்யத்தகாத காரியத்தைச் செய்து மனிதன் மூளையைக்குழப்பி விடுகிறான்'

17

எந்த எண்ணத்துடன் இக்கேள்வியை நான் கேட்டேன்? என்ன விசித்திர பதில் கிடைத்தது, பார்த்தீர்களா! டாக்டர்களின் இந்த அசட்டுப் புத்தியை என்னவென்றுரைப்பது? நான் பேசவாயெடுக்க ஆரம்பிக்கும் பொழுது, ராஜு, தன் சுருண்ட கறுத்த கேசங்களின் சோபையைக் காட்டிக்கொண்டும், அழகிய, அமைதி நிலவிய கம்பீரமான கண்களின் சொல்லுதற்கரிய ஒளியைப் பரப்பிக் கொண்டும், என்னையும் டாக்டரையும் பிரமிக்கச் செய்துகொண்டும், உள்ளே நுழைந்தான். சாதாரண உருவமும் அறிவும் படைத்த சகோதரனைக் கண்டாலே சகோதரிகள் கர்வத்தால் பூரிப்பர்! ராஜுவைப் போன்ற நுண்ணறிவு வாய்ந்த சகோதரனைப் பெற்ற எனது மகிழ்ச்சிக்குக் கங்குகரை கிடையாது என்பதைச் சொல்லவா வேண்டும்?

என் தலையை மறைத்திருந்த துணி நழுவிக் கழுத்தில் விழுந்திருந்தது. டாக்டரிடம் இம்மாதிரி உட்கார்ந்திருக்கும் பொழுது என்னுள்ளத்தில் வெட்கமோ, நாணமோ உதிக்கவில்லை. ஆனால் சொந்தத்தம்பி ராஜுவைப் பார்த்ததும் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து 'புர்கா' (முகத்தை மறைக்கும் துணி) வைச் சரிசெய்துகொண்டேன். தமிழில் ஒரு பழமொழிகூட உண்டு. 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுவென்றிருக்கும்' என்று. 'அந்த அறையில் அன்னிய புருஷனை டாக்டருடன் தனிமையில் அதுவும் நான் உட்கார்ந்திருக்கும் நிலையில் உட்கார்ந்து நான் சல்லாபித்துக் கொண்டிருப்பதைக் கண்டு ராஜு என்ன நினைப்பான்' என்ற யோசனையில் ஆழ்ந்து சலசலத்தேன். என்னை இந்நிலையில் கண்டு, ராஜுவின் முகம் வெட்கத்தினால் சிவந்து வெளுத்தது போன்ற உணர்ச்சி என் உள்ளத்தில், எழுந்தது. சிறிது சிறிதாக


# சைபால்

**CIBOL**

(வெளி உபயோகத்திற்கு)

—முகப்பரு, சொறிசிரங்கு, வேனில்கட்டி,— பித்தவெடிப்பு, தீப்பட்டபுண், சேத்துப்புண், கரப்பான், படை, புழுக்கடி முதலிய தோல் சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளுக்கும் — சிறந்தது. —

எரிச்சல் கிடையாது —

— துணிகளில் கறை பிடிக்காது

— நறுமணம் உள்ளது —

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள்:—

**THE SOUTH INDIAN MFG. COY.**

**44, DHANAPPA MUDALY ST.**

**MADURA**

என்னுள்ளத்து மகிழ்ச்சியை விரட்டி விட்டு, அச்சம்தன் அதிகாரத்தைச் செலுத்தலாயிற்று.

டாக்டர் தம் வரட்டுச் சிரிப்புடன் அவனை வரவேற்றுக் கூறினர் 'வாருங்கள், உட்காருங்கள். மானஸீகக் கோளாற்றைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். சரீரக் கோளாறு காரணமாகத்தான் மானஸீகக் கோளாறு ஏற்படுகிறது, என்று நான் சொல்லிக்கொண்டிருந்தேன்.'

'எதைப்பற்றிப் பேசுகிறோம்' என்பதைக் கேட்பதற்கு முன்பே டாக்டர் பறந்துகொண்டு கூறினர். இதிலிருந்து அவரது உள்ளத்திலும் பரபரப்பும் கலவரமும் குடிகொண்டுள்ளன என்பது தெரியவந்தது.

ராஜு நாற்காலியில் அமர்ந்தான். 'மகாத்மா காந்தி மனே பலவீனத்தைத் தம் வாழ்க்கை பூராவிலும் எதிர்த்துப் போராடுகிருர். ரூஸோவும் டால்ஸ்டாயும் சாத்வீக குணம் வாய்ந்தவர்களாயிருந்தும், நீசக்காரியங்கள் புரிந்தனர். இம்மாதிரியான மனே வியாதிகளுக்குகெல்லாம் 'மெடிகல் ஸயன்ஸ்' காரணம் கூறுகிறது என்று டாக்டர் சொல்லிக்கொண்டிருக்கிருர்' என்றேன் நான்.

என் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ராஜுவின் கண்களில் எப்பொழுதும் போல அன்பு மிளிர்ந்துகொண்டிருக்கவில்லை, என் மனத்தில் அவனது இந்தப் பாவம் புண்ணுண்டாக்கியது. என் பேச்சு முடிந்ததும் என்புறமிருந்து முகத்தைத் திருப்பிக்கொண்டு குறும்புப் புன்முறுவலுடன் டாக்டரின் இதயத்தைத் துளைக்கும் சொல்லம்பை விடுத்தான். 'இப்பவே ஒரு 'மிக்ஸர்' அல்லது 'டானிக்' 'பிரிஸ்கிரைப்' செய்து சாபர்மதி ஆசிரமத்திற்கு அனுப்பிவிடுங்கள். மகாத்மாஜியின் உள்ளமும் மூளையும் சரியாகிவிடுமாகில் அவரது ஸ்வபாவத்தில் இயற்கையும் ஒற்றுமையும் மிளிரும். அவரது ஸ்வபாத்திலுள்ள ஏற்றத் தாழ்வை வைத்தியச் சிகித்ஸையின் உதவியைக்கொண்டு குணப்படுத்திவிடுவீர்களாகில் உலகிற்கு நன்மையாயிருக்கும்.'

'உங்களுக்கு 'ஸைகோஸதி'யில் நம்பிக்கை சிறிதும் இல்லையா?' என்று கடுகடுப்புடன் வினவினர், டாக்டர்.

'நம்பிக்கையா! அடராமா! கடவுளிடமோ, அல்லது இயற்கைக் கூற்றுக்களினிடமோ நம்பிக்கையிருந்தால் அல்லவா, வைத்திய சாஸ்திரத்தில் நம்பிக்கை உண்டா இல்லையா என்றுரைப்பதற்கு? ஆனல் உங்களிடம் எனக்குப் பூர்ண நம்பிக்கையிருக்கிறது.'

'இன்ன மருந்தை உபயோகிப்பதனுல் இன்ன வியாதி குணமடைகிறது என்பதில் கூடவா உங்களுக்கு நம்பிக்கையில்லை' என்று கேட்டார் டாக்டர், சினத்துடன்.

'முதலில் உங்களுக்கு நம்பிக்கையிருக்கிறதா? தங்கள் மருந்தை அருந்தி எவ்வளவு நோயாளிகள் குணமடைந்தனர்? டாக்டர் படிப்பு என்பது ஒரு சந்தேகமற்ற நிச்சயக் கல்விதானு அல்லது ஊக சாஸ்திரமா? இயற்கையின் நிச்சயமான குறிப்பிட்ட நியமங்களுடன் அதற்கு ஏதாகிலும் தொடர்புண்டா? மெய்யாக மறைக்காமல் கூறுங்கள்' என்ருன் ராஜு திடமனத்துடன்.

டாக்டர் பதில்சொல்ல இயலாமல் விழித்தார். இருந்தாலும் தம் தோல்வியை ஒத்துக்கொள்ள மனமின்றி 'சம்பந்தமில்லாமல் என்ன? இயற்கையுடன் சம்பந்தமில்லாமல் அது எப்படி யிருக்கமுடியும்' என்று பகட்டிற்காக வினவினர்.

அவரது வீண் பிடிவாதத்தைக்கண்டு ராஜு புன்முறுவலுடன் இனிமையாக 'நல்லது டாக்டர், இயற்கை நியமங்களை அனுசரிப்பதுதான் உங்களது வித்தை என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். வைத்திய சாஸ்திரம் நாகரிக சமூகத்தில் பிரசாரத்திற்கு வந்தது முதல் மனிதன் எவ்விதத்தில் முன்னேற்றமடைந்திருக்கிருன் என்பதைச் சொல்லுங்கள். டாக்டர் தொழில் முன்னேற்றமடைய—அடைய, மானிடசமூகத்தில் வியாதிகளும் முன்னேற்றமடைந்திருக்கின்றன என்பதைத்தான் நான் காண்கிறேன். இருபதாவது நூற்றுண்டில் புதுப்புது வியாதிகள் உற்பத்தியாகி மானிட சமூகத்தை மரண தேவதையின் வாயில்தள்ளி வருகின்றன. அதைத் தடுக்க இந்த டாக்டர்களால் முடியவில்லை. நாகரிகம் பெருகப்பெருக டாக்டர்களும் பெருகுகின்றனர். இங்கிலாந்தில் இப்பொழுது 25000 டாக்டர்களுக்குமேலிருக்கின்றனர். இவர்கள் இங்கிலாந்திற்கு என்ன நன்மையை அளித்திருக்கின்றனர்? அவ்விடத்து ஜனங்களுக்கு வயது அதிகரித்திருக்கிறதா? அல்லது வியாதிகள் குறைந்திருக்கின்றனவா? சொல்லுங்களேன்' என்று கேட்டான்.

'டாக்டர்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதால் நோய்கள் அதிகமாக ஜனங்களைத் துன்புறுத்துகிறதில்லை. இந்தியாவில் பாருங்கள். ஜனங்களுக்கு டாக்டர்கள் பேரிலேயே நம்பிக்கை உதிப்பதில்லை. டாக்டர்களுக்கும் ஒருவித ஊக்கம், உத்ஸாகம் கிட்டுவதில்லை. அதனல் நல்ல யௌவனத்திலேயே கணக்கற்ற ஆண் பெண்கள் மரணதேவதைக்கிரையாகின்றனர்' என்ருர் டாக்டர்.

அவரது இச் சொற்களைக் கேட்டுப் பரிகாசமாகக் கனைத்துக்கொண்டு, 'ஆமாம். மேல் நாட்டுக் குடிகள் நல்ல யௌவன தசையில் இறப்பதில்லை' என்பதை நிரூபிக்க முடியுமா உங்களால்? நல்ல யௌவன தசையில் மேல்நாட்டு ஜனங்கள், சிக்கி உழலும் நோயை, நம் நாட்டார் கனவில்கூட கண்டதில்லை. மாமிஸம், மது, மாயாவியான யுவதிகள் இவர்களின்

ஸத்சங்கத்தினால் அவர்கள் பெறும் ஆனந்தத்தை நம் நாட்டு மக்கள் அனுபவித்ததில்லை தான். அவ்விடத்து வாலிபர்கள் இந்த வெறுக்கத்தக்க சிற்றின்பங்களை நுகர்ந்து, இருபது வயது ஆவதற்கு முன்பே, 'காலிக்' 'கேன்ஸர்' 'ஹெமரேஜ்' 'அபென்டிஸிடீஸ்' 'வெள்ளைக் குஷ்டம்' முதலிய வியாதிகளினால் பிடிக்கப்படுகின்றனர். அவ்விடத்து யுவதிகள்படும் கஷ்டத்தைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை. இவ்வளவிருந்தும்அவ்விடத்துமாந்தர்கள்வாழ்க்கையை ஆனந்த மயமாக்குவதில் முனைந்திருக்கின்றனர். நம்நாட்டு மக்கள் வாழ்வை, என்ன காரணமோ தெரியவில்லை, வெறுக்கின்றனர். டாக்டர் படிப்பு வியாதிகளைப் போக்கும் வன்மை வாய்ந்ததாயிருந்தால், அவ்விடத்து மாந்தர்களை நோயினின்றும் தப்புவிக்க ஏன் முயலவில்லை? மனித சமூகம் குருடு. ஸ்வதந்திர புத்தியற்றது. பிறரைப் பின்புற்றுவது. இயற்கையின் மாபெரும் இரகஸியத்திலிருந்து சிதறிக் கிடக்கும் ஒரு அணுவைக் கண்டெடுத்தபின் பூரிப்புறுகிறது. உலகஇரகசியத்தையே அறிந்து கொண்டுவிட்டதாக எண்ணி மகிழ்வுறுகிறது. வியாதியின் வெளியுருவத்தைப் பார்த்து டாக்டர்கள் விதவிதமான மருந்தைக் கண்டு பிடித்துவிட்டனர். ஒரு மருந்தை அருந்துவதனால் ஏற்படும் கெடுதலை மற்றொரு மருந்தினால் நீக்குவதற்கு முயலுகின்றனர். நோயாளி, வியாதி குணமடைந்து வருகிறது, குணமடைந்து வருகிறது என்று கருதுகிறான். டாக்டர் சிகித்ஸை ரொம்ப வேடிக்கையானது தான் என்பதில் சந்தேகமில்லை' என்றான்.

## 18

டாக்டரும் நானும் அவனது பேச்சை ஸ்வாரஸ்யமாக ரஸித்துக் கொண்டிருந்தோம். இதற்குப் பதில் டாக்டரது வாயினின்றும் எழவேயில்லை. சிறிது நேரம் சென்றதும் கைக்குட்டையினால் முகத்தைத் துடைத்துக் கொண்டு கூறலானான்—'டாக்டர்கள் மனிதனது ஆரோக்கியத்தை விருத்தி செய்வதற்கென உதிக்கவில்லை. வியாதிகளை அடக்குவதற்குத்தான் பிறந்திருக்கிறார்கள். வியாதியுடன்தான் அவர்களுக்குத் தொடர்பிருக்கிறது. மெடிகல் காலேஜ்களில் வியாதியைப் பற்றித் தான் பயிலுகிறார்கள். ஆரோக்கியத்தைப் பற்றியல்ல. இன்னும் என்னவெனில் ஜீவ ஜந்துக்களில் வியாதி அணுக்களைப் புகுத்தி, புதுப் புது வியாதிகளை ஆராய்கிறார்கள். இந்த மாதிரி நிலையில், ஆரோக்கியத்தைப்பற்றிய சிந்தனையே அவர்களுடைய மூளையில் எழுவதில்லை. ஆரோக்கியத்தைப் பின்னணியில் நிறுத்தி உயிருள்ள மனிதனைப் பரீக்ஷிக்காமல் இறந்த சவத்தைப் பரீக்ஷித்து அறிந்துகொள்ளும் படிப்பு என்ன படிப்பு! மனிதன் பிறவியிலிருந்தே தெரிந்தோ தெரியாமலோ வியாதி, மரணம் இவைகளின் பக்கம்தான் முன்னேறிச் செல்லுகிறான். மனித வாழ்க்கையே மரணம் என்ற க்ஷேத்திராடனத்திற்கெனத்தான் ஏற்பட்டது என்று கூறுவோமாகில் அது அனுசிதமாக ஆகாது. மனிதன் ஏன் பிறக்கிறான், ஏன் இறக்கிறான்: ஏன் அவனது உடல் நசிக்கக்கூடியதாயிருக்கிறது, ஏன் நோய், வியாதி என்ற பீடையில் சிக்கி மடிகிறான், ஆரோக்கியம் என்பது பெயரளவுக்காக மட்டும் ஏனிருக்கிறது, என்பவை போன்றவை சிக்கறுக்கமுடியாத பிரச்னைகளாயிருக்கின்றன. இதைக் கண்டு பிடிப்பது மனிதனின் சக்திக்கு மீறியதாயிருக்கிறது. இம்மாதிரி நிலையில் டாக்டர்களின் பொய்க் கௌரவமும் கெட்டிக்காரத்தனமும் பொறுக்கமுடிவதில்லை. இந்த டாக்டர் தொழில் உலகிலிருந்து மறைந்துவிடுமாகில் முன் காலத்துப் பழைய மானிடர்கள் போலவே நோய்வாயில் அதிகமாகச் சிக்காமல் மனிதன் அமைதியுடன் சாவான்.'

அவனது பேச்சு நின்றபின் சிறிது நேரம் அறையில் அமைதி நிலவியிருந்தது. திடீரென டாக்டர் அவனது முதுகைத் தட்டிக்கொடுத்துக்கொண்டு'பேஷ் பேஷ், நல்ல லெக்சர் இது; இவ்வளவு சிறு வயதிலேயே பிறப்பு—இறப்பு என்ற பிரச்னையில் மூழ்கிவிட்டீர்களே! இது நல்லதுதான். ஆனால் நாங்கள் என்ன செய்வது? இதுதானே எங்கள் தொழில். யார் செத்தென்ன? யார் இருந்தென்ன? எல்லாம் இப்பாவி வயிற்றிற்குத்தானே! டாக்டர் தொழில் எவ்வளவு மோசமாயிருந்தபோதிலும் எங்களுக்குக் கல்ப விருக்ஷத்தைப்போன்றது. ஆமாம், தயவுசெய்து இரண்டு வேளை சாப்பாட்டிற்கும் நீங்கள் ஏற்பாடு செய்ய முன் வருவீர்களாகில் இத்தொழிலை இந்த க்ஷணமே விட்டுவிடுகிறேன்' என்றார்.

டாக்டரின் இச்சிறு வேடிக்கைப் பேச்சைக் கேட்டதும் ராஜு தன் ஏளனப் பேச்சை மூட்டை கட்டி வைத்துவிட்டு, 'ஏன் ஸார், அப்படியானால் நீங்கள் தனியாகத்தானிருக்கிறீர்களா? தம்பதிகளிருவரும் 'டைவோர்ஸை'ப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறீர்களா, அதற்கு?' என்றான் வேடிக்கையாக.

'இல்லை. ஸார், எனக்கு மனைவியிருந்தால் தானே, டைவோர்ஸை'ப்பற்றி யோசிப்பதற்கு? நான் தனி. ஒருவித சுமையும் என்மீது இல்லை. என்னைப்பற்றிமட்டும் கவலை எடுத்துக்கொண்டால் போதும். உங்களுக்குச் சம்மதம் தானே!'

டாக்டருக்குக் கிட்டத்தட்ட முப்பத்து இரண்டு வயதிருக்கும். 'அவருக்கு இன்னும் கலியாணமாகவில்லையா, அல்லது மனைவி மரித்துவிட்டாளா' என்பதையறிந்துகொள்ள உள்ளூர அவா. ஆனால் அறிந்துகொள்வது எப்படி? ஆனால் ராஜுவிற்கும், டாக்டருக்குமிடையே ஏற்பட்டுக்கொண்டிருந்த துவேஷ

பாவம் மறைவதைக் கண்டு என் மனத்துள் அலாதி மகிழ்ச்சி உதித்துக்கொண்டிருந்தது.

‘எங்கள் வீட்டிற்குக்கூட ஒரு (Family Doctor) குடும்ப வைத்தியர் தேவை, உங்களுக்கு இஷ்டமானால் தாராளமாய் வரலாம்’ என்றான் ராஜா.

டாக்டருக்கு வியப்பு ஏற்பட்டது போலும், ‘ஏன் ஸார், உங்களுக்குத் தான் டாக்டர்கள் மேல் நம்பிக்கையில்லையே. எதற்காகக் குடும்ப வைத்தியர் வேண்டும் என்கிறீர்கள், இவ்வளவு நேரம் தர்க்கம் செய்துவிட்டு?’ என்றுகேட்டார்.

‘பெண்களுக்கு இவ்விஷயத்தை எப்படிப் புரிய வைப்பது? பெண்களுக்கெல்லாம் நீங்கள்தான் காப்புக் கடவுள். நீங்கள் வரத்தயாராயிருக்கிறீர்கள் என்பதை அம்மா கேட்டால் வெகு மகிழ்ச்சியுறுவாள்’ என்றான் ராஜா.

என்னால் பேசாமலிருக்க முடியவில்லை, ‘அம்மா மட்டுமில்லை. நானும் ‘நீங்கள் இங்கேயே இருங்கள்’ என்றுதான் வேண்டுகிறேன்’ என்றேன்.

எனது இவ்வார்த்தைகள் சம்பந்தா சம்பந்தமற்றனவாகவும் சமயோசிதமற்றனவாகவும், கெடுதலாகவும் இருந்தன. இவ்வார்த்தைகளைக் கூறியதும் வெட்கத்தினால்எனது சரீரம் வெடவெடத்தது. தலை குனிந்தேன். ராஜாவை நிமிர்ந்துபார்க்கும் துணிவு எனக்கு உண்டாகவில்லை.

சிறிதுநேரம் மௌனம் சாதித்திருந்த பின், ‘வாருங்கள் டாக்டர், உலாவப்போய் வருவோம். இப்படி உட்கார்ந்து உட்கார்ந்து மனம் சலித்துவிட்டது. ‘பார்க்’கில் சற்றுக் காற்று வாங்கியபின் ‘சௌக்’ பக்கம் உலாவிவிட்டுத் திரும்பி வருவோம்’ என்றான் ராஜா.

‘நல்லது’ என்றார் டாக்டர் புளகத்துடன். ராஜாவுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுவதைக் கண்டு புளகமுற்றார் போலும்.

‘நானும் வரட்டுமா?’ என்றேன் நான்.

ஒரு பதிலும் கூறாமல், கூர்ந்த பார்வையில் என்னை ஒரு நிமிஷ நேரம் உற்று நோக்கிவிட்டு, கார் டிரைவரை அழைத்துவரச் சென்றான் ராஜா.

(முதல் பாகம் முற்றிற்று.)


# இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **“இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்”**

**வடக்கு பீச் ரோடு :: மதராஸ்**

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட் திருவல்லிக்கேணி மயிலாப்பூர்
தியாகராயநகர் புரசவாக்கம் மவுண்டு ரோடு

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன

| | | | |
|---|---|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ... | ... | ரூ. 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | .... | ... | ரூ. 33,32,951 |
| ரிஸர்வ் நிதி ... | ... | ... | ரூ. 32,00,000 |
| டிபாஸிட்டுகள் ... | ... | ... | ரூ. 9,48,49,465 |

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N.P.B.I.G. N. கோபால அய்யர், செக்ரடரி

# ஜீலிஸ்

ஏ. கே. பட்டுசாமி

உமாகாந்தன் கப்பலின் மேல் தளத்தில் நின்று தூரத்தில் தெரிந்த நிலப்பரப்பைக் கவனித்துக் கொண்டிருந்தான். அது சுமத்திராவுக்குச் சமீபத்திலுள்ள ஒரு மிகச் சிறிய தீவு. எங்கும் பசுமையான தாவரங்கள் செறிந்த காடுகளும், குளிர்ச்சியான நீர் நிலைகளும் நிறைந்த ரமணீயமான இடம். ஆங்காங்கே சிறிய குன்றுகளும், தெள்ளிய நீரோடைகளுமுண்டு. பிணியாளர்களுக்கு அத்தீவு ஒரு சுக வாஸஸ்தலமாக உபயோகிக்கப்படலாம். மன நிம்மதியற்றவர்களுக்கு, அத்தீவின் ஏகாந்தம் சாந்தியை நல்கும்.

உமாகாந்தனின் அழகிய சிறுகப்பல் அத்தீவை நோக்கி, கம்பீரமாக அன்னப் பறவை போல், நீலக் கடலின்மேல் நீந்திச் சென்று கொண்டிருந்தது. அப்போது காலை வேளை. இளங்கதிரின் ஒளியில் அலைகடலின் தோற்றம் கைலயங்கிரி யென்றும் வெள்ளிமலை யென்றும் கூறுவார்களே, அதுபோலிருந்தது. கப்பல் கரையை நெருங்க நெருங்க உமாகாந்தனின் மனதில் ஒருவித பரபரப்புண்டாயிற்று. ஏற்கனவே கிளர்ச்சி செய்துகொண்டிருந்த பழைய நினைவுகள், ஒன்றன் பின்னொன்றாகவும் துரிதமாகவும் சலனப் படம்போல் அவனது மனக்கண்முன் தோன்றத் தொடங்கின.

சுமார் இருபது வருடங்களுக்கு முற்பட்ட விஷயம். சமுத்திரத்தின் இதே தீரத்தில்தான். ஒரு வர்த்தகக் கப்பல் சுமத்திராவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அப்போது முதல் மஹாயுத்தம் நடந்துகொண்டிருந்த காலம். பகல் மூன்றுமணி யிருக்கும். கப்பலின் பிரயாணிகளில் சிலர் கீழ்த்தளத்தில் தங்களறையிலிருந்தனர். மற்றும் சிலர் மேல் தளத்தில் நின்றுவேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். திடீரென்று இடிமுழக்கம் போன்ற, காது செவிடு படும்படியான ஒரு பெருஞ் சப்தம். கப்பல் ஒரு உலுக்கு உலுக்கப்பட்டது. மேல் தளத்தில் ஓரத்தில் நின்றிருந்த சிலர் கடலில் தூக்கியெறியப் பட்டனர். எல்லோரும் பீதியடைந்தனர். கப்பற்றலைவன் மேல் தளத்திற்கு ஓடிவந்தான். "நமது கப்பல் பகைவனால் தாக்கப்படுகிறது. அடிப்பாகத்தில் பெரும் பிளவு கப்பல் மூழ்கிவிடுமென்பதில் சந்தேகமில்லை." என்றானவன்.

உயிர்காப்புப் படகுகள் இறக்கப்பட்டன. வயோதிகர்கள் அவற்றில் ஏற்றிக் கொள்ளப் பட்டனர். மற்றவர்கள், கைக்குக் கிடைத்த மரத்துண்டுகளையும் பலகைகளையும் பற்றிக் கொண்டு கடலில் குதித்தனர்.

அக்கப்பலில், விஷ்ணுகாந்தன் என்னும் ஒரு பெரிய வியாபாரியும் அவரது மகன் உமாகாந்தனும் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். விபத்தின்போது தந்தை கீழ்த்தளத்திலிருந்தார். அவரது கதி என்னவாயிற்றென்று ஒருவருக்கும் தெரியாது. உமாகாந்தன் ஒரு மரக்கட்டையைப் பிடித்துக்கொண்டு நீந்திச் செல்லலானான்.

சுமார் நான்கு மணி நேரம் இடைவிடாது நீந்தினான். அவனது கால்கள் வலிக்கத் தொடங்கின. உடல் உவர்நீரில் மரத்தது. களைப்பு மேலீட்டால் நினைவு தடுமாறியது. அவன் பிரக்ஞையை இழந்தான்.

மீண்டும் அவன் சுய நினைவு பெற்றுக் கண் விழித்தபோது, தான் அத்தீவின் கடற்கரையிலுள்ள ஒரு சிறு குடிசையில், புல்லும் தழையும் கொண்டு வேயப் பெற்ற ஒரு மிருதுவான படுக்கையில் கிடத்தப்பட்டிருப்பதையும் தன்னெதிரில் அப்ஸரஸ்திரீ போன்ற ஓர் அழகிய வனிதை உட்கார்ந்து, மரத்துப் போன தன் கால்களைத் தேய்த்துச்சூடுண்டாக்கிக் கொண்டிருப்பதையும் கண்டான்.

அத்திவ்ய சுந்தரியின் வயது பதினாறுக்கு மேற்படாது. அவளது இயற்கையழகை வர்ணித்தல் எளிதன்று. மாநிறம் என்பார்களே அது தான் அவளது மேனியின் நிறம். அவளது எழில் பூராவும் அவளது கருவிழிகளில் தான் நிரம்பியிருந்தது. முழு நிலவு போன்ற அவளது பிரகாசமான முக மண்டலத்திற்கு மேல், கரு மேகம் போன்ற அவளது கூந்தல், அலையலையாக வாரி, இரண்டாகப் பின்னப் பட்டு, அவளது மார்பின் இருபுறமும் கரும் பாம்புகள் போல் தொங்கவிடப்பட்டிருந்தது. அவளது உடம்பின் ஒவ்வொரு அங்கமும் அவற்றிற்குரிய அளவுப் பிரகாரமிருந்தது மன்றி உழைப்பின் பயனாகவும் சுகவாஸத்தின் பயனாகவும் நன்கு உரம்பெற்று அவளது வனப்பைப் பன்மடங்கு அதிகரித்துக் காட்டியது. அவள் தேகத்தை ஒரு தூய வெள்ளாடை அலங்கரித்தது.

அவள் அத்தீவின் சுதேசி வகுப்பைச் சேர்ந்தவள். அக்குடிசையில் தனியே வசித்து வந்தாள். அன்று மாலையில் வேடிக்கையாக ஒரு கட்டு மரத்திலேறி கடலில் சென்றுகொண்டிருக்கையில், உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த உமாகாந்தனைத் தற்செயலாகக் கண்டு, காப்பாற்றிக் கரை சேர்த்தாள். இவற்றை உமாகாந்தன் பின்னே தெரிந்துகொண்டான்.

உமாகாந்தனுக்கு வயது இருபதுதானிருக்கும். அழகு வாய்ந்த கட்டிளங்காளை. வசீகரமான முகம், ஆனால் அப்போது அவனுடம்பு களைத்துப் போயிருந்தது. அவன் தாகமாயிருக்கிறதென்று சைகை காண்பித்தான். அவள் தயாராக வைத்திருந்த ஆட்டுப்பாலை அவனுக்குப் பருகக்கொடுத்தாள். அவளது புன்னகை பூத்த அழகிய வதனமும், அருள் கனிந்த, கபடமற்ற பார்வையும் அவனை வசீகரித்தன. "நீயார்; இது எந்த இடம்?" என்று கேட்டான் அத்தமிழன். அவள், அவனுக்குப் புரியாத அவளது பாஷையில் ஏதோ கூறினாள். ஒருவர் பாஷையை ஒருவர் அறிந்துகொள்ள மாட்டாது விழித்தனர்.

நாட்கள் சில சென்றன. அவன் பூரண குணமடைந்தான். அவனது உடற் களைப்பு நீங்கிப் பலம் பெற்றான். அவன் குணமடையும் வரையில் அவள் அவனைத் தனியே விட்டகலவில்லை. ஒரு தாயைவிட அதிகமான அன்புடன் அவனைக் கவனித்தாள். அதன் பின்னர், தினந்தோறும் அவள், காலையில் அவனுக்கு மக்காச் சோள அடையும் ஆட்டுப்பாலும் அளித்துவிட்டு வெளியே சென்றுவிடுவாள். பிறகு மாலையில்தான் திரும்புவாள். வரும்போது அவள் ஆடுகளுக்குத் தழையும், அடுப்புக்கு விறகும், உணவுக்கு ஏதேனும் பண்டங்களும் கொணர்வாள்.

அது வரையில் அவன், கடலில் மூழ்கிய தன் தந்தையைப் பற்றியும், தன் தாய் நாடாகிய இந்தியாவுக்குத் தான் எப்படித் திரும்புவதென்பதைப் பற்றியும் ஆழ்ந்து யோசித்தவண்ணம் குடிசையினுள் படுத்துக்கிடப்பான்.

ஒரு தினம் அவன் அத்தீவைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினான். அத்தீவின் சுதேசிகள் யாவரும் அவனைச் சூழ்ந்துகொண்டு ஒரு அதிசயமிருகத்தைக்கண்டதுபோல் வேடிக்கை பார்த்தனர். சிலர் அவனை ஏதோ கேட்டனர். பாஷை புரியாததால் அவன் புன்னகையோடு தலையை அசைத்துக்கொண்டே ஒவ்வொரு இடமாகப் பார்த்து வரலானான். ஒரு மரத்தின்கீழ் கூட்டமாக நின்றிருந்த சிலர் கடற்கரையிலிருந்த அக்குடிசையைச் சுட்டிக்காட்டி ஏதோ பேசிக்கொண்டனர்.

நாட்கள் பல கழிந்தன. அவன் தினந்தோறும் கடற்கரையில் நின்றுகொண்டு அவ்வழியாகக் கப்பல் ஏதேனும் செல்லுகிறதாவென்று நோக்குவான். சில நாட்கள் அவனும் அவளுடன் சென்று ஆடுகளுக்குத் தழை சேகரிப்பதில் உதவி புரிவான். நாட்கள் செல்லச் செல்ல, தன்னைக் காப்பாற்றிக் கரைசேர்த்த அந்த வனிதையின்மேல் அவனுக்கு ஒருவித தெய்வீகமான பாசம் உதயமாகியது. அவள் தான் அவன்மீது எவ்வளவு அன்பு பாராட்டினாள்! அவள் கிடைத்ததற்கரிய பொக்கிஷம். குப்பையில் கிடந்தாலும் அவள் மாணிக்கம், அவள் அச் சுதேசிகளிடையில் வாழத் தகுந்தவளல்ல என அவன் நினைத்தான்.

மக்களின் தேசம் வேறுபடலாம், மக்களின் மதம் வேறுபடலாம்; அவர்களின் பாஷை வேறுபடலாம்; ஆனால் அவர்கள் மனதில் எழும் உணர்ச்சிகளுக்கு வேறுபாடு ஏது? வாயினால் பேசப்படும் பாஷையை ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ள முடியாதுபோனால் என்ன! அவர்களது கண்கள் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தங்கள் தங்கள் பாஷையில் சம்பாஷித்துக்கொண்டன. அவைகளில் பிரதிபலித்த மாசற்ற உணர்ச்சியின் அர்த்தத்தை அவர்கள் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டனர்.

அச்சிறு குடிசையில் உமாகாந்தன் அவளுடன் தன்வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தான்.

"ஜீலிஸ்!" என்றான் அவன்.

"உமா!" என்று பதிலுக்குக் கூப்பிட்டு அன்புடன் நோக்கினாள் அவள்.

"குடிசையைச் சுற்றி வேலிபோட வேண்டும்!" என்று பச்சைத் தமிழில் கூறிச் சைகை காட்டினான் அவன். அவள் புரிந்துகொண்டாள். அவள் அவனுக்கு உதவிபுரிந்தாள். இருவரும், சுற்றிலும் கழிகளை நாட்டி வேலி அமைத்தனர். தோட்டத்தில் புஷ்பச் செடிகளைப் பயிராக்கினர். சின்னாட்களில் வேலியின்மீது பச்சிளங்கொடி கவிந்து படர்ந்து அழகாகத் திகழ்ந்தது.

தினந்தோறும் அவளுடன் சோளக் கொல்லையைப் பண்படுத்தச் செல்வான். ஒழிந்த நேரங்களில் அவன் கயிற்றுக் கட்டில் பின்னுதல், மரப்பெட்டிசெய்தல் முதலிய வேலைகளில் ஈடுபடுவான். அவள் தனது பாஷையில் ஏதாவது பாடிக்கொண்டே வீட்டு வேலைகளைக் கவனிப்பாள். மாலை நேரங்களில் கடற்கரையில்சென்று குழந்தைகள்போல் விளையாடுவர். சில சமயம் கடலில் நீந்திக் களிப்பர். எத்தனையோ நாட்கள், நீரோடைகளில் அவன், கட்டுமரத்தில் அவளுடன் உல்லாசமாகச் சென்றதுண்டு. 'அவளுக்கு மட்டும் தமிழ் தெரிந்திருந்தால்!.........' என்று நினைத்துப் பெருமூச்செறிவான் அவன்.

மொத்தத்தில் அவர்களிருவரும் இணைபிரியாதவர்களாயினர். ஈருடலும் ஒருயிரும் எனலாம். அவர்களது காதல், கருணையினால் உதிக்கும் சாதாரண அன்பின் இனத்தைச் சேர்ந்ததன்று. ஆடம்பரமற்றதும் பரிசுத்தமானதுமான உண்மையான பிரேமை.

ஜீலிஸ் அரைக்கணமும் அவனைப் பிரிந்திருக்கமாட்டாள். ஒருதினம் அவள் ஏதோ வேலையாயிருந்தாள். அவனுக்குக் கடற்கரைக்குப் போகவேண்டும்போல் தோன்றியது. தனித்துச் சென்று ஒரு பாறைமீது உட்கார்ந்து தன் நாட்டைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தான். சிறிதுநேரம் சென்றது. திடீரென்று ஜீலிஸின் குரல்.

"உமா!"

அவன் திரும்பிப் பார்த்தான். அவள் ஏதோ கூறிக்கொண்டே ஓடிவந்தாள். அவளது கண்கள் சிவந்து நீர் நிரம்பியிருந்தன. அவளால் அவனது பிரிவைச் சகிக்க முடியவில்லை; அவனைத் தேடிக்கொண்டு வந்தாள் பேதை என்பதையறிந்துகொண்டான் உமாகாந்தன்.

ஒருநாள் மாலையில் குடிசைக்குத் திரும்புகையில் வழியில் ஒரு ஆலங்கன்று கிடைத்தது. உமாகாந்தன் அதைக் கொணர்ந்து, குடிசையின் முன்புறத் தோட்டத்தில் நட்டான். அதைத் தன் உயிரைப்போல் பாவித்து, தினந்தோறும் தண்ணீர் ஊற்றிப் பாதுகாத்தான். அவன் அச்செடியின்மீது கொண்டுள்ள அக்கறையைக் கண்டு, அதை வளர்ப்பதில் அவளும் பங்கெடுத்துக்கொண்டாள்.

ஃ ஃ ஃ

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. நான்கு வருடங்கள் கழிந்தன. ஆலங்கன்றுடன் அவர்களது அன்பும் வளர்ந்தது. இப்போது அக்கன்று ஒரு சிறு மரமாகத் திகழ்ந்தது. அதிசயிக்கத் தக்க விதமாய், அம்மரத்தின்கீழே ஒரு பூங்கொடி தானாக முளைத்துப் படர்ந்து மரத்தின் மீதேறி அதைப் பின்னிப் பிணைத்துக்கொண்டது. உமாகாந்தன், "ஜீலிஸ், நான்தான் இந்த மரம்! நீதான் இந்தக் கொடி! கடவுளின் செயலைப் பார்த்தாயா?" என்றான். அவளது முகம் பிரகாசமடைந்தது.

உமாகாந்தன் கொஞ்சங் கொஞ்சமாக அவளது பாஷையைப் புரிந்துகொள்ளத் தொடங்கினான். அதுபோன்றே அவளுக்கும் அவனது தமிழ்ப் பாஷையைப் புரிந்துகொள்ளும் சக்தியுண்டாகியது. உமாகாந்தன் அச்சிறு ஆலமரத்தின்மீது, கத்தியினால், தமிழில் தங்கள் இருவர் பெயரையும் செதுக்கினான்.

ஃ ஃ ஃ

மனிதனுக்கு இவ்வுலகின் மீதிருக்கும் பற்றுதலை அதிகரித்து, இவ்வுலக பாசங்களிலிருந்து அவன் விடுபடா வண்ணம் அவற்றுடன் அவனை இறுக்கிப் பிணைத்து ஆசைகாட்டி மயக்கும் மாயா தேவியின் சூழ்ச்சிப்படி, ஜீலிஸ் உமாகாந்தனின் பெயர் விளங்க ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானாள். உமாகாந்தன் பூரித்துப்போனான். அச்சிறு மதலை, தன் கண்களைச் சிமிட்டிப் பரக்க விழித்து அவனை நோக்கியபோது அவன் மெய்ம்மறந்தான். அத்தகைய அழகிய தொரு ஜீவனைத் தனக்குத் தந்த ஜீலிஸின்மீது அவனுக்கிருந்த பிரேமை பன்மடங்கு அதிகரித்தது. அந்தக் கண்கள், அந்தக் குறுகுறுத்த பார்வை! எல்லாம் அப்படியே ஜீலிஸினுடையவைதாம். அவன் அக் குழந்தைக்குத் தன் தந்தையின் பெயராகிய விஷ்ணுகாந்தன் என்னும் நாமத்தைச் சூட்டினான். ஆலமரத்தின்மீது மூன்றாவதாக அப்பெயரையும் செதுக்கினான்.

இப்படியே மேலும் ஒரு ஆண்டு கழிந்தது. உலகத்தில் சுகமுண்டாயின் கட்டாயம் துக்கமும் உண்டு. ஒருவன் எப்பொழுதும் சுகத்தையோ அல்லது துக்கத்தையே நிரந்தரமாக அனுபவித்துக்கொண்டிருக்க முடியாது. இது இயற்கைத் தெய்வத்தின் ஆணை. ஜீலிஸ் சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து, சுற்றத்தாரால் வளர்க்கப்பட்டவள். அறிவு தெரிந்து தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளும் பக்குவ நிலையை அடைந்ததும் தனிமையில் வசிக்கத் தொடங்கினாள். இருண்டு கிடந்த அவளது வாழ்க்கையில் பிரகாசமான தீப ஒளிபோல், உமாகாந்தன், இடையே தோன்றினான். ஜீலிஸ் தனது அன்பெனும் எண்ணெய் கொண்டு, அத்தீபம் அணையா வண்ணம் பாதுகாத்து வந்தாள். இப்போது விதியெனும் சூறாவளிக் காற்று, கைகொட்டி நகைத்து அத்தீபத்தை அணைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டது.

விஷ்ணுகாந்தனுக்கு ஒருவயது நிரம்பியது. அவனது மழலைச் சொற்களும், கபடமற்ற புன்னகையும், விளையாட்டுக்களும் அவர்களை இன்பக் கடலில் ஆழ்த்தின. வஸந்தகாலத்தில் ஒருநாள் திடீரென்று குழந்தைக்குக் காய்ச்சல் கண்டது. இருவரும் கவலையுற்றனர். ஜீலிஸ், குழந்தையின் படுக்கையை விட்டு அகலவில்லை. உமாகாந்தன், வீட்டு வேலைகளையெல்லாம் தன்னந்தனியாகக் கவனித்தான். மாலையில் சோளக் கொல்லையை நோக்கிப் புறப்பட்டான்.

தற்செயலாக அவனது கண்கள் கடற்பரப்பை நோக்கின. அவனது ஹிருதயம் ஒருகணம் தன் பணியை நிறுத்தியது. அவன் கண்டதென்ன! அதோ தூரத்தில் கடலுக்கு மேல் ஆகாயத்தில் கரு நிறத்துடன் புகைப் படலம் போல் சுருள் சுருளாகக் காணப்படுவது யாது? ஒருவேளை ஏதேனும் புகைக் கப்பல் அத்தீவை நோக்கி வருகிறதா! தனக்கு அத்தீவாந்தர வாசத்தினின்றும் விடுதலை கிடைக்கப் போகிறதா? திரும்பவும் தன் மனிதர்களைப் பார்க்க முடியுமா?.........சிறிது நேரம் நின்று கவனித்தான். இப்போது, சமுத்திரத்தில் சுமார் இரண்டு மைல்களுக் கப்பால் ஒரு கப்பலின் கொடிமரம் கண்ணுக்குப் புலப்பட்டது.

அவனுக்கு இன்னது செய்வதென்று புரியவில்லை. ஒருவேளை அக்கப்பல் அத்தீவுக்கு வராமல் அப்படியே போய்விட்டால்!............ அவனது ஹிருதயம் ஆவல் மிகுதியினால் வேகமாக அடித்துக்கொண்டது.

பின்னும் சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தான். அக்கப்பல் அங்கேயே காணப்பட்டது. நகர்வதாகவே தெரியவில்லை. ஒருவேளை அது கப்பல் அல்லவோ! தான் காண்பது வெறும் பிரமையோ என்றுகூட தோன்றியது.

ஓடிச் சென்று தனது கட்டுமரத்தை இழுத்து வந்து தண்ணீரில் தள்ளினான். தன்னால் முடிந்தவரையில் தன் முழுச் சாமர்த்தியத்தையும் பிரயோகித்துத் தன் குறியை நோக்கி வேகமாகச் செலுத்திக்கொண்டு சென்றான். கொஞ்சதூரம் சென்றவுடன் அப்பொருள் நன்றாகப் புலப்பட்டது. அங்கே ஒரு கப்பல் நங்கூரம் பாய்ச்சப்பட்டதுபோல் நிலையாக மிதந்துகொண்டிருந்தது. அவனது உற்சாகம் அதிகரித்தது. அதன் அருகில் செல்லச்செல்ல அதன் மேல் தளத்தில் மனிதர்கள் நின்றிருப்பது நன்றாகத் தெரிந்தது.

சிறிது நேரத்தில் அவன் கப்பலை நெருங்கிவிட்டான். மேல்தளத்திலிருந்தவர்கள் அவனைக் கவனித்தனர். அவர்களிலொருவர் தமிழில் "நீ யார்!" என்றார். அப்பப்பா! தாய்ப் பாஷையைக் காதால் கேட்டு எவ்வளவு காலமாகியது!

உமாகாந்தன் பதிலுக்கு, "இந்தக் கப்பல் எங்கே செல்கிறது!" என்று கேட்டான். "இந்தியாவுக்கு" என்றான் அம்மனிதன். இதற்குள் கப்பற்றலைவன் மேல்தளத்திற்கு வந்தான். உமாகாந்தன் அவனுக்கு வந்தனமளித்தான்.

கப்பலிலிருந்து ஓர் ஏணி இறக்கப்பட்டது. உமாகாந்தன் அதன் வழியாக ஏறிக் கப்பலை அடைந்தான். அவனது கிழிந்த ஆடையையும் தோற்றத்தையும், கண்டு, அவன் தமிழன் என்பதையும் அறிந்த அவர்கள் ஆச்சரியமடைந்தனர்.

தலைவன் அவனை விசாரித்தான். அவன் நான்கு வருடங்களுக்குமுன் நிகழ்ந்த கப்பல் விபத்தைப்பற்றிச் சுருக்கமாகக்கூறி அதுமுதல் தான் அத்தீவில் வசித்து வருவதாகக் கூறினான். ஆனால் ஏனோ அவர்களிடம் ஜீவிஸைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை.

கப்பற்றலைவன் அவனை இந்திய நாட்டிற்கு ஏற்றிச்செல்லச் சம்மதித்தான். ஜீவிஸ் பாவம்! தன் பிரிவால் என்ன சங்கடப்படுவாள்? தான் சோளக் கொல்லைக்குச் சென்றிருப்பதாகவும், ஸூர்யாஸ்தமனத்திற்குள் திரும்பிவிடுவானென்றுமல்லவா அவள் நினைத்துக்கொண்டிருக்கிறாள்! நோயுற்றிருக்கும் குழந்தை விஷ்ணுவையும் அவளையும் விட்டுவிட்டு அவன் மாத்திரம் எப்படிப்போக முடியும்!

அவர்களையும் அழைத்து வந்துவிடவேண்டுமென்ற எண்ணத்துடன், "நான் அத்தீவுவரையில் போய்விட்டுச் சீக்கிரமாகத் திரும்பி வந்துவிடுகிறேன். கொஞ்சம் பொறுப்பீர்களா? என்று கேட்டான் அவன்.

கப்பற்றலைவன் சம்மதிக்கவில்லை. "எங்களுக்கு அதிக அவகாசமில்லை. ஏற்கனவே ஒரு நாள் தாமதமாகிவிட்டது. இடையில், கப்பலை இயக்கும் இயந்திரத்திலேற்பட்ட கோளாற்றினால் இவ்விடத்தில் நங்கூரம் பாய்ச்சிப் பழுது பார்த்துக் கொண்டிருந்தோம். அது சரியாகிவிட்டது. கப்பல் புறப்படப்போகிறது. நீ வருவதானால் உடன் வரலாம். இல்லாவிட்டால் இறங்கிவிடு." என்றானவன்.

உமாகாந்தனின் மனம் வேதனை யடைந்தது. ஒருபுறம் தன் தாய் நாடும் தன் மனிதர்களும் மறுபுறம் தன் அருமை மனைவியும் பச்சிளங் குழந்தையும்! எதை விடுவது? எதைத் தியாகம் செய்வது! இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் தாய்நாடு திரும்ப மறுசந்தர்ப்பம் வாய்க்காமலே போகலாம். ஆனால் பாவம் ஜீவிஸ்! அபலை, அவளுடைய ஏமாற்றமடைந்த, துயரம் நிரம்பிய முகம் அவன் மனக் கண்முன் தோன்றியது. செய்வகை யறியாது திகைத்தான்.

"என்ன, சீக்கிரம் சொல்! வருகிறாயா இறங்கப் போகிறாயா!" என்றான் கப்பற்றலைவன்.

"வருகிறேன்." என்றான் உமாகாந்தன் தன்னையுமறியாது. கப்பல் புறப்பட்டது. இனியொன்றும் செய்வதற்கில்லை.

ஃ ஃ ஃ

உமாகாந்தான் தன் சொந்த நாட்டை யடைந்தான். ஒரு காலத்தில் மிகுந்த செல்வத்தில் திளைத்துக்கொண்டிருந்த அவனது குடும்பம், அவனது தந்தையின் மறைவிற்குப் பிறகு க்ஷீணதசையை யடைந்து வறுமையால் வருந்திக்கொண்டிருந்தது. அவனது வயோதிகத் தாய் அவன் வரவு கண்டு மகிழ்ந்தாள். அவளிடம் தன் சரிதம் பூராவையும் கூறி அழுதான்.

நாடு திரும்பியபின், தன் குடும்பச் செல்வத்தின் உதவியால் திரும்பவும், ஒரு தனிக் கப்பலில் அத்தீவுக்குச்சென்று ஜீவிஸை அழைத்துக்கொண்டு வந்துவிட வேண்டுமென்று கோட்டை கட்டிக்கொண்டிருந்த அவனது எண்ணத்தில் மண்விழுந்தது. அவனது ஆசை — கனவு — பகற்கனவாகியது. விதியரக்கன் வெற்றிபெற்றான்.

உமாகாந்தன், தெரிந்த மனிதர் ஒருவரின் உதவிபெற்று, பிழைப்பிற்காக ஒரு சிறிய வியாபாரத்தைத்துவக்கினான். ஜீவிஸின் நினைவு அவன் மனதில் புகைந்துகொண்டிருந்தது. வெளிப் பார்வைக்கு அவன் வர்த்தகம் செய்துகொண்டு ஒரு மனிதனாக உலாவினானேயொழிய, உயிர் நிலையாகிய ;அவளின்றி அவனுக்கு வாழ்க்கையில் இன்பம் ஏது?

காலப் பறவை தன் சிறகுகளை வேகமாக அடித்துப் பறந்து பதினைந்து ஆண்டுகளைக் கடந்தது. உமாகாந்தனின் வியாபாரம் விருத்தியடைந்தது. ஐச்வரிய லக்ஷ்மி அவனைத் தனது கடைக் கண்களால் நோக்கினாள். பட்டுப்போன மரம் உயிர்பெற்றுத் தளிர்த்ததென்னும்படி, வறுமை யொழிந்து மீண்டும் அவன் ஒரு மனிதனானான்.

"கடவுளே! இவ்வளவு காலத்திற்குப் பிறகு எனக்கு மீண்டும் பொருட் செல்வத்தை அளித்தாய். இது போன்றே, கிடைத்தற்கரிய செல்வமாகிய—என் உயிர் நிலை போன்ற என் ஜீவிஸை மீண்டும் எனக்களிப்பாயா?" என்று வேண்டியது அவன் மனம். இப்போது அவனிடம் போதிய அளவுக்குப் பொருளிருந்தது. ஒரு கப்பலை அமர்த்திக்கொண்டு புறப்பட்டான்.

உமாகாந்தன் பெருமூச்சு விட்டான். இதோ கப்பல் அத்தீவின் கரைக்கு வெகு சமீபத்தில் வந்து விட்டது. இன்னும் சிறிது நேரத்தில் அவன் தனது ஹிருதயக் கோயிலில் வீற்றிருக்கும் தெய்வத்தை நேரில் தெரிசிக்கமுடியும். அவள் இப்போது எப்படி இருப்பாள்! தன் மகன் விஷ்ணுகாந்தன் ஒரு அழகிய வாலிபனுக இருப்பானல்லவா! அவள் தன்னைப் பற்றி என்ன நினைப்பாள்! அவளிடம் தான் என்ன கூறுவது! தன்னை அவள் ஏற்றுக் கொள்வாளா!

ஃ ஃ ஃ

உமா காந்தன் கப்பலை விட்டிறங்கிக் கரையை அடைந்தான். அவனது கண்கள் பரபரப்புடன் குடிசையிருந்த இடத்தைத் தேடின. என்ன ஏமாற்றம்! குடிசையைக் காணவில்லை. அவன் தலையில் பேரிடி விழுந்தது போலிருந்தது. ஆனல் அதோ அவர்கள் வளர்த்த ஆல விருக்ஷம். அது பெரிதாக வளர்ந்து தழைத்திருந்தது.

அவன் அம்மரத்தருகே சென்றுன். மரத்தின் கிளைகள் காற்றில் அசைந்தாடி வரவேற்றன. மரத்தின் மேல் அவன் செதுக்கிய பெயர்கள் மூன்றும் மரத்தின் வளர்ச்சியால் இப்போது பெரிதாகவும் ஆழமாகவும் காணப்பட்டன.

அக்குடிசை, அதைச் சுற்றியமைக்கப்பட்டிருந்த வேலி, பூந்தோட்டம், எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போயின. அங்கு முட்செடிகளும் புதர்களும் முளைத்திருந்தன. அதோ கடற்கரையில் அவர்கள்தினந்தோறும் மாலையில் உல்லாஸமாகக் குழந்தை விஷ்ணுவுடன் உட்காரும் கற்பாறை, அதோ அவர்களது சோளக்கொல்லை இருந்த இடம், எல்லாம் வெறும்வெளி. முன்னெருகாலத்தில் சோபையோடு மிளிர்ந்த இடங்களெல்லாம் இப்போது சூன்யமாக—ஸ்மசான பூமியைப் போல் தோற்றமளித்தன,

அவன் ஏமாற்றமடைந்தான். துக்கத்தினுல் அவனது ஹ்ருதயம் கனத்தது. அவள் என்னவானுள்! ஒருவேளை கடலில் விழுந்து உயிர் விட்டாளா!

பித்துப் பிடித்தவன் போல் சிறிது தூரம் நடந்தான். தூரத்தில் சிலர் வயலில் வேலை செய்து கொண்டிருந்தனர். அவர்களுடைய முகங்கள் அவனுக்குப் புதியனவாயிருந்தன. அவர்களிடம் ஜீவிஸைப்பற்றி விசாரிப்பது பயனற்றதென்று அவனுக்குத் தோன்றியது. அவ்விடத்திற்குச் சிறிது அப்பால் ஒரு சிறிய, அழகிய வீடு தென்பட்டது. அவன் அத்தீவில் வாழ்ந்த நாட்களில் அவ்விடம் வெறுவெளியாயிருந்தது. அவன் அத்தீவை விட்டுச் சென்ற பிறகே அதுகட்டப்பட்டிருக்கவேண்டும்.

அவன் அவ்வீட்டை நெருங்கினுன். முன்புறத் தோட்டத்தில் ஒரு மனிதர் நின்று கொண்டிருந்தார். அவருக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். தோற்றத்திலிருந்து அவர் அத்தீவின் சுதேசியல்லவென்று நன்கு புலனுகியது. அவர் உமாகாந்தனைக் கண்டதும் "தாங்கள் யார்?" என்று தமிழில் வினவினர். உமா காந்தன், 'நானும் ஒரு தமிழன்தான்" என்றுன்.

அவர் அவனை வீட்டிற்குள் அழைத்துச் சென்றுர். வீடு தமிழ் நாட்டு மாதிரியில் கட்டப்பட்டிருந்தது. அவருக்கு நான்கு குழந்தைகள். மூத்த பிள்ளைக்கு வயது பத்து. உமா காந்தன், "தாங்கள் இங்கே குடி வந்து எவ்வளவு காலமாகிறது? இத்தீவில் தனியே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் இங்கு வந்து பதின்மூன்று வருடங்களாகின்றன. சுகவாஸத்தின் பொருட்டு வந்தேன். நான் தமிழ் நாட்டில் திருநெல்லையைச் சேர்ந்தவன். வெகு காலமாக இருதய சம்பந்தமான ஒரு கொடிய வியாதியினுல் வருந்திக் கொண்டிருந்தேன். வைத்தியர்கள் கைவிட்டனர். ஆனுல்ஒருவர்மாத்திரம்காடுகள் நிறைந்ததும், கடற்கரையை அடுத்ததும், ஏகாந்தமானதுமான ஓர் இடத்திற்கு எனது வாஸஸ்தலத்தை மாற்றிக்கொண்டால் என் வியாதி குணமாகலாம் என்றுர். நான் இங்கு வசிப்பதன் காரணம் இது தான். இத்தீவு என்னை அகால மரணத்தினின்றும் காப்பாற்றியது." என்றுர்.

உமா: தாங்கள் இங்கு வந்த போது, அதோ தெரிகிறதே, அந்த ஆல மரத்தருகில் ஒரு குடிசை இருக்கக் கண்டிருப்பீர்களே!

அவர்: ஆம், கண்டிருக்கிறேன். உங்களுக்கெப்படித்தெரியும்? இதற்கு முன் தாங்கள் இங்கு வந்ததுண்டா?

உமாகாந்தனுடைய ஆவல் அதிகரிக்கிறது, "அக்குடிசையில் ஒரு அழகிய பெண், ஜீவிஸ் என்று பெயர். அவள் என்னவானுளென்று தெரியுமா?"

அவர் சொல்லலுற்றுர். "ஆம்,ஜீவிஸ் பாவம்! அவளது காதலன் உமாகாந்தன். நான் அவர்களைப்பற்றி எல்லாம்கேள்விப்பட்டேன்.கடின ஹிருதயம் படைத்த மானிடப் பேயென்று அவனைக் கூறலாம். அவள் அவன் மீது அளவு கடந்த பிரேமை கொண்டிருந்தாள். அதற்குக் கைம்மாருக அந்நயவஞ்சகன் அவளைத்தவிக்க விட்டு ஓடிவிட்டான். அவன் போனபின்

அவள் துடியாய்த் துடித்தாள். அன்ன ஆகாரமின்றி நோய்வாய்ப்பட்டிருந்த இளங்குழந்தையையும் கவனியாது அவனைத் தீவுமுழுதும் தேடித்திரிந்தாள். கவனிப்பாரற்றது அக்குழந்தை கதறி அழுது மாண்டது.........

உமாகாந்தன் பெருமூச்சு விட்டான். அவனது கண்கள் கலங்கின. அவர் தொடர்ந்தார்.

"சிலர், அவன் மறைந்த தினத்தன்று, கடலில் ஒருகப்பல் நின்று கொண்டிருந்ததாகவும், உமாகாந்தன் ஒரு கட்டு மரத்தில் சென்றதைக் கண்டதாகவும் கூறினர். அவளடைந்த துயரத்தை மனிதனால் வர்ணிக்கமுடியாது.

"நான் முதன் முதல் இங்கு வந்தபோது, நான் வந்த கப்பலைக் கண்டு, உமாகாந்தன் தான் திரும்பி வந்து விட்டானென்று நினைத்து அவள் ஏமாந்து போய் விட்டாள். ஆனால் பாவம் இன்னும் அவள், அவன் திரும்பி வருவானென்ற நம்பிக்கையைவிடவில்லை!

உமா: என்ன! அப்படியானால் அவள் இப்போது எங்கே இருக்கிறாள்!

அம்மனிதரின் முகத்தில் சந்தேகக் குறி தோன்றியது. அவர் "தாங்கள் யாரென்பதைக் கூறவில்லையே!" என்று கேட்டார்.

உமா: நான்தான் அந்தத் துரோகி உமாகாந்தன்!

அப்பெரியவர் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப் போனார். சிறிது ஆலோசித்தார். உமாகாந்தனால் அவரது மௌனத்தைச் சகிக்க முடியவில்லை. அவர் மேலும் கூறலானார்.

"வெகுநாள் வரையில் தன் காதலன் திரும்பி வருவானென்றே அவள் நம்பியிருந்தாள். உமாகாந்தன் சென்ற மறு வருடமே ஒரு தமிழன் இத்தீவுக்கு வந்தான். அவன் ஜீலிஸின் அழகில் தன் மனதைப் பறிகொடுத்தான். இங்குள்ள சுதேசிகளிடம் கூறி அவளைத் தனக்கு மணம் செய்துவைக்கும்படி கேட்டுக்கொண்டான். எவ்வளவு கூறியும் அவள் கேட்கவில்லை. அவளது வாழ்க்கையே இருண்டுகிடந்தது. ஒரு வருட விடாமுயற்சியின் பயனாய்ப் பலவந்தத்தின்மேல் ஜீலிஸ் ஒருவாறு இணங்கினாள்.

"அவன் அவளை மணந்தான். அவள்மீது மட்டற்ற பிரியத்துடனிருந்தான். ஆனால் அவள் நடைப்பிணம்போலவே இருந்தாள். சிலகாலத்திற்குப்பின் அவன் அவளுடன் இத்தீவைவிட்டுக் கப்பலேறிச் சென்றுவிட்டான். அவர்கள் எங்கே சென்றார்களென்பது எனக்குத் தெரியாது."

உமாகாந்தனின் கண்கள் இருண்டன. அவ்வீட்டின் தரை அவன் உட்கார்ந்திருந்த நாற்காலியுடன் அப்படியே கிடுகிடு என்று ஆடுவதுபோலிருந்தது. அவனது உடல் வியர்த்தது. இனி இவ்வுலகில் ஜீலிஸைக் காண்பதென்பது நடவாத காரியம். அவன் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்! அவளுடன் வாழ்வதற்கு அவன் அருகனல்ல. கடவுளுடைய சித்தம் அது. எல்லாம் அவனது வாழ்க்கை நாடகத்தில் ஒரு பகுதி. எங்கோ இருந்தவனை எங்கோ கொண்டு சேர்த்து ஆசைகாட்டி, மீண்டும் பிரித்து மனமுறிவையுண்டாக்கி வேடிக்கை பார்க்கிறான் ஆண்டவன்!

இப்படியாக அவன் மனம் எண்ணியது. அவனது நிலைமையைக் கண்ட அம்மனிதர் பரிதபித்தார்.

அவரது உத்தரவின்படி அவரது மனைவி இருவருக்கும் சிற்றுண்டி கொணர்ந்தாள். அவளுக்குச் சுமார் நாற்பது வயதிருக்கும். சிற்றுண்டியை அவர்களெதிரே வைத்துவிட்டு அவள் ஒருகணம் உமாகாந்தனை உற்று நோக்கினாள். உமாகாந்தன் விசனத்தில் குனிந்த தலை நிமிரவில்லை. அதற்குள் அம்மனிதர் அவளை நோக்கி, "அதோ குழந்தை அழுகிறான் போய்ப் பார்!" என்று கூறி அனுப்பிவிட்டார்.

உமாகாந்தன் தன் முன் வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டியை நோக்கினான். ஒரு தட்டில் சோள அடையும், ஒரு கிண்ணத்தில் ஆட்டுப் பாலும்! மீண்டும் ஜீலிஸின் நினைவு! அவள் கையினால் எத்தனை நாட்கள் அவள் அவனுக்குச் சோள அடை சுட்டுக்கொடுத்திருக்கிறாள்!

அவன், தனக்குப் பசியில்லையென்று கூறி, மரியாதைக்காகப் பாலை மாத்திரம் அருந்திவிட்டு அங்கிருந்து புறப்பட்டுக் கப்பலை நோக்கிச் சென்றான். தூரத்தில் யாரோ நகைப்பது போலிருந்தது. திரும்பிப் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. ஒருவேளை விதி அசுரன் தான் அவனைக் கண்டு நகைத்தான் போலும்!

அவன்மாத்திரம், சிற்றுண்டிகொணர்ந்தஅம்மனிதருடைய மனைவியின் முகத்தை நிமிர்ந்து பார்த்திருந்தால், அவன் தனது ஜீலிஸ்தானென்பதைக் கண்டுகொண்டிருப்பான். அவன் சென்ற பிறகு அம்மனிதர், "நல்ல காலம். உமாகாந்தன் ஜீலிஸை நிமிர்ந்து பார்க்கவில்லை. அவளை மணந்த தமிழன் நான்தானென்பதை மாத்திரம் அவனிடம் கூறாது மறைத்துவிட்டேன், பாவம்! ஏமாற்றிவிட்டேன்!" என்று கூறிக்கொண்டார்.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.